**தண்டலம் நாராயண குமாரஸ்வாமி** (1907-1982), சென்னையில் இலக்கிய பாரம்பரியம் கொண்ட குடும்பத்தில் தோன்றி, ஆனந்த விகடன், கலைமகள், கல்கி போன்ற பிரபல இதழ்களில் பல அரிய சிறுகதைகளையும் நாவல்களையும் படைத்துள்ளார். 1930களில், அவருடைய சிறுகதைப் படைப்புக்களான 'ராமராயன் கோயில்', 'வைணிகர்' 'ஹீசைலம்' போன்றவை விகடனில் பரிசு பெற்றன.

1936 முதல் 1980 வரை வங்க மொழியிலிருந்து பல பிரபல வங்க எழுத்தாளர்களின் படைப்புக்கள் பலவற்றை தமிழ் உலகுக்கு அறிமுகம் செய்தார். சாந்திநிகேதனில் குருதேவர் ரவீந்திரரோடு சில காலம் இருந்ததோடு,இலக்கிய அன்பர் என்ற முறையில் 1962-ல் ருஷியாவுக்குச் சென்று வந்தார்.

த.நா.கு. சிறுகதை இலக்கியத்தின் சிற்பிகளில் ஒருவராக 1936 முதல் திகழ்ந்து, ரவீந்திரநாத் தாகூர் நூல்களின் தமிழாக்கத்தின் மூலம், மொழி பெயர்ப்பு உலகில் தனக்கென ஒரு தனி இடத்தை அமைத்துக் கொண்டவர்.

**த.கு. அஸ்வின்குமார்** த.நா.குமாரஸ்வாமியின் புதல்வர். ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். அமுதசுரபி, மஞ்சரி போன்ற இதழ்களில் பல சிறுகதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவருடைய நூலான 'சிந்தனை செயல் சாதனை' 1987 ஆம் ஆண்டுக்கான, தமிழ் நாடு அரசின் முதல் பரிசினைப் பெற்றது. இந்திய ஒலிபரப்புப் பணியைச் சார்ந்த இவர் தொலைக்காட்சி, மற்றும் வானொலி நிகழ்ச்சி ஆக்கத்தில் இருபது ஆண்டுகளுக்கு மேலான அனுபவம் பெற்றவர். தற்பொழுது சென்னை வானொலியில் உதவி நிலைய இயக்குனராகப் பணிபுரிகிறார்.

Tha. Naa. Kumaraswami (Tamil) Rs.25.
ISBN 81-260-0583-1

22 மொழிகளிலும் நூல்கள் வெளியிடும் சாகித்திய அக்காதெமி
உலகிலேயே மிகப்பெரிய வெளியீட்டகம்

# த. நா. குமாரஸ்வாமி

த.கு. அஸ்வின்குமார்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

த.நா.குமாரஸ்வாமி

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னைமாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழேஅமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுனகொண்டா மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# த. நா. குமாரஸ்வாமி

த.கு. அஸ்வின்குமார்

சாகித்திய அக்காதெமி

Tha.Naa. Kumaraswami - Monograph in Tamil by Tha.Ku. Aswinkumar.
Sahitya Akademi, New Delhi. 1998 Rs.25.

© சாகித்திய அக்காதெமி
முதல் பதிப்பு 1998
ISBN 81-260-0583-1

சாகித்திய அக்காதெமி
தலைமை அலுவலகம்
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புதுதில்லி - 110 001.

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புதுதில்லி - 110 001.

'குணா பில்டிங்', 304-305, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

ஜீவன்தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா - 700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் - 400 014.

109, ஜே.ஸி.சாலை, பெங்களூர் - 560 002.

விலை ரூ.25.

அச்சிட்டோர்: மணி ஆஃப்செட்,
112, பெல்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி,
சென்னை-5.

## பொருளடக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | வாழ்வும் பணியும் | ... | 1 |
| 2. | சிறிய சாளரம் பெரிய உலகு (சிறுகதைகள்) | ... | 12 |
| 3. | புதினங்கள் | ... | 43 |
| 4. | பாலம் (மொழி பெயர்ப்புப் பணிகள்) | ... | 75 |
| 5. | தோப்பினுள் தனிமரம் | ... | 83 |
| 6. | பின்னிணைப்புகள் | ... | 90 |

# 1
# வாழ்வும், பணியும்

த.நா.கு என்று இலக்கிய அன்பர்கள் அழைக்கும் தண்டலம் நாராயண சாஸ்திரி குமாரஸ்வாமி, 1907 ஆம் ஆண்டு, டிஸம்பர் மாதம் 24 ஆம் நாள், (பிலவங்க ஆண்டு மார்கழி மாதம் 9 ஆம் தேதி) சென்னையில் பிறந்தார்.

குமாரஸ்வாமியின் தந்தையார், தண்டலம் சங்கர நாராயண சாஸ்திரியார் பல மொழி வல்லுனர். குறிப்பாக சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ், மராட்டிய மொழிகளில் சிறந்த புலமை பெற்றவர். தற்காலத் தமிழ் நாடக முன்னோடிகளில் அவரும் ஒருவர். அன்னாருடைய 'போஜ சரித்திரம்' (இடைக்காலத்தில் மாளவ நாட்டை ஆண்ட போஜ மன்னனின் இளமைக்கால வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது) எனும் தமிழ் நாடகம், வடமொழி நாடக அமைப்பைத் தழுவி புது வகையான ரஸங்களை தன்னகத்தே கொண்டு விளங்கியதோடு மட்டுமல்லாமல், பழந்தமிழ் நாடகத் தன்மையையும் தாங்கி நின்றது. மேடை பல கண்ட இந்த வரலாற்று நாடகம், 1898 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாள், வித்வன் மனோரஞ்சனி சபையினர் சார்பில் சென்னை விக்டோரியா நினைவுக்கூடத்தில் முதலில் அரங்கேறியது. தமிழ் நாடகத் துறையில், அக்காலத்தில் சிறப்புடன் திகழ்ந்த 'பரிதிமால் கலைஞர்' என்ற புனைபெயர் தாங்கிய வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பம்மல் சம்பந்த முதலியார் இருவரும், த.நா.கு வின் தந்தையாரின் நெருங்கிய இலக்கிய நண்பர்கள் ஆவர்.

வழக்குரைஞரான, தன்னுடைய தமையனார் ''இண்டியன் நார்டன்'' மற்றும் ''இகபர வக்கீல்'' என்று அழைக்கப்பட்டு, சிறப்புடன் திகழ்ந்த, வெங்கட சுப்பைய்யருடன், பணியாற்றிய போதிலும், நாராயண சாஸ்திரியாருக்கு, இலக்கியம், இந்திய வரலாறு, நாடகம் இவற்றில் தான் முழு ஈடுபாடு. இந்தியாவின் வரலாறு, இந்திய கலைகள், நம்பிக்கைகள், பண்பாடு இலக்கியம் இவற்றை ஆதாரமாகக் கொண்டு, இந்தியர்களின் கண்ணோட்டத்தில் அமைவதுதான் நல்லது, ஆனால் சில மேலை நாட்டு இந்தியவியல் வல்லுனர்கள், அவற்றை சரியான முறையில் சீர்தூக்கி ஆய்வு செய்யவில்லை என்ற தன்னுடைய கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும், கொள்கைப் பிடிப்பும் கொண்டவர். அவருடைய, 'ஆதி சங்கரரின் கால நிலை (The Age of Sankara), மகத மன்னர்கள் (Kings of Magadha) ஆகிய நூல்கள், வடமொழியில் உள்ள மூல நூல்கள், புராணங்கள், வான்இயல் இவற்றை அடிப்படையாகக் கொண்டு, எழுதிய வரலாற்று ஆய்வு நூல்களாகும். ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் சிலவற்றையும் சமஸ் கிருதத்தில் மொழியாக்கம் செய்தார் நாராயண சாஸ்திரியார்.

நாராயண சாஸ்திரியார் தம் முதல் மனைவி காலமானபின், வட ஆற்காடு மாவட்டம் மோசூர் கிராமத்தைச் சேர்ந்த தேவி உபாசகர் சுப்ரமணிய ஐயரின் மகள் ராஜம்மாளை மணந்தார். முதல் மகன் த.நா.கு. இரு சகோதரர்கள், ஒரு சகோதரி. இவர்களே அவருடைய உடன் பிறப்புக்கள். சகோதரர்களில் ஒருவர், அவருடன் இலக்கிய பணியாற்றி மொழி பெயர்ப்பில் ஈடுபட்டவரும், மஞ்சரி இதழில் ஆசிரியராக பணியாற்றியவருமான, த.நா. சேனாபதி. மற்றொரு சகோதரர் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி சுதந்திரப் போராட்டம் மற்றும் சாரண இயக்க வளர்ச்சியில் ஈடுபாடு கொண்ட குருசாமி. சகோதரி சுந்தரி சுதந்திர போராட்டத்தில் இளம் வயதிலேயே மிகுந்த ஆர்வம் காட்டியவர்.

குமாரஸ்வாமியின் இலக்கிய தாகம் அவர் தந்தை தந்த சொத்து. ஆன்மீக ஈடுபாடு, அன்னை வழி பாட்டனார் ஊட்டி வளர்த்தது.

இல்லம் தந்த இலக்கிய சிந்தனைகள் ஒருபுறமும், சென்னை முத்தியால் பேட்டை உயர் நிலைப் பள்ளியில், ஆசிரியராகப் பணியாற்றிய மூதறிஞர், (சென்னை சமஸ்கிருத கல்லூரி உருவாக்கியவர்களில் ஒருவரும், யோகி அரவிந்தருடன் ஆன்மீக ஆய்வில் ஈடுபட்டவருமான) கபாலி சாஸ்திரியாரின் வழிகாட்டுதலும், த.நா.குவுக்கு பள்ளி நாட்களிலேயே கிட்டின. அச்சமயம் ஏற்பட்ட இலக்கிய நுகர்ச்சிகள், ஊக்கிகள், உந்துதல்கள்



இவை பற்றி த.நா.கு இவ்வாறு வெளியிடுகிறார்.

''சிறுவயசிலே பள்ளிப்பாடத்தைவிட கதை கேட்பதில் தான் எனக்கு நிரம்ப ஆர்வம். இந்தத் துடிப்பை பின்னும் கிளறிவிட்டவள் என் அருமை அத்தை. தமிழ் நாடெங்கும் மூர்த்தி, தலம் தீர்த்தங்களை முறையாக வணங்கி வழிபட்டவர். புராணக்கதைகள், எத்தனையோ தேவர்கள் பற்றிய அற்புதக் கதைகள் கணக்கில, இரவு நேரங்களில் அத்தை சொல்ல நான் கேட்டது. அவருடைய சொந்த அனுபவங்கள் கண்டவை கேட்டவை பின்னும் சுவை பட இருக்கும். தொடக்கத்தில் தமிழில் எழுத எனக்குப் பயிற்சியே போதாது. என் தந்தையாரின் விருப்பத்துக்கு இணங்கி சமஸ்கிருதமே பள்ளியில் கற்றேன். நானே விரும்பி படித்தது தெலுங்கு. என்னுடைய ஆசான் கபாலி சாஸ்திரி. (பிற்காலதத்தில் யோகி அரவிந்தருடன் இணைந்து ரிக் வேதத்துக்கு தனி உரை கண்டவர்) வால்மீகி, காளிதாசன், பவபூதி, பாரவி, பட்டபாணன், மாகன் போன்ற கவிஞர்களின் ஆக்கங்களிலிருந்து அழகான பகுதிகளை விளக்குவார்.

அப்பால் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் நாட்களில் ஆங்கில எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புக்களில் தோய்ந்து விடுவேன். இப்பொழுது 'சிறுகதை' என்று நாம் குறிக்கும் ஒரு துறையை அம்மொழி வாயிலாகவே கண்டேன். ஆங்கிலத்தில் வருவனபோன்ற கதைகளை வனைய எனக்கு ஒரே ஆசை. இதே காலத்தில் மகா கவி பாரதியாரின் பாடல்களை கேட்க எனக்கு வாய்ப்பு ஏற்பட்டது. அவருடைய நூலான சுதேச கீதங்களை பிரிட்டிஷ் அரசாங்கம் பறிமுதல் செய்ததால், மேலும் அவற்றைப் படிக்கவும் பாடவும் ஆர்வம் மூண்டது. தமிழ் நன்கு கற்க இது வலுவூட்டியது. சிறு சிறு காப்பியங்களைப் பாடம் கேட்டேன். அப்புறம் சிலப்பதிகாரம், ஒரு பொற்கவாடம் என் மனத்துள் திறந்தது..... '' *(முதலில் மலர்ந்தது - கன்யாகுமரி கலைமகள் மார்ச்சு 1976 பக்கம் 239.)*

இளம் வயதிலேயே தந்தையை இழந்த த.நா.கு, பள்ளிப் படிப்பு முடிந்ததும், குடும்பத்தில் வறுமை காரணமாக ( நாடகங்கள் மேல் அதிக நாட்டம் கொண்டு செய்த செலவினால் தந்தையாரின் சொத்துக்கள் கடனில் மூழ்கியது) அன்னை மற்றும் இரண்டு சகோதரர் சகோதரியுடன், சென்னைக்கு அருகில் உள்ள, நாயன்மார்களின் பாடல் பெற்ற திருத்தலமான, திருவலிதாயம் என்ற பழம்பெயரை உடைய பாடி கிராமத்தில் குடியமர்ந்தார். அவருடைய இளமைப்பருவம் அங்குதான் தொடங்கியது. தந்தையை

இழந்ததால் புண்பட்ட மனதுக்கு சோழர்காலத்து சிவன்கோயிலுடன், அழகும் அமைதியும் பூண்டு விளங்கிய பாடி,அமைதியைத் தந்தது. த.நா.கு அச்சமயம் உடன் கொண்டு வந்த குடும்பச் சொத்து - அவருடைய தந்தையாரின் பலமொழி இலக்கிய நூல்கள் சிலவே. ''சென்னையை அடுத்த பாடியில் குமாரசாமி பல ஆண்டுகள் வாழ்ந்தார். கோயில் பக்கத்தில் மகிழ மரங்கள் நிறைந்த தோட்டத்தோடு கூடிய வீடு... நான் படிப்பை முடிக்கிற வரையில் ஒரு ஐந்தாறு முறை அவரைச் சந்தித்துப் பேசி இருக்கிறேன். ஒவ்வொரு முறையும் பேச்சு ஓயாத பேச்சுதான். அவருக்கும் பேசுவதில் சந்தோஷம் இருந்தது. அது மட்டுமல்ல பேசுவதற்கு அவரிடம் ஏராளமான விஷயங்கள் இருந்தன.''

*(த.நா.கு. சில குறிப்புக்கள் - சாயாவனம் கந்தசாமி தமிழ்மணி (தினமணி இணைப்பு) ஜனவரி 1991).*

கிராமத்தில் பழைய பாணியில் அமைந்த ஓட்டு வீட்டில், லாந்தர் விளக்கின் மங்கிய ஒளியில், மணிக்கணக்கில் புத்தக உலகில் ஆழந்து விடுவார். காலையும் மாலையும் தோட்ட வேலை, செடிகளுக்கு நீர்ப்பாய்ச்சுதல், கொட்டிலிலுள்ள மாடுகளை பராமரித்தல் என இயற்கையோடு இயைந்த வாழ்க்கை. இந்த அமைதிச் சூழலில் வளர்ந்ததுதான் அவருடைய வங்கமொழி ஆர்வம். பள்ளி நாட்களில் தாகுரின் கீதாஞ்சலியின் ஆங்கில மொழி பெயர்ப்பினைக் கண்டவுடன், மூலமொழியில் ரவீந்திரரை நுகரவேண்டும் என்ற ஆவல் மிகுதியினால் தானே முயன்று வங்கமொழியை கற்கத் தொடங்கினார். ''அந்நாளில் பிரபலமாய் இருந்த ஒரு தலைவலி தைலத்தின் பெட்டிக்குள் இருந்து, பல மொழிகளில் அச்சிடப்பட்ட விளம்பர விளக்கங்களில் வங்கமொழி எழுத்துக்களைத் தேடிக் குறித்துக் கொள்ளுவேன். அசட்டுத்தனமான செயலாக இது பின்னர் எனக்குத் தோன்றினாலும், வங்கமொழி கற்க வேண்டும் என்ற பேராவலே, என்னை அவ்வாறு செய்யத் தூண்டியது'' *(த.நா.கு - டைரிக் குறிப்புக்கள்)* பங்கிம் சந்திரரின் பிரபலமான ஆனந்த மடம் நவீனத்தை 1908 ஆம் ஆண்டு மகேசகுமார சர்மா தமிழில் மொழியாக்கம் செய்திருந்தார். அந்த மொழிபெயர்ப்பினை மிகவும் சிரமப்பட்டு தேடிப்பிடித்து, பிறகு பங்கிமின் அந்த நவீனத்தின் வங்கமொழி மூலநூலினை கல்கத்தாவிலிருந்து தருவித்து, மூலத்தையும் அந்த மொழி பெயர்ப்பிணையும் ஆழ்ந்து ஒப்பு நோக்கி, மூலமொழியின் மொழி அமைப்பினை ஒருவாறு உணர்ந்து கொண்டது, அவருடைய வங்க மொழி ஆர்வத்தை மேலும்



பெருக்கியது. சமஸ்கிருத மொழியில் நல்ல தேர்ச்சி இருந்ததால், வங்கமொழியை, குறுகிய காலத்தில், அவரால் எளிதில் பயில முடிந்தது.

1928 ஆம் ஆண்டு குமாரஸ்வாமி, உள இயல், இந்திய தத்துவம் இவற்றில் பட்டப்படிப்பு முடிந்ததும், வங்கம் சென்று கவி ரவீந்திரரைச் சந்தித்து, ஆசிபெற்று அவருடைய நூல்களை தமிழில் மொழியாக்கம் செய்ய வேண்டும் என்ற உந்துதல் மேலோங்கவே, கல்கத்தாவுக்குப் பயணமானார். அங்கு வங்கமொழி வல்லுனர், சுநீதி குமார சட்டர்ஜியின் உதவிபெற்று 1930-ல் ரவீந்திரரை சாந்தினிகேதனில் சந்தித்தார். ''அப்பொழுது அவர் சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தார். மழைபெய்து அடங்கியதால், சாந்தினிகேதனின் மண்ணின் மணத்தை நுகர்ந்து கொண்டே, ஆர்வம் கலந்த ஒருவித நடுக்கத்துடன் பேசினேன். 'நீ பேசிய போது இருந்த வடமொழி பாணியிலான வங்க உச்சரிப்பு நன்றாகவே இருக்கிறது.'' என்று கூறியவர் என் அருகில் நின்று கொண்டிருந்த சுநீதிகுமார் சட்டர்ஜியை நோக்கி தாகுர், சமஸ்கிருத உச்சரிப்பில் வங்காள மொழியை இந்த இளைஞன் போல் பேசுவதிலும் ஒரு தனி அழகு இருக்கிறது என நினைக்கிறேன்' என்றார். 'உனக்கு என் பரிபூரண ஆசிகள்' என்று கூறி நான் தமிழில் மொழியாக்கம் செய்த அவருடைய சில கவிதைகளை ஆர்வத்துடன் கேட்டார். இந்தச் சந்திப்பு வங்கத்துக்கும் தமிழுக்கும் இடையே ஏற்பட்ட இலக்கிய பாலத்தின் அடித்தளம்'' *(த.நா.கு வின் டைரிக் குறிப்புக்கள்)*

1930களில் சுதந்திர போராட்ட இயக்கத்தில், ஆந்திர கேசரி பிரகாசம் அவர்கள் தலைமையில், சென்னையில் தொடங்கிய போராட்டங்களில் தீவிர பங்கேற்றார் த.நா.கு. இந்திய தேசீய காங்கிரஸின் மூவர்ணக் கொடியைப் அவருடைய பாடி இல்லத்தில், சில போலிஸார் பலவந்தப் படுத்தி, கொளுத்திய சம்பவம், அவருக்கு ஆங்கிலேயர் மேல் கடும் வெறுப்பினையும் அதே நேரத்தில் தீவிர தேசியப் பற்றையும் ஏற்படுத்தியது. (அந்தச் சம்பவத்தைக் குறித்த செய்தி, மார்ச் 15 1932-ல் ஸ்வராஜ்ஜியா ஆங்கில இதழில் வெளியாகியது) நாட்டுப் பற்றின் உந்துதலினால், நேதாஜி எழுதிய இளைஞன் கனவு (தருணோர் ஸ்வப்ன) புதுவழி (நொதுனேர் பத) ஆகிய நூல்களை தமிழில் மொழி பெயர்த்தார். நேதாஜி சென்னை வந்தபோது அவரைச் சந்தித்து ஆசிபெற்றார். த.நா. குமாரஸ்வாமியைக் மிகவும் கவர்ந்த மற்றொரு வங்க எழுத்தாளர் தாராசங்கர் பானர்ஜி. அன்னாருக்கும் த.நா.குவுக்கும் முதலில் தொடங்கிய இலக்கியத் தொடர்பு, பிறகு ஆழ்ந்த நட்பாக

மாறியது. இருவரும் அடிக்கடி சந்திக்க வாய்ப்புக்கள் இல்லாத சூழலிலும் இருவருக்கும்மிடையே உணர்வுப்பூர்வமான தொடர்பு இருந்து வந்தது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் தாராசங்கர் பானர்ஜியை தான் கண்டபொழுது இருவருக்கும் ஏற்பட்ட எண்ண எழுச்சியைக் குறிப்பிடுகிறார் த.நா.கு:

'அகில இந்திய எழுத்தாளர்கள் மாநாடு 1959 ஆம் ஆண்டு சென்னையில் கூடியது. ஸ்ரீ தாராசங்கர் பந்தயோபத்யாய் அதற்குத் தலைமை தாங்கினார். நிகழ்ச்சி முடிந்ததும் அவருடன் அளவளாவ அவருடைய அறைக்குச் சென்றேன். அவருடைய நவீனங்களில் ஒன்றான ஆகுன் அப்போது என்னுடன் வைத்திருந்தேன் (இந் நூலை அக்னி என்ற பெயரில் 1943 ஆம் ஆண்டில் மொழிபெயர்த்து நான் தாராசங்கரை தமிழகத்துக்கு அறிமுகப்படுத்தினேன்) அதனை அவரிடம் தந்து அவர் தம் நினைவாக நான் போற்றும் வகையில் ஒரு நல்லுரையை அதில் பதிக்கும்படி வேண்டினேன். அந்நூலின் உட்புறமாக வங்காளிப் பத்திரிகையொன்றில் வந்த அவர் உருவப் படத்தை ஒட்டிவைத்திருப்பதைப் பார்த்து மென்னகை பூத்து அவர், ''எத்தனை வருடங்களுக்கு முன் எடுத்த என் படம்! அந்த நாட்கள் மறைந்து விட்டன. இப்போது நான் எவ்வளவோ மாறிப்போய்விட்டேன். இன்று அந்த தாராசங்கரின் மெலிந்த நிழலே நான்'' என்றதும் அவருடைய கண்கள் கடந்த அத்தொலைவு நாட்களை நோக்கி நிலைத்தன. அந்த படத்தின் கீழேயே ஒரு கவிதையை வரைந்து தம் முத்திரையையும் வைத்தார். *(படிக்கு முன்.... ஆரோக்கிய நிகேதனம்-சாகித்ய அகாதெமி - புது தில்லி 1972.)*

த.நா.கு எழுதிய முதல் சிறுகதை கன்னியாகுமரி. 1934-ல் தினமணியில் பிரசுரமாகியது. அதுவே த.நா.கு இட்ட முதல் இலக்கிய வித்து. தொடர்ந்து, ஆனந்த விகடன், கலைமகள் இதழ்களில் பல கதைகள் வந்தன. ஆனந்த விகடன் இதழின் ஆசிரியராக அப்பொழுது இருந்த ரா. கிருஷ்ணமூர்த்தி 'கல்கி' அவர்களுடைய நட்பு கிட்டியது.

''பலே! பேஷ்!' என்ற பாராட்டுக்களுடன் அந்த விவரங்களைக் கேட்ட பின்னர், கல்கி, தமது பத்திரிகைக்கும் கதைகள் எழுதி அனுப்பும்படி அந்த இளைஞரைக் கேட்டுக் கொண்டார். அதற்கு இணங்க, த.நா. குமாரஸ்வாமி அடுத்து அடுத்து அனுப்பிய ''ராமராயன் கோயில்'', ''ஸ்ரீ சைலம்'' முதலியன எடுத்த எடுப்பிலேயே புகழ்சூடிய கதைகளாயின. அவருடைய வங்கமொழித் தேர்ச்சியை கல்கி பயன்படுத்திக் கொண்டு, பங்கிம் சந்திர சட்டர்ஜியின் (எட்டு அத்தியாயங்களுடன் நின்றுபோன



குறை நாவல் ஒன்றை நிறைசெய்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி, இருபத்து மூன்று அத்தியாயங்கள் சேர்த்துக் குமாரஸ்வாமி எழுதிக்கொடுத்த 'மாதங்கினி' நாவலை விகடனில் தொடராக வெளியிட்டார். அதற்குப் பிறகு தாகூரின் நாவல் ஒன்றைத் தழுவி எழுதிக் கொடுக்கச் சொன்னார் கல்கி...

*(கல்கி ஆகஸ்ட்-3, 1975).*

கல்கி காலத்தில் ஆனந்த விகடன் இதழில் த.நா.கு தொடங்கிய இலக்கிய முயற்சிகள், அவருடைய எதிர்கால எழுத்தாற்றலின் மலர்ச்சிக்கு வித்தாக அமைந்தன.

த.நா.கு. 1925-ல் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த, சுதந்திர போராட்டம் மற்றும் கதர் இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்ட ராமச்சந்திர சர்மாவின் ஐந்தாவது மகள் ருக்மினியை மணந்து கொண்டார். இரு குடும்பங்களுக்குமிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாட்டினால், சுமார் ஐந்து ஆண்டுகாலம், இளம் மனைவியை பிரிய நேரிட்டது. 1931-ல் மீண்டும் ஒன்று சேர்ந்தனர். த.நா.கு வின் முதல் இரு மகன்களும் நோய்வாய்ப்பட்டு இளம்பருவத்திலேயே மாண்டனர். பிள்ளைகளை இழந்த துயர் அவரை வெகுவாகப் பாதித்தது. சந்திரக்கிரகணம் என்ற அவருடைய சிறுகதைத் தொகுப்பின் (''உதிர்ந்துபோன என் பிள்ளை அரும்புகள்-ஜதீன்-கிருஷ்ணன் இவர்கள் நினைவாக'') முதற்பதிப்பினை சமர்ப்பணம் செய்தார். 1930-தொடங்கி 1940-க்குள், பலமொழிபெயர்ப்புக்களையும், சுய ஆக்கங்களையும் உருவாக்கிய அவருக்கு, இலக்கிய அன்பர்கள் கு.ப.ரா. பி.எஸ். ராமையா, கி.வா. ஜகன்னாதன், தமிழ் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. கு.ப. ராஜகோபாலனுக்கும் தனக்கும் ஏற்பட்ட தொர்பினை த.நா.கு குறிப்பிடுகையில், ''1938-ல் சென்னைத் திருவல்லிக்கேணியில் கு.பா.ராவை நான் முதன்முதலில் சந்தித்தேன். கதைகள் மூலம் நான் கண்ட ராஜகோபாலன் வேறு கற்பனையில் நான் வரைந்த உருவம் உண்மை ரூபத்தோடு ஒத்திருக்கவில்லை. விநயம் பிரதிபலிக்கும் முகம், நிர்மலமானத் தோற்றம், ரஸிகர் என்பதைக் காட்டும் சொல்லழகு. நாங்கள் இருவரும் டாகுரின் உபாசகர்களானதால் எங்கள் சம்பாஷணையெல்லாம் அந்த மகாகவியின் இன்சுவைக் கவிதைகளைப் பற்றியே இருந்தது.... நாங்கள் இருவரும் வியந்து பேசிக்கொண்டிருந்தது பக்கத்திலிருந்த நண்பர்களுக்கெல்லாம் சிரிப்பை மூட்டியிருக்கலாம். ஒருவேளை எங்கள் இருவரையும் பைத்தியங்கள் என நினைத்துக்கொண்டிருக்கலாம். ஆம் நாங்கள் இலக்கியப் பித்தர்கள். அன்று ஒருவர் உள்ளதை மற்றொருவர்

அறிந்துகொண்டோம். டாகுர் ஓரிடத்தில் 'சதவர்ஷபரே' (நூறு ஆண்டுகளுக்குப்பின்) என்று பாடியிருப்பது போல் கு.ப. ராவின் இலக்கியம்-நூறு வருஷங்கள் போவானேன்-இன்னும் சில வருஷங்களுக்குள் தலை தூக்கியே நிற்கும் என்பதில் ஐயமில்லை...."

*(அணைந்த சுடர்(கட்டுரை) கிராம ஊழியன் 26 மே 1944 பக்கம்-13).*

இரண்டாவது உலகப்போர் காலத்தில், சென்னையில் ஏற்பட்ட 'இவாகுவேஷன்' போது தாயாரின் ஊரான அரக்கோணத்திற்கு அருகில் உள்ள மோசூர் கிராமத்தில் தங்கி, விவசாயத்தில் ஈடுபட்டார். வட ஆற்பாடு மாவட்டத்தினைச் சார்ந்த சிற்றூர்களும் கிராமங்களுமே இவருடைய பிற்காலப் படைப்புக்களான வீட்டுப்புறா, ஒட்டுச் செடி, குறுக்குச் சுவர் போன்ற நவீனங்களுக்குப் பகைப்புலமாக அமைந்தது.

1940-ல் குமரிமலர் ஏ.கே. செட்டியார் தயாரித்த காந்திஜி பற்றிய டாகுமெண்டரி படத்துக்கு விளக்க உரை எழுதும் வாய்ப்பு அவருக்குக்கிட்டியது. சுதந்திரபோராட்ட வீரர் சத்திய மூர்த்தி அவர்கள் அந்தப் படத்தின் விளக்க உரைக்குக் குரல் கொடுத்தவர்களில் ஒருவர்.

"பல அன்பர்களைக் கலந்துபேசி, பிரபல எழுத்தாளரான த.நா. குமாரஸ்வாமி அவர்களின் பெயரைத் தீர்மானித்தோம். அவரை அணுகியபோது அவர் மிகவும் அடக்கத்துடன் 'அத்துறையில் அனுபவம் இல்லை என்று கூறினார்.' கவலைப்படாதீர்கள்... இந்தியாவுக்கே தற்பொழுது இத்துறை புதிது... இதில் யாருக்குமே இன்னும் அனுபவம் ஏற்படவில்லை, உற்சாகத்துடன் முயல்வோம் என்றேன். அவர் சம்மதித்தார். பம்பாய்க்கு வந்து சுமார் ஒருமாதம் தங்கினார். படத்தை சில முறை பார்த்தபின்னர், காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்று நூல்களை, படித்து குறிப்புக்களை எடுத்துக் கொண்டார். விளக்க உரையாளர்கள் அனைவரும் பேசிமுடியும் வரையில் கூடவே இருந்தார்."

*(அண்ணல் அடிச்சுவட்டில்-9 ஏ.கே. செட்டியார். குமரிமலர் மார்ச்சு 1979.)*

டாகுமெண்டரி திரைப்படத்துக்கு விளக்க உரை எழுதியது, திரைப்படத்துறையில், ஆர்வத்தினை ஏற்படுத்தியது அவருக்கு. 1950-1951-ல் வங்க படத்துறையைச் சார்ந்த தேவகி போஸின் தொடர்பு கிட்டியது. அப்போது வங்க நடிக நடிகையரை வைத்து



தமிழில் டப்பிங் முயற்சிகள் சில நடந்தன. அத்துறையில் சில காலம் ஈடுபட்டார், த.நா.கு. இந்தத் திரைப்படத் துறை அனுபவத்தில் எழுந்ததுதான் 'கானல் நீர்' நவீனம், இதைத் தொடர்ந்து 1960-களில், பிரபல வங்கப்படங்களின் வசனங்களின் ஒலி நாடாக்களைக் கேட்டு தமிழாக்கம் செய்து தந்தார். அந்தச் சமயத்தில் வங்காளப் படக்கதைகளைத் தழுவி சில தமிழ்ப்படங்கள் வெளிவந்தன.

1950-லிருந்து 1960வரை த.நா.கு பல புதினங்களை எழுதினார். அவை ஆனந்த விகடன், அமுதசுரபி இதழ்களில் வெளியாயின. 1950களில் நகைச்சுவை எழுத்தாளரும் தமிழில் சிறந்த பயணக் கட்டுரைகளை வரைந்தவருமான தேவன் அவர்களின் தொடர்பு கிடைத்தது. இருவரும் பல நாட்கள் பழகிய நண்பர்கள் போல், கண்டதும் உள்ளம் திறந்து பேசி நெருங்கினர். அன்னார் ஆசிரியர் பொறுப்பில் இருந்தபோது ஆனந்தவிகடனில் பல இலக்கிய முயற்சிகளில் த.நா.கு பங்கேற்றார். வருந்தத்தக்க சூழ் நிலையில், ஆனந்த விகடனிலிருந்து வெளியேறிய தேவன், சில மாதங்களுக்குள் கடும் நோய்வாய்ப்பட்டு உயிர் நீத்தது, த.நா.குவைப் பொறுத்துவரை ஒரு பேரிழப்பாகும். "என் நண்பன், மனிதன் அல்ல தேவன்" என்று பல முறை தன் இலக்கிய அன்பர்களிடையே துயருற்று வருந்தினார். தேவனுடைய மறைவுக்கு பின், ஒரு சில ஆண்டுகளுக்கு இலக்கிய உலகில் ஆர்வம் காட்டவில்லை த.நா.கு.

*(தேவன்-நினைவு மலர்-1972).*

1960-61-இல் சாகித்திய அக்காதெமி சார்பில், ரவீந்திரருடைய நூற்றாண்டு விழா தொடர்பாக, அவருடைய நூல்கள் சிலவற்றை மொழி ஆக்கம் செய்தார். 1962-ல் எழுத்தாளர் பரிவர்த்தனை திட்டபடி தமிழ் எழுத்தாளர் - மொழி பெயர்ப்பாளர் என்ற தகுதியில், வங்க எழுத்தாளர் நிகார் ரஞ்சன் ரே, மற்றும் அஸ்ஸாமிய எழுத்தாளர் ஹேம்காந்த பருவா ஆகியோருடன் இரண்டு மாதம் சோவியத் நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார். அங்கு பல ருஷிய எழுத்தாளர்களையும் மொழிபெயர்ப்பாளர்களையும் சந்தித்தார். லெவ் டால்ஸ்டாய், மாக்ஸிம் கார்க்கி, செக்காவ் போன்ற எழுத்தாளர்களிடமிருந்த பற்று, ருஷியப் பயணத்துக்கு பின் மேலும் வலுப்பெற்று, ருஷிய மொழியைப் பயிலத் தொடங்கி ஓரளவு தேர்ச்சியும் பெற்றார். சர்க்கரை நோயினால் உடல் பாதிக்கப்படவே, ருஷிய மொழி பயிற்சி வேகம் தடைப்பட்டது.

எழுத்தையே தன் முழு மூச்சாகக் கொண்டு, எந்த அலுவலகத்திலும் பணியில் ஈடுபடாத த.நா.கு, காந்திஜியின்

கொள்கை மீதுள்ள பற்றினால், காந்திஜி நினைவு அமைப்பு ஆசிரியர் குழுவில் சேர்ந்து கொண்டார். காந்தி நூல்களை-தமிழில் கொண்டு வரவேண்டும் என்ற ஆர்வத்தினால் குஜராத்தி மொழியையும் கற்றார். ஆனால் அங்கு அவரால் நிலைத்து நிற்க இயலாத சூழ்நிலை.

"மகாத்மாகாந்தி முதல் நூலான அவர் வாழ்க்கை வரலாற்றை குமாரசாமி மொழி பெயர்த்தார். இரண்டாவது புத்தகம் மொழி பெயர்க்கும்போது அவருக்கும் குழு தலைவருக்கும், மொழி பெயர்ப்பில் தகராறு வந்துவிட்டது. வேலையை விட்டுவிட்டார்"

*(த.நா.கு சில குறிப்புகள் - தமிழ்மணி (தினமணி இணைப்பு) சா.கந்தசாமி ஜனவரி 1991).*

1970க்குப் பிறகு கண்பார்வை பாதிக்கப்பட்டதால், ஒரு சில சிறுகதைகளை மட்டுமே எழுதினாலும் சென்னையில் அவருடைய சிறு வீட்டில், நேரத்தின் பெரும்பகுதி தத்துவ நூல்களைப் படிப்பதிலும், வானொலி மூலம் கர்நாடக, மேற்கத்திய இசையைக் கேட்டு குறிப்பெடுப்பதிலும், இலக்கிய நண்பர்களுடன் கலந்துரையாடுவதிலுமே சென்றது. இந்தக் காலக்கட்டத்தில் வங்க அரசின் ஆதரவில் தமிழ், வங்கமொழி இவற்றுக்கு அவருடைய தொண்டினைக் போற்றும் வகையில் அவருக்கு "நேதாஜி புரஸ்கார்" (நேதாஜி இலக்கிய விருது) அளிக்கப்பட்டது.

பல இதழ்களில் வெளிவரும் சிறந்த ஓவியங்களையும் சுவையான செய்திகளையும் கத்தரித்து துறைவாரியாகப் பிரித்து பெரியதும் சிறியதுமான நோட்டுப் புத்தகங்களில் ஒட்டிவைப்பார். படித்த நூல்களாய் இருந்தாலும் மீண்டும் படித்து இன்பம் பெறுவதில் அவருக்கு விருப்பம். மாலைப் பொழுதுகளில் தன்னுடைய பெயரன்களுடன், அவர்களுடைய வயதுக்குத் தக்கவாறு இறங்கி வந்து அவர்களுடன் ஒருவராகிவிடுவார்.

குறிப்பாக பெயரன் தருண், பேத்தி அனு இவர்களுக்கு நல்ல பாட்டுக்களையும் கதைகளையும் சொல்லித் தருவார். மழலைக் குரலில் அவர்கள் பாடுவதைக் கேட்டு ரசிப்பார். மிகுதி நேரங்களில், அது நள்ளிரவானாலும் சரி, அலமாரியிலிருந்து நூல்களை எடுத்துப் படித்து குறிப்புக்களை எடுப்பார்.

சுயசரிதை எழுதுவதற்காக குறிப்புக்களை எடுக்கத் தொடங்கிய சில நாட்களுக்குள், அதைத் தொடர இயலாத சூழ்நிலை, படி இடறி கீழே விழுந்ததால் காலில் எலும்பு முறிவு. இரண்டு மாதங்கள் கடும்



துன்பத்துக்கு உள்ளாகி அறுவை சிகிச்சைக்குப் பிறகு, தனது 75 ஆவது வயதில் 1982 செப்டம்பர் 17 ஆம் நாள் (புனித நாளான மாளய அமாவாசையன்று) உயிர் நீத்தார்.

நோய்வாய்ப்பட்டிருந்த நாட்களில் கூட இலக்கிய அன்பர்களிடம் மிகுந்த முயற்சியுடன் பேசி(பேசுவதே அவருக்கு அப்போதைய உடல்நிலை காரணமாக துன்பமாக இருந்தபோதும்) பழைய நினைவுகளில் தோய்ந்து விடுவார். பொருள் வசதியின்மை காரணமாக, அறுவைச் சிகிச்சை செய்ய முடியாத நிலையில் இருந்தபோது, அவருக்குப் பொருளதவி செய்த நூற்றுக்கணக்கான அவருடைய இலக்கிய ஆர்வலர்கள், வாசகர்கள் அனைவரையும் அவ்வப்போது நன்றியுடன் நினைவு கூர்வார். நினைவு தப்புவதற்கு சில மணித்துளிகளுக்கு முன் ரவீந்திரர் இறுதி நாட்களில் எழுதிய கவிதை நூலினைக் கொணரச் சொல்லி, அதில் ஆழ்ந்துவிட்டார். மருத்துவர்கள் ஓய்வு எடுக்கச் சொல்லி வற்புறுத்திய போதிலும் அதை த.நா.கு ஏற்கவில்லை. "நிரந்தரமான ஓய்வு என்றைக்கு இருந்தாலும் கிடைக்கப் போகிறது. அதற்குள் இப்பொழுது ஓய்வு ஏன்? I want to read and contemplate till my last moment." (கடைசி மூச்சு வரை படிப்பேன் சிந்திப்பேன்) என்றார். கொண்டு வந்த புத்தகத்தில் உள்ள வரிகளில் கண்களை ஓட்டினார். தாளில் குறிவைத்துப் புத்தகத்தை மூடி மெல்ல மார்பின் மீது வைத்துக் கொண்டார். ஒரு சில நிமிடங்களுக்குள் மீளா உறக்கத்தில் ஆழ்ந்தார்.

*"மறைந்தே போகிறேன் நான். மெல்ல மெல்ல*
*நண்பர் யாவரும் கைகொடுக்க, இன்சுவை நிறைந்த*
*இந்த அன்பினையும், மாந்தர் அளித்திடும் இந்த*
*ஆசிகளையும் ஏற்றுச் செல்கிறேன் மெல்ல மெல்ல...*
*இன்று என் பைக்குள் எதுவுமில்லை, அதில்*
*இருந்ததைக் கவிழ்த்துவிட்டேன்...*
*என்னைச் சூழ்ந்துள்ள இந்த மூடி இன்னும்*
*விண்டு போகவில்லை. முழுமையான நான்*
*புலனுக்கும் எட்டாத மறைவை நோக்கி மெல்லச்*
*செல்கிறேன்..."*

த.நா.கு கடைசியாக நுகர்ந்த கவிதை வரிகள்! காலனின் காலடி அரவத்தை அந்தக் கவிதையின் மூலம் உணர்ந்தாரோ! நம்மிடையே வாழ்ந்து, எழுத்தை ஆட்சி செய்தவர் மறைந்தார். அவர்விட்டுச் சென்ற எழுத்துக்கள் மறையுமோ!

# 2

# சிறிய சாளரம் பெரிய உலகு

**(த.நா. குமாரஸ்வாமியின் சிறுகதைகள்)**

த.நா. குமாரஸ்வாமியின் சிறுகதைகள் ஐந்து தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. முதல் தொகுதி, கன்யாகுமரி (பதினைந்து சிறுகதைகளைக் கொண்டது), சந்திரக் கிரகணம்(இருபத்தோறு கதைகள்); நீலாம்பரியில் பதினோறு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. கற்பவல்லி, இதில் பதினோறு சிறுகதைகளும்; இக்கரையும் அக்கரையும் என்ற தொகுப்பில் பன்னிரெண்டு கதைகளும் உள்ளன. இதழ்களில் வெளிவந்து புத்தகவடிவில் வெளிவராத கதைகள் நூற்றுக்கும் மேல்.

த.நா.கு எழுதிய சிறுகதைகளை கீழ்க்கண்ட தலைப்புக்களில் பொதுவாக வகைப்படுத்தலாம். 1) அதி தீவிர கற்பனைக் கதைகள் (Fantasy ) 2) உளவியல் பின்னணியைக் கொண்டவை 3) மனித உறவை அடிப்படையாகக் கொண்ட குடும்பக் கதைகள் 4) வரலாற்றுச் சம்பவங்களைச் சார்ந்த கதைகள் 5) புராண இதிகாசங்கள் அடிப்படையில் உருவான கதைகள் 6) உருவகக் கதைகள்.

''த.நா. குமாரஸ்வாமியின் பாணி ஒரு தனி பாணி. தமிழில் அது போன்ற கதைகளை வேறு யாரும் எழுதியதில்லை. இன்றைய தமிழ்க்கதை வளத்தின் ஒரு முக்கிய பகுதிக்கு, ஆசிரியர் குமாரஸ்வாமி அடிகோலித்தந்தவர் என்று பாராட்ட வேண்டியது மிக



அவசியம்''. என்று திறனாய்வாளர் க.நா. சுப்பிரமணியன் வருணித்துள்ளார்.

''பல சந்தர்ப்பங்களில் நான் நெய்த இந்தக் கதைகள் இப்பொழுது ஒரு திரட்டாகக் கடைக்கு வந்திருக்கின்றன. இதில ரகம் ரகமான சரக்குகள், ஜரிகைப் பட்டு போட்டதும் உண்டு. சாதாக் கரையும் கிடைக்கம். விசித்திர வர்ண இழைகள் போட்டதும் இருக்கும். சிலந்தி வலை போன்ற வெண்மையானதும், தடித்த நூலில் யாத்து பழுப்பு நிறம் வாய்ந்ததும், 'லைட்கலர்' கொண்டதும், உத்திரவாதமுள்ள கெட்டிச்சாயம் உள்ளதும் நீங்கள் பார்வை இடலாம். எல்லாம் பச்சென்ற குளிர்ந்த கிராமத்தில் குடிலின் நிழலில் பாவு போட்டு சொந்தத்தறியில் உருவானவையே''

*(சந்திர கிரகணம் தொகுப்பின் முன்னுரையில் த.நா.கு)*

த.நா. குமாரஸ்வாமியின் சிறுகதைகள் 1930 முதல் 1980 வரையிலான ஐம்பது ஆண்டு காலத்தில், ஆனந்த விகடன், சுதேசமித்திரன், கல்கி, கலைமகள், அமுதசுரபி போன்ற இதழ்களில் வெளிவந்தன. அவருடைய முதல் கதை கன்யாகுமரி, த.நா.கு. கற்பனைக் கடலில் மூழ்கி எடுத்த ஆனி முத்து.

''நான் கன்னியாகுமரியை நேரே சென்று கண்டதில்லை இன்றைய நாள் வரை. அதன் கடற்கரைக் கோயில். கடலில் அமிழ்ந்து தலையைக் காட்டும் அந்த விவேகானந்தர் பாறை. எல்லாம் புகைப்பட வாயிலாகப் பார்த்தவைதான். இன்றளவும் நான் குமரிமுனைக்குச் சென்றவன் அல்ல. நினைத்தால் போக முடியும். ஆனால் உண்மைக் குமரியைப் பார்த்துவிட்டால் என் கற்பனை எழுப்பிய குமரி மங்கிவிடுமே! கற்பனையில் காணும் செவ்வி உண்மை உருவங்களில் இருக்கவே முடியாது. அந்தக் கவர்ச்சியே வேறு.

என்று தான் வனைந்த முதல் கதையைப் பற்றிக் கூறுகிறார். த.நா.கு. *(முதலில் மலர்ந்தது-பக் 239. கலை மகள் மார்ச்சு-1976)*

த.நா.குவின் **'கன்யாகுமரி'**. அதிதீவிர கற்பனையை (Fantasy) அடிப்படையாகக் கொண்டது. ஒரு சில வரலாற்றுச் செய்திகளையும், புராணக் கூற்றுக்களையும் அடிப்படையாக வைத்து, கற்பனைக் கோயிலைக் கட்டி, நித்தம் தவம் செய்யும் குமரியையும் அங்கே நிலை நாட்டி விட்டார்.

**ஹீசைலம்** மற்றொரு கற்பனைக் காவியம். நந்திதேவர் என்ற ஒரு துறவி, காட்டுப் பாதையில், அழகிய சிறுவன் ஒருவனைக் காண்கிறார். சிறுவனின் தகப்பனார் நோயினால் மூச்சு பேச்சற்று கிடந்தார். நந்திதேவர் அனுதாப மிகுதியினால், அவரை தன் ஆசிரமத்திற்கு அழைத்து வந்து, உயிர் கொடுத்தார். அந்த சிறுவன் பார்வதி நாதன் பால் துறவிக்கு அன்பு ஏற்பட்டது. உடல் தேறியதும், சிறியவன் அகோபிலம் செல்ல ஆசைப்பட்டான். ஆனால், அவன் திரும்பி வருவேன் என்றான். போகும்போது ஒரு ஸமித்தை குகையினுள் ஒரு மூலையில் நிதானமாக எரிந்து கொண்டிருந்த ஓம அக்னியில் எடுத்துவைத்த விட்டு, ''இந்த ஓமப் புகையை வைத்துத்தான் தங்களை அடைந்தேன். இதை அணையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இரண்டு வருஷங்களுக்குள் நான் திரும்புவேன். அப்போது இது வழிகாட்டும்.'' என்றான் பார்வதிநாதன். துறவி பார்வதிநாதனை மறக்கவில்லை.

இரண்டு வருடம் ஓடிற்று. காற்றினாலும் மழையினாலும் ஓமத் தீ அணைந்தது. இளம் துறவியைத் தேடிக் கொண்டு வந்தாள் ஒரு யுவதி. பார்வதி நாதன் பார்வதியாகிவிட்டாள். அவளுடைய அப்பா அகோபிலத்தில் இறந்துவிட்டார். கொடுத்த வாக்கின்படி தான் வந்ததாகக் கூறுகிறாள், சிறுவனாக அன்று வந்த யுவதி. துறவி அவளைப் போய்விடச் சொன்னார். ஆனால் தன் மனம் கவர்ந்தவரோடு இருக்கத்தானே வந்திருக்கிறாள். துறவு நிலை பிறழாமல் இருக்க, நந்திதேவர் எதிர் மலைக்கு வந்துவிட்டார். அவரையும் பார்வதியையும் பாதாள கங்கை ஆறு பிரித்தது. ஓவென பெருமழை. ''வெளிச்சம் காட்டுங்கள். எனக்கு வழி தெரியவில்லையே... நான் உங்களை அடைந்தே தீருவேன்''. பாதாள கங்கையில் இறங்கியேவிட்டாள் பார்வதி. ''சந்நியாசி என்றுமில்லாத அமைதி முகத்தில் தவழ, கையில் எரியும் தீப்பந்தத்துடன் பார்வதியை மீட்க அந்த ஜலத்தில் குதித்தார். அப்புறம் சட்டென்று ஒரு காரிருள் எல்லாவற்றையும் மறைத்துவிட்டது.

பாவை ஏற்றிய அக்னிக் கொழுந்து இன்னும் அணையவில்லை. இருவரும் அந்தச் சுடரின் ஒளியில் ஒருவரை ஒருவர் தேடி அலைகின்றனர். இன்னும அலைந்து கொண்டே இருக்கின்றனர்''. (தமிழ்நாட்டுச் சிறுகதைகள்-3வது பகுதி. பக்கம் 59 அல்லயன்ஸ்)

''கதைஅவ்வளவுதான். ஒரு வசீகரமான குட்டி காவியத்தை, ஒரு குட்டி லைலா-மஜ்னு, ரோமியோ-ஜூலியத், ஹெலாய்ஸே -



அபிலார்ட் சிருஷ்டித்துவிட்டார். காதல் காவியங்களே அணையாத தீக்கொழுந்துகள்தானே! ''(படித்திருக்கிறீர்களா? - க.நா.சு. - சுதேசமித்திரன் பிப்ரவரி 17-1957)

மனித உறவுகளை அடிப்படையாகக் கொண்ட கதைகளில் 'வைணிகர்' 'மணிச்சுடர்', 'கண் இழந்த காதல்', 'அதிர்ச்சி', 'நாணல் பூ', 'கொம்புத் தேன்' - இவை மலர்ந்தும் மலராத காதலை வெளிப்படுத்துவன.

**மணிச்சுடரில்** தன்னுடன் ஓடி ஆடி சிறுவயது முதல் வளர்ந்த பெண்ணை மணக்க மறுத்துவிட்டு, பின்னர் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் சில ஆண்டுகள் கழித்து அவளைச் சந்திக்கும்போது, அவள் இப்படி அழகாக மாறுவாள் என்று தெரியாதே என்று இடிந்து போகிறான் கதாநாயகன்.

''நானும் அவளும் சிறுவயதில் ஒரே வீட்டில் ஒன்றாக பழகிவந்தோம். அவளை நன்றாக பார்க்கும் அவகாசத்தை நான் இழந்தேன்.... அந்தச் சமயங்களில் வேறுவிதமாக அவளை என்னால் பார்க்க முடியவில்லையே.... புருஷன் பெண்ஜாதி விளையாட்டு கூட நாங்கள் விளையாடினது இல்லை... அவளோடு அதிகமாகப் பழகியதாலோ என்னவோ எனக்கு சலிப்பு அவள் மேல் ஏற்பட்டிருந்தது. இப்போது என்னை விட்டு போய்விடவே அவளுடைய ஆகர்ஷணை பலமாகிவிட்டது''.

*(தமிழ் நாட்டுச் சிறுகதைகள்-3வது தொகுதி பக்கம் 38*
*அல்லயன்ஸ் கம்பெனி சென்னை-4)*

**'அதிர்ச்சியில்'** எழுத்தாளனின் மன உந்துதலை டீன் ஏஜ் (16 வயது) சிறுமி உணர்த்துவது எழுத்தாளருக்கு அதிர்ச்சியைத் தருகிறது.

''கதை எப்படி? என்றேன்.

கண்களை இருகையாலும் மூடிக் கொண்டு விக்கி அழுதாள் வைஜி.

எனக்கு தூக்கிவாரிப் போட்டது. உனக்கு என்ன வைஜி?' என்றேன்.

வெகுநேரம் பொறுத்தே அவள் என் பக்கமாக முகத்தைத் திருப்பினாள். கண்களில் இரு முத்துக்கள் துடிக்க, உங்களுக்கு

எப்படி தெரிந்தது என் மனசு'' என்றாள்.

எனக்குப் பேசவே தெரியவில்லை...

''சொந்த அனுபவம் இராமல் இந்த விஷயத்தை யாராலும் இப்படி வர்ணிக்கவே முடியாது'' என்றாள்.

''எந்த விஷயம்?''

''அத்தகைய விசித்திரக் காதலை. எந்த யுவதியைப் பற்றி கதை சுழல்கிறதோ அவள் கட்டாயம் நான் அன்று பார்த்த உங்கள் சம்சாரமாக இருக்க முடியாது. வேறு யாரோதான் நிச்சயமாக உங்கள் இதயத்தை தொட்டு அசைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள்'' என்றாள்.

திடுக்கிட்டுப் போனேன்... என் இளமைக் காதலின் கதாநாயகி தூரத்து உறவான இவளது தாயே என்று இவளுக்கு நிச்சயம் தெரியாது. இருப்பினும் இந்தப் பதினாறு வயசுப் பாவை, அறுபது வயசு அனுபவசாலி போல் என்னையே ஆராயப் புகுந்த சாமர்த்தியத்தை மெச்ச வேண்டும்''.

*(அதிர்ச்சி கலைமகள் நவம்பர் 1953)*

''துயரத்தைப் பெரிதாக்கிக் கொண்டு அதிலுள்ள ரஸத்தை எல்லாம் வடித்துத் தந்து ஆனந்திப்பதை ஒரு உத்தியாக மேலை நாடுகளில் போற்றி வளர்த்து இருக்கிறார்கள். இத்தகைய 'ரொமாண்டிக் மெலான்கலி (Romantic melancholy) அதாவது இன்பம் தரும் துயரமனப்பான்மை உத்திக்கு... த.நா.கு. வின் கன்யாகுமரி முதலிய கதைகளிலிருந்த ஏராளமான உதாரணங்களைச் சொல்லலாம்... இந்த அளவுக்கு இந்த மனோபாவத்தில் மூழ்கி இருப்பவர்கள் தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்களில் வேறு எவரும் இல்லை என்றும் சொல்லிவிடலாம்'' (படித்திருக்கிறீர்களா?- கன்னியாகுமரி-க.நா. சுப்பிரமணியம் சுதேசமித்திரன் ஜனவரி 17.1957)

மனித மன உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு உளஇயல் தளத்தில் அமைந்த சிறுகதைகள் பல. முதியவர்களின் மனப்போக்கு, கணவர்-மனைவி உறவு கணவனை இழந்த பெண்களின் மனக்குமுறல்கள், குழந்தைப் பருவம் முடிந்து, இளமைப் பருவம் தொடங்கும் காலத்தில் ஏற்படும் உள்ளக் கிளர்ச்சிகள் மற்றும் குழந்தை மனம் இவற்றை த.நா.கு. அவருக்கே



உரிய தனிப்பட்ட கோணத்தில், சிறுகதைகளில் வடித்துள்ளார்.

குழந்தை மன உணர்ச்சிகளை மையமாக கொண்டுள்ள சிறுகதைகளில் சவலை, குயில், தபால்காரன், நாதசுரம் இவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். **சவலை** சிறுகதையில், இரண்டு வயது கூட நிரம்பாத குழந்தை தனக்குப் போட்டியாக, அம்மாவின் அன்பினை பங்கு போட மற்றொரு ஜீவன் வந்து சேர்ந்துள்ளதை பொறுக்க இயலாது. ''அன்போடு அணைப்பது போல் பாவனை செய்து, ஆத்திரத்தைக் காட்டியது''

*(சவலை)*

வெளி உலகின் கவர்ச்சியிலும், இயற்கையின் ஈர்ப்பிலும், நாட்டம் கொண்ட குழந்தை உள்ளம், நான்கு சுவர்கிடையே கட்டிப் போட்டு, வரட்டுப் பாடங்களைப் புகட்டும் போது, படும் துயரினை வடித்துள்ளார். பிஞ்சு மனங்களில் உருவாகும் கற்பனை ஆற்றல், யதார்த்த வாழ்வில் வலிந்து அவர்களைப் புகுத்த முயலும் போது எப்படி நசித்து போகிறது என்பதை உருவகப்படுத்தியுள்ளார் **குயில்** சிறுகதையில்.

''அந்தக் குயிலா? கைக்குள் சிக்குமா? மாயாவியாயிற்றே... குயிலைப் பிடிப்பதைவிட, உங்கள் குழந்தையை அத்துடன் பேசாமல் இருக்கும்படி பிடித்து வைப்பதே நலம். இந்த பழம் பாடத்தைத் திருப்பிப் படிக்கச் சொல்லுங்கள்.

அப்பாடா, பழைய பாடத்தைத் திருப்பிப் படிடா'' (படித்துக் கொண்டே சிறுவன் தூங்கி விடுகிறான்.)

''பையன் இதயத்தில் பதுங்கி இருக்கும் குயிலைக் குத்தப் போகிறேன்.

''என் கண்ணுக்கு குயில் தென் படவில்லையே''.

''உன் பிள்ளையின் இதயத துடிப்பும் குயிலின் இறகுத்துடிப்பும் ஒன்றே... அதோ குயில்...''

(குறித்த இடத்தில் வாத்தியார் எழுது கோலை வீசுகிறார். சிறுவனுடைய இதயத்தை தாக்குகிறது. அதன் கூர்மை. அப்போது திடுமென குயில் தோன்றுகிறது. ஆனால் பிள்ளை மட்டும் அசையவில்லை)

*(கற்பவல்லி பக் 46)*

ஊரில் எல்லோருக்கும் தபால் வருகிறது... தன் பெயருக்கு ஒரு கடிதம் கூட வரவில்லையே என்று ஏங்கும் கிராமச் சிறுமிக்கும், தபால்காரனுக்கும் ஏற்படும் பாசப் பிணைப்பைச் சித்தரிக்கிறது **தபால்காரன்** சிறுகதை. குழந்தை மனத்தின் ஏக்கம் இக்கதையின் கருப்பொருள்.

கணவன், கடனை அடைப்பதற்காக வைத்திருந்த பணத்திலிருந்து, குழந்தையின் ஏக்கத்தை தணிக்க, அவன் கேட்ட கருப்பு கலர் பூட்ஸ் வாங்க பணத்தை எடுத்து காலணி வாங்கிய பின், கணவன் கடன்காரனுடன் வந்து, தொகையைக் கேட்கும்போது, எடுத்து வைத்திருந்த பணத்தில் ஒரு பகுதியை குழந்தைக்காக, பூட்ஸ் வாங்க செலவு செய்ததை அறிந்து மிருகமாக மாறுகிறான். நோய்வாய்ப்பட்டு தேறிவந்த குழந்தையை, அதனுடைய காலணினாலேயே அடிக்கிறான். பின்னர் தன் செயலைக் கண்டு மனம் வெதும்பி கண்ணீர் விடுகிறான்.

''சாமியின் முதுகைத் தடவிக் கொண்டே இருந்தாள். அடியின் தழும்பு தட்டுப்படும போதெல்லாம் அவன் அங்கம் சிலிர்த்தது. கேவல் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கியது, குழந்தைக்கு. அவன் அயர்ந்து தூங்கிவிட்டான். சங்கரன் நின்றபடியே ''ரொம்பப் பட்டுவிட்டதா? ஏனோ என் புத்தி பிசகிவிட்டது'' என்று வருந்தினான். '' *(இக்கரையும் அக்கரையும் பக்.57)* குழந்தையின் மன ஏக்கம், மன உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளும தாய், தன் குழந்தையின் மன உணர்ச்சியைப் புரிந்துக் கொள்ளாமல், பின்னர் வருத்தப்படும் தந்தை இவர்களின் உணர்ச்சி பெருக்கினை வர்ணிக்கிறார் **நாகசுரம்** சிறுகதையில்.

குழந்தை மனத்தின் மற்றொரு பரிமாணத்தை **'பிள்ளை விடு தூது'** கதையில் காணலாம். வீட்டுக்கே வராமல், தன் ஆசை நாயகியுடன் தங்கியுள்ள தன் அப்பாவைக் காண வேண்டும் என்ற அவா, தந்தையின் பிரிவால் மனம் வருந்தி படுக்கையில் விழுந்து கிடக்கும் தாய் இவர்களைக் கண்டவுடன் குழந்தை மனத்தில் புரிந்தும் புரியாத உணர்ச்சி மேலிடுகிறது.

''ரமணியின் குழந்தை புத்திக்கு 'என்னவோ வீட்டில் விபரீதம் நடந்து, எவளோ அப்பாவை வீட்டுக்க வரவிடாமல் தடுக்கிறாள்' என்ற அளவில் ஊகித்துக் கொள்ள இடம் தந்தது... 'அப்பா அவள்கிட்டே ஏன் இருக்க வேண்டும்? அம்மா கோபித்துக் கொண்டாளா? எனக்கு பாட் பந்து எல்லாம் வாங்கித் தருகிறேன் என்று அப்பா சொல்லிவிட்டு போனாரே, அம்மா கூட அப்போது



சிரித்துக் கொண்டே அப்பாவுடன் பேசினாளே...?

அம்மாவையே போய் கேட்டுவிடலாம் என்று ரமணிக்குத் தோன்றியது...

கணவன் மனைவியிடம் ஏற்பட்டுள்ள விரிசல் எந்த அளவுக்கு குழந்தை உள்ளத்தை பாதிக்கிறது என்பதை சித்தரித்துள்ளார். த.நா.கு. இந்தக் கதையில்.

''மூலைக்கு ஒன்றாக விளையாட்டுச் சாமான்கள் சிதறிக் கிடந்தன. ரமணிக்கு எந்த விளையாட்டிலும் மனம் செல்லவில்லை. வேண்டிய விளையாட்டுச் சாமான்களை அப்பா வாங்கி வைத்திருந்தார். சேணம் பூட்டிய மரக் குதிரை குப்புற விழுந்துகடந்தது... மேஜை மீது ரயில் வண்டி சரிந்திருப்பதைக் கூட லட்சியம் செய்யவில்லை அவன்.. 'செல்லுலாய்ட்' சிப்பாய் கைகால் மடங்கி சோபாவின் கிழே படுத்திருந்த கண்ணராவியான காட்சி. அவனைத் தூக்கிவிட ரமணி போகவே இல்லை. உதடு அடிக்கடி வளைந்து துடித்தது. அப்பாவை ஏன் காணோம்?''

*(நீலாம்பரி... பக்.62)*

பெரியவர்களின் நிஜ உலகில் தடுமாற்றம் ஏற்படும்போது, மெய் என்ற நினைத்து, குழந்தைகள் ஆசைகொள்ளும், அவர்களின் பொம்மை உலகையும் கூட அது பாதிக்கும என்பதை தனக்கே உரிய நடையில் ஒரு சொல் ஓவியமாக புனைந்து காட்டுகிறார்... குமாரஸ்வாமி.

**'குரூர உலகம்'**- என்ற மற்றொரு கதையில் பச்சை என்ற இளம் சிறுவனுக்கும் பொன்னி என்ற சிறுமிக்கும், வெள்ளை என்ற பசுமாட்டுக்கும் இடையே ஏற்பட்ட அன்பின் பிணைப்பினை வருணிக்கிறார். பச்சையின் தந்தை, வறுமையினால் கசாப்புக் கடைக்காரன் என்று அறியாமல், அந்தப் பசுவை ஒருவனுக்கு விற்று விடுகிறான். பல நாள் பழகிய வெள்ளையிடமிருந்து பிரிந்ததால் பச்சை, பொன்னி இவர்களின் குழந்தை உள்ளத்தில் ஏற்பட்ட பாதிப்பைக் காட்டுகிறார்.

''வெள்ளையுடன் அவர்கள் உலாவிய இடமில்லாம் வெரிச்சென்றிருந்தன. தூரத்தில் கரும்புகைச் சுருள் தென்பட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் இருப்புப்பாதை மீது ஒரு சாமான் வண்டி சென்றது. பெரிய பெட்டிகளில் ஜன்னல் மூலமாகச் சில மாடுகள் தலையை நீட்டுவது தெரிந்தது...

''போய் வா. அம்மா, வெள்ளையம்மா!'' என்று கடைசியாகத் தங்கள் வெள்ளையிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு, அக் குழந்தைகள் வெளி உலகின் ஒரு வடிவமான ரெயில் வண்டியை வெறித்துப் பார்த்தார்கள். உலகத்தின் மீது அவர்களுடைய மனம் பகை கொண்டது.

*(தமிழ்நாட்டுச் சிறுகதைகள் 3வது தொகுதி பக்கம் 97-98)*

மனித உள்மன உணர்வுகளைக் கையாளும்போது, குறிப்பாக ஆண்-பெண் உறவு, கணவன் மனைவி உறவினைச் சொல்லும் போது, குறிப்பாக பால் உணர்வு விஷயங்களைக் கூறும் போது த.நா.கு. வின் கதைகளில் கொச்சைத் தனம் அற்ற கலை உணர்வினைத்தான் நம்மால் காணமுடியும். **நீறுபூத்த நெருப்பு** சிறுகதையில் கணவனை இழந்த சிவகாமுவின் மனத்தில் எழுந்த காதல் உணர்ச்சியை நுட்பமாக கூறுகிறார் ஆசிரியர். சிவகாமு தன்னுடைய அண்டை வீட்டுக்காரி கனகத்தின் வற்புறுத்தலின் பேரில் அவள் சார்பாக, கனகமே அவள் கணவனுக்கு எழுதுவது போல் கடிதம் வரைகிறாள். கடிதம் வரையும்போது, தன் கணவனுக்கு கடிதம் எழுதி பதிலுக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருந்த அந்த நாட்களின் நினைவோட்டம் அவள் மனதில். தன் மனதில் உள்ளதையெல்லாம் கொட்டி கடிதம் வரைகிறாள்.

''பழைய அனுபவ வேகத்தில் மடமடவென்று கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள். இதுவரை மனதில் பதுங்கியிருந்த ஒரு இச்சை விடுதலைப் பெற்று எழுந்தது. ஆனால் உள்மனதில் நாம் ஏதோ தவறு செய்துவிட்டோமோ என்ற பயம். சிவகாமு விரல்மேல் நடந்து சென்றாள். ஸூட்கேசை திறந்து தான் எழுதிய கடிதத்தை இடுக்கிக் கொண்டு. யாருமே இராத குழாய் முற்றத்துக்கு வந்தாள். பின் பக்கமாக ஓர் ஆள் வந்து அவள் கையைப் பிடித்தக் கொண்டான்.

''என் கையைத் தொடாதீர் விட்டு விடுங்கள்... நான் திருடி என்ற எண்ணமா...?''

''நீ எழுதிய கடிதம்தானே... இந்த கடிதம் ஒரு பிரமாதம் இல்லை எனக்கு... நீயே எடுத்துக் கொள். அந்தக் கடிதத்தின் மூலமாக எனக்குக் கிடைத்த இன்பம் என்றென்றும் என் மனத்துள் பதிந்து கிடக்கும்.. அதை உன்னால் கவர்ந்து கொள்ள முடியாதே.''

சிவகாமிக்கு மார்பை அழுத்துவதைப் போன்ற வேதனை உண்டாயிற்று. அவள் திணறிக் கொண்டு ஐயோ விட்டுவிடுங்கள்



என்னை இத்தோடு...

''அண்ணியப் புருஷனான எனக்கு கடிதம் எழுத எவ்வளவு துணிவு உனக்கு? வெட்கமாய் இல்லை...? என்றான்.

அவள் திமிறிக் கொண்டு ஒரு பக்கமாக ஓடினாள். மூச்சே நின்று விடும் போல் இருந்தது அவளுக்கு. ஓவென்று அவள் மூளையில் இரைச்சல் கேட்டது.

''சிவகாமு எழுந்திரு... இன்றைக்கு என்ன அயோமயமாய் தூங்ககிறாய்?'' என்ற கிருஷ்ணஸ்வாமியின் குரல் அவள் துயிலைக் கலைத்தது.''

*(சந்திர கிரகணம் 74-75 அலயன்ஸ் 1946)*

கணவனை இழந்த சிவகாமுவின் அடிமனதில் நீறுபூத்த நெருப்பாய் கனன்று கொண்டிருந்த காதல் வேட்கை கனவாக உருவெடுத்து அவளை வாட்டியதை உளவியல் தளத்தில் திறம்படி படைத்திருக்கிறார்.

**'திரைமறைவில்'** மற்றொரு வித்தியாசமான அன்பை கணவன் மனைவியிடையே நிலவும் உறவினைச் சொல்கிறது. நோய்வாய்ப்பட்டதால் உடல் அழகு தேய்ந்த கமலா தான் கணவன் தன்னைவிட்டுவிட்டு வேறு கல்யாணம் செய்து கொள்வானோ என்ற அச்சத்தினால், ஹிஸ்டிரியா நோயினால் பாதிக்கப்பட்டாள்.

''கமலா கூப்பிட்டாயா? என்ன வேணும்?'' என்றார். உடலை முறித்துக் கொண்டே.... அவள் எலும்பு எடுத்த தன் இரு கைகளையும் தூக்கினாள். ''எங்கே இருக்கிறீர்கள் என்றாள் நிஸ்திராணையாக... அறையில் மூன்றாவது மனுஷ்யன் இருப்பதைக் கூடப் பாராமல் அவர் அவளைத் தழுவிக் கொண்ட காட்சி எனக்கு புதியதோர் உலகையே காட்டியது. சரீர இச்சையை மீறிய தூய காதல் ஒளிரும் அற்புத உலகை.''

*(சந்திர கிரகணம்-திரைமறைவில் பக். 162)*

**'தோற்றவர்வென்றார்'** மற்றொரு சிறுகதை கணவன் மனைவி இடையே ஏற்படும் ஊடல், இருவரிடையே காதல் பிணைப்பினை வலுவாக்க எவ்வாறு அடித்தளமாக அமைகிறது என்பதை காட்டுகிறது. கருத்து வேறுபாட்டினால் பேச்சுக் குறைந்து அவசியமானதை ஒரு சீட்டில் எழுதி, விடுவான் சாரங்கன். பதிலுக்கு

எதாவது சொல்ல வேண்டுமானால், மற்றொரு காகிதத்தில் சண்பகம் எழுதுவாள். இப்படியே ஊடலின் இருக்கம் அதிகமாகியது. ஆனால் உள்ளுக்குள் இருவருமே இந்த நுட்பமான நாடகத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஏங்கினர். சாரங்கன் உடல் நலம் பாதிக்கப்பட்டு ஒரு நாள் இரவு வெகு நேரம் கழித்து வீடு திரும்பினான்.

''உம்...உம்.. தலைவெடித்துப் போகிறது... அப்பா முடியவில்லை'' என்று சாரங்கன் முனகுவது சண்பகத்தை என்னவோ செய்துவிட்டது. இருந்தும் செண்பகம் வெற்றுத் தாளைத் தேடினாள். 'உங்களுக்கு என்ன உடம்பு... இப்படி ஏன் அரற்றுகிறீர்கள்' என்று எழுதி கேட்பதற்கு அவளுக்கே வெட்கமாகிவிட்டது. அவள் பிகுவெல்லாம் பறந்தோடிவிட்டது. சாரங்கனை மெல்ல அணைத்துக் கொண்டாள். அவனுடைய இதயத்துடிப்னை அவளுடைய மார்பு புரிந்துக் கொண்டது.

*(கல்கி 1963)*

**இது சகஜம்தானா?** - சந்தர்பவசத்தால் திருமணமான கணவன் மனைவி இருவரும் தங்கள் பழைய காதலை மறக்காமல் இருக்கின்றனர். ஆனால் ஒருவருடைய காதல் விவகாரம் மற்றவருக்குத் தெரியவில்லை. தன்மனைவிக்கு வந்த கடிதத்தைப் பிரித்துப் படிக்கும் கணவனுக்கு, மனைவியின் பழைய கதை தெரிகிறது. அதே நேரத்தில் பழைய காதலைக் குறித்து ஏங்கும் அவனுடைய மன உணர்ச்சியைக் காட்டுகிறார்.

''பகலெல்லாம் உழைத்துவிட்டு, அலுத்துப் போய் இரவில் மெல்ல படுக்கையில் சாயும்போது, ஆறுதலுக்கு நான் அணைத்துக் கொள்ளும் என் மனைவியின் மனசெல்லாம் எங்கோதானே செல்கிறது. ஆவிபோன வெறுங் கூட்டையல்லவோ நான் அனுபவிக்கிறேன்.. என் விஷயமட்டுமென்ன... கமலாவிடம் உயிரும் என் மனைவி ஆனந்த வல்லியுடன் உடலுமாகத்தான் இருக்கிறது...''

*(இது சகஜம்தானா? ஆனந்தவிகடன் ஜனவரி 1950)*

நடுவயதைக் கடந்த பிறகும், அழகுகுலையாமல் இருக்கும் கோகிலத்திற்கு, அவளுடைய அழகே மனவேதனையைக் கொடுக்கிறது. மகளே அவளுடைய தாயின் அழகைப் பொறுக்கமாட்டாது பொறாமைகொள்ளும் விசித்திர போக்கினை



ஆராய்கிறார் **'மன்னிப்பு'** சிறுகதையில்:

''ராணி உங்கம்மாதானா இவள்? இவ்வளவு இளமையும் அழகமாய் அவரை நான் பார்த்ததில்லை இதற்கு முன்னால்'' என்றான் விஜயன் ராஜியை நோக்கி.

''இப்பொழுது பார்த்தீர்களோ இல்லையோ? அழகி அவளா? நானா?'' என்று கூறியபோது ராஜியின் கண்களில் வெம்மைத்துளிகள் ஊறின. தன் கணவன் இவ்வாறு தன் தாயின் அழகைப் பாராட்டியது மின்னலைத் தீண்டியதைப் போன்ற விதிர்ப்பபை தந்தது அவளுக்கு''.

*(மன்னிப்பு கலைமகள் ஜனவரி 63)*

மனித மனதில் தோன்றும் மற்றொரு முக்கிய உணர்வு சந்தேகம். அதன் பரிமாணங்களை திறம்பட இயம்புகிறது **புயல்** எனும் சிறுகதை. உடல் நலமில்லாமல், சீக்கிரமே வீடு திரும்பும் சுந்தரம், மாடிப்படியேறி வீட்டுக்குள் வரும் போது, வீட்டு வாயிற்கதவு படீரென சாத்தப்படுகிறது. வராந்தாவில் ஈசிசேரில் சாய்ந்து கொள்கிறான்... சீக்கிரம் மனைவி கதவைத் திறப்பாள் என்று நினைத்தான். 10 நிமிடங்கள் கழிந்தன.

''அறையின் பக்கமாகத் திரும்பி ''கமலா, கமலா'' என்று கூப்பிட்டான். ஆனால் அறையினுள் சிலுங்கி சிலுங் என்ற வளையல் குலுங்கும் சத்தமும் எட்டியது... யோசனைகள் கும்பு கூடி சுந்தரத்தின் மூளையைக் கொதிக்கவைத்தன. ''எனக்குத் தெரியாமல் ஏதோ ஒரு விஷயத்தை இவள் மூடிவைக்கப் பார்க்கிறாள், என்ற விபரீத சந்தேகம் அவன் மூளையைத் துளைத்தது. எப்பொழுதும் ஒரு சந்தேகம் வந்தால் அதன் பின்னால் மற்றொன்று இன்னும் பல விதமான எண்ணங்கள் புகுந்துவிடும்''.

மனைவியின் கற்பையே சந்தேகிக்கும் அளவுக்கு வந்து விடுகிறான் சுந்தரம். பட்டினத்தார் பாடிவைத்த பாடல் கூட அவன் நினைவுக்கு வந்துவிடுகிறது. வாயில் கதவு திறப்பதற்குள்..

*(மணிக்கதைகள் பக்.16-23 கலைமகள் வெள்ளிவிழா வெளியீடு)*

இந்தச் சிறுகதை பற்றி கி.வா.ஜகந்நாதன் இவ்வாறு கூறுகிறார்:

''இந்த இதழில் மூன்று கதை ஒரே ஆரம்பத்தோடு வெளியாகி இருக்கின்றன. 'கதவைப் படீரென்று சாத்தினாள்' என்ற

வாக்கியத்தைக் கொடுத்து, அவரவர்களுக்குத் தோன்றிய வகையில் ஒவ்வொரு கதை எழுதி உதவும் படி ஸ்ரீகுமாரசாமி, மாயாவி, அகிலன் என்னும் மூன்று கிறுகதை எழுத்தாளர்களையும் கேட்டுக் கொண்டோம்... ஆனால் இந்த மூன்று கதைகளிலும் ஓர் அதிசய ஒற்றுமை நிலவுகிறது. நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தும் இந்த மூவரும் கதா நாயகர்களுக்கு ஒரே பெயரையே (சுந்தரம்) சூட்டியிருக்கிறார்கள்''.

*(கி.வா.ஜ-மணிக்கதைகள் முன்னுரை)*

சந்தேகத்தின் மற்றொரு பரிமாணத்தை **'சிறைகாப்பு'** சிறுகதையில் நாம் காணலாம். மேல் தளத்தில் வசிக்கும் முதியவர் கிருஷ்ணய்யாவின் இனிய வீணாகானத்தில் மனதைப் பரிகொடுக்கிறாள், மணியின் மனைவி நளினி. அவள் அடிக்கடி மாடிக்குச் சென்று வருவது மணியின் மனதில் சந்தேகப் புயலை உருவாக்குகிறது. அவளது 'கற்பினை காக்கும்' பொருட்டு தான் அலுவலகம் செல்லும்போது, மேல் மாடிக்குச் செல்லத் தடையாக வாயிற்கதவை பூட்டிவிடுகிறான்.

''வழக்கம்போல், பகலில் அவளுடன் பேசி அளவளாவ வைணிகர் மாடியிலிருந்து வந்தார். கதவு வெளிப்புறம் பூட்டப் பட்டிருப்பதைக் கண்டார். சற்று நேரம் கதவின் முன் நின்றார். அவர் திரும்பிப் போக யத்தனிக்கையில், ''உங்களைத்தான் நான் உள்ளே இருக்கிறேன். நான் உங்களுடன் பேச் கூடாதாம். என்னுடைய கணவரின் கட்டளை. என்மேல் நம்பிக்கை இராமல் என்னை இல்லத்திலேயே சிறை வைத்திருக்கிறார்''.

சாளரத்தின் பக்கமாக வந்து, ''நான் தவறாக நடந்துக் கொள்வில்லையே... உன்னை நான் பார்ப்பது தவறா? தவறுதான்... இனிமேல் நான் கீழே அடி எடுத்துவைக்க மாட்டேன்!'' என்றார் ஏக்கத்துடன்.

மற்றொருநாள் மாடியில் தொப்பென்ற ஒரு ஓசை கேட்கிறது. அந்த முகாரி ஆலாபனம் அடங்கிவிடுகிறது. வீணையை மீட்டும் விரல்கள் துவண்டுவிழுகிறது. இனி அந்த வாயில் கதவுக்கு பூட்டு தேவை இல்லை.

*(சிறை காப்பு சுதேசமித்திரன் 1967)*

தமிழ் இலக்கிய ஆய்வாளர் மு. வரதராசனார் த.நா.கு கதைகள் பற்றி கூறுகிறார்: ''நாட்டில் நிலவும் அரசியல் கொந்தளிப்பிலோ, சீர்திருத்த வேகத்திலோ ஈடுபடாமல், அமைதியாக ஒரு மூலையிலிருந்து, மக்களின் வாழ்க்கையைக் கண்டுணர்ந்து.. சொல் ஓவியமாக ஆக்கித்தரும் கலை உள்ளம் சிலருக்கு இயல்பாகவே அமைகிறது.. த.நா.குவின் கதைகளும் அப்படிப்பட்டவைகளே''.



*(தமிழ் இலக்கிய வரலாறு பக். 308,311)*

**கதைக்குக் கிடைத்த விஷயம்** - வயதில் பல வருடங்கள் மூத்த கணவனுக்கும், அவனுடைய இளம் மனைவிக்கும், இருவருக்கும் நண்பனான ஒரு இளைஞனுக்கும் உள்ள உறவினை மையமாகக் கொண்டு வனையப்பட்டது. சதானந்தம் புகழின் உச்சியை எட்டிப் பிடித்து அங்கேயே தங்கிய தங்க விரும்பும் ஒரு எழுத்தாளர். தன்னுடைய எழுத்துக்களை ரசித்த இளம் ரசிகையையே மணந்து கொள்கிறார். எழுத்தின் வேகத்தில் எழிலென நின்ற தன் மனைவியை மறந்தார்.

''அன்று மாலை நேரம், அவர் மாடி ஏறி தம் அறைக்குச் செல்லுகையில் அசைப்பில் அவர் கண்ணில் பட்ட ஒரு காட்சிதான் அவருக்கு ஒரு தீவிர உணர்வினை தட்டி எழுப்பியது. இளம் நண்பர் மதன கோபாலும், ஆனந்தாவும் உடல் உராய நெருங்கிப் பழகுவதுதான் அவர் மனத்தை உறுத்திய முள்ளாகியது. இமைப் பொழுதுதான் அந்த திக்கிலிருந்து தன் கண்களை திருப்பிக் கொண்டார். ஆனந்தா ஐந்து வருஷத்துக்கு முன் அவரை உள்ளூரக் காதலித்தவள். அவருடைய இலக்கிய ரசனைக்குப் பரிசாக தன்னையே ஈந்தவள். இப்போது தாம் தனி. அதனால் என்ன? அவளும் அந்த இளைஞனும் அணித்தாக இழைவதில் என்ன தவறு? மனித உள்ளங்கள் தானே அவற்றின் ஆழத்தை யாராலும் அறிய முடியாது.

சதானந்தத்திற்கு கதைக்கான நல்ல கரு கிடைத்துவிட்டது. பெரியதான ஒரு இலக்கிய சிருஷ்டியில், தம்மையும், தம் மனையாளையும், சூழ்ந்திருக்கும் உலகையும், தம் வாழ்வினையும் அறவே மறந்தார்.''

*(கதைக்குக் கிடைத்த விஷயம்)*

**மழையும் வெயிலும்** - சிறுகதையில் சமுதாயத்தில் புரையோடியுள்ள சில வழக்கங்களிலிருந்து, வெளிவர முடியாமல், பொருளற்றதாயினும் வழக்கத்தில் வருவதால் அவற்றை செய்ய முற்படுகின்றனர் மக்கள் என்பதைக் காட்டியுள்ளார். மினா ஒரு பைத்தியக்காரனுக்கு விதிவசத்தால் வாழ்க்கைப்படுகிறாள்.

இல்லத்திலிருந்து அடிக்கடி வெளியே சென்று பல ஆண்டுகளுக்குப் பிறகே திரும்பி வருவது அவன் வழக்கம். மீண்டும் அவன் காணாமல் போய் விடுகிறான். பல ஆண்டுகள் ஓடிவிட்டன. அவன் திரும்பவே இல்லை.

தன்னுடைய பைத்தியக்காரச் சித்தப்பா, டவுனில் ஒரு சாலை விபத்தில் மரித்த செய்தியை பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் வெளியிடுகிறான், பரசு.

''சுமங்கலியின் வாழ்வுக்கும் அமங்கலியின் வாழ்வுக்கும் நமது சமுதாயத்தில் ஆகாச பாதாள வித்யாசம் இருக்கிறதே. இதை வெளியிட்டால், சித்தியின் தாலியை அறுத்து பண்ணாத கோலமெல்லாம் செய்வார்களே புருஷன் உயிருடன் இருக்கும்போது வேண்டியது பட்டாளே... அவன் செத்தாலும் ஒன்றே இருந்தாலும் ஒன்றே.. என் சித்தி நித்ய சுமங்கலி'' என்றான் பரசு.

''இத்தனை நாள் மூடிவைத்ததை இன்று ஏன் வெளியிட்டாய்?'' என்றேன் நான்.

''இன்று சித்தியின் புருஷன் காணாமல் போய் பன்னிரண்டு வருஷங்கள் பூர்த்தியாகின்றன. சாஸ்திரத்தின் படி, பதிபத்னிகள் ஒருவரை ஒருவர் பார்க்காமல் இருந்தால், கணவன் உயிருடன் இருந்தபோதும் அவனுக்கு கடசிராத்தம் செய்து விடவேண்டும். சித்திக்கு இன்றைக்குத் தான் விதவைக்கு செய்ய வேண்டிய 'விமரிசை'களையெல்லாம் செய்து முடித்து வெள்ளாடை கொடுத்தார்கள்'' என்றான் பரசு.

*(மழையும் வெயிலும்-சந்திரகிரகணம் பக். 151-152)*

சமுதாயத்தில் வாழும் வறியவர்கள் பால், பரிவை, பல சிறுகதைகளில் நாம் காணலாம். உழைப்பில் உருவாக்கிய, நெல் முத்துக்களை அள்ளி நிலத்துச் சொந்தக்காரனுக்குக் கொடுக்கும்போது, உழவன் முருகனுக்கு ஏற்பட்ட மன உணர்ச்சிகளை நம் கண் முன் கொண்டு வருகிறார் த.நா.கு **'கவியும் சில்பியும்'** என்ற கதையில்.

''தமுக்குக் கொட்டும் ஓசை. வசூல் ஆரம்பித்துவிட்டது. விதி எளிய கவியைப் பார்த்துச் சிரித்தது. கழனி விளைந்தாலும் குடும்பம் பட்டினி 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்று பாடிய வள்ளுவன் இப்பொழுது இல்லையே! இருந்தால் வேறுவிதமாய்ப் பாடியிருப்பான். உழவு செய்ய வேண்டியவன் ஒருவன். உட்கார்ந்து



உண்பவன் மற்றொருவன். முருகன் கஷ்டப்பட்டதனால்தானே, கல்யாண சுந்தரம் சுகமாய்ச் சாப்பிட முடிகிறது? ஆகவே 'உழவுக்கு வந்தனை செய்வோம்'. தான் விளைவித்த நெல்லைக் கொடுக்கும்போது கவி உழவன் கண்ணீர் சிந்தினான். இத்தனை நாள் கைமடங்காது இவன் இயற்றிய அதிசய காவியத்தின் இன் சுவையல்லவா அது. இவனுடைய ரத்தத்தின் செம்மை அதன் பொன் நிறத்தில் கலந்திருந்தது. இவன் களிப்புடன் பாடிய பாட்டுக்கள் தானியம் அளக்கும்போது அதன் சலசலப்பில் ஒலித்தது. இவன் நினைத்ததெல்லாம் பொய்யாகியது. இவன் கண்டது வெறும் பொன்னிறக் கனவே.

சாவி இருந்தும் கதவைத் திறந்து நுழைய இவனுக்கு உரிமை இல்லை. புதிய தோரணையில் சென்றன இவனுடைய கவிதைகள்: வித்திலிருந்து மூளை, மூளையிலிருந்து செடி, செடியிலிருந்து பொன்னிறக் கதிர், கதிரிலிருந்து கண்ணீர்..''

மிண்டும் முருகன் பழைய பிரகாரமே மண்ணில் காவியம் வரையலானான். நம்பிக்கை வித்தை ஊன்றினான். பண்ணையில் பள்ளு பாடினான் ஓர் உழவன், ''எல்லோரும் ஓர் குலம்'' என்று. ஏர் அடிப்பவன் சொக்கி நின்றான். அண்டை வெட்டும் கருப்பன் தாளத்திற்கு ஏற்ப மண்வெட்டியால் குத்துகிறான். கவை அடிக்கும் காத்தான்வீசி வீசித் தானியத்தை கோபுரம் போல் குவிக்கிறான் வற்றலாக இருக்கும். கவி உழவன் முகத்திலும் சிரிப்பு!

*(கற்பவல்லி பக். 50,52)*

மற்றொரு கதை **'புண்ணி க்ஷேத்திரம்'** ஏழை முனியன் சாகும் தருவாயில் இருக்கும் மகனுக்காக உயிர் பிச்சை கேட்டு பிரார்த்தனை செய்து கொண்டான். கடவுளின் திருக்கோலத்தைக் கண்டால் மனம் ஆறுதல் அடையுமோஎன்ற நம்பிக்கையில் அர்ச்சனைத் தட்டுடன் ஆலயத்தினுள் நுழைந்தான் முனியன்.

''உன்னதமான கர்பகிருகம்; கடவுளார் விசித்திரக் கோலம் பூண்டிருந்தார். சென்னியிலிருந்து ஆவுடையார் வரைக்கும் புரளும் பெரிய தண்டு மாலை, வயிரம் போல் ஒளிவிடும் வெள்ளி திரிபுண்ட்ரபட்டை, திருநுதலில் அதற்கேற்ற சந்தனப்பொட்டு நெய்யாடிய மேனி மலர்களுக்கு இடையே மினுமினுத்தது. மூச்சு திணறும் படியான ஜன நெருக்கம். தேங்காய்கள் பட்டென்று உடையும் ஓசை, கற்பூரம் காட்டும்போது பளபளவென்று கன்னங்களில் போட்டுக் கொள்ளும விசித்திர சப்தம்; வெளியே

தேவதாஸிக்கும் மடைப்பள்ளி பரிசாரகனுக்கும் வாய்ச்சண்டை. இந்த அல்லோல கல்லோலத்திற்கு இடையே ஏழை முனியனை யாருமே கவனிக்கவில்லை. நின்று நின்று பார்த்தான். கால் ஓய்ந்துவிட்டது. வீட்டில் மகன் படுக்கையில் துன்பப்படும் காட்சியே கண்முன் எழுந்தது. இந்தப் பக்கம் தட்டுத் தட்டாக காசு குவிந்து கொண்டே இருந்தது. பெரிய மனுஷ்யர்களின் வீட்டுப் பெண்களுக்குச் சேவை செய்வதிலேயே அர்ச்சகர்கள் கவனமாயிருந்தனர். வழவழ கொழகொழவென்று சில நாமங்களைச் சொன்னார்களே தவிர காசில் தான் அவர்களுக்குக் கண். எல்லோரும் கனதனவான்கள் பின்னாலேயே சென்றனர். ஏழை முனியன் காத்திருப்பதை யாரும் கவனிக்கவில்லை.

ஸ்வாமி தரிசனம் செய்ய வந்தவர்கள் ஒவ்வொருவராக வெளியேறினர். சந்நிதி ஒரே சேராக இருந்தது. மறைவில் முனியன் நிற்பதைப் பார்த்து சோமு குருக்கள், "இங்கே ஏண்டா நிற்கிறாய்? போ வெளியே... அபிஷேக வேளையாச்சு'' என்று கடவுளைத் திரையால் மறைத்துவிட்டார்.

அஷ்டோத்திரம் முடிந்தது. அம்மன் கழுத்திலிருந்த முல்லை மாலையைக் கழற்றி சோமு குருக்கள் இளித்துக் கொண்டே ஸ்வர்ணத்தின் கழுத்தில் போடும் சமயம், தர்மகர்த்தா அதை வெடுக்கென்று பிடுங்கித் தாமே அவள் கழுத்தில் இட்டு அழகு பார்த்தார். ஏராளமான பிரசாதங்கள் தாசியின் பின்னால் சென்றன. மூலஸ்தானத்தின் கதவுகளுக்குக் குச்சியிட்டார்கள். இனிமேல் நிற்பதில் பிரயோஜனமில்லை. முனியன் உள்ளத்துள் ஒரு கோயில் திறந்தது. அங்கே காட்சியளித்த கடவுள் எளியவர்களின் தெய்வம். மூடிக்கிடக்கும் சிவனது சந்நிதியை நோக்கித் தலை வணங்கினான். கடவுளிடம் அவன் என்ன முறையிட்டுக் கொண்டானோ, அது நமக்கு எப்படித் தெரியும்?

*(கற்பவல்லி பக். 24,25)*

பகட்டும், போலித்தனமும் பணத்தாசையும் இறைவனது சந்நிதியிலே தாண்டவமாடும்போது, ஏழை முனியனின் தீவிர பக்திக்கு அங்கே இடம் இருக்க வாய்ப்பில்லை என்பதை வஞ்சப் புகழ்ச்சியாக கோயில் சந்நிதியல் நடைபெறும் கோலாகலத்தை வருணிக்கிறார். அத்தகைய சூழலில், 'முனியனை யாரும் கவனிக்கவில்லை'. என்று மூன்று முறை வெவ்வேறு இடங்களில், ஆசிரியர் குறிப்பிட்டு டிராமாடிக் ஐரனி (Dramatic Irony) உத்தியை



பயன்படுத்தியுள்ளது. புருட்டஸ் இஸ்ய ஹானரபில் மேன் என்று ஜூலியஸ் சீசர் நாடகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வரிகளை ஒப்பு நோக்க தூண்டுகிறது. இதே உத்தியை **சந்திரமதி** சிறுகதையில், திறம்பட அமைத்துள்ளார் ஆசிரியர். வைத்தியலிங்கம் என்ற தனவானால், நல்ல வாழ்வுகிட்டும் என்று நம்பி தன் கற்பை அவனிடம் அடகு வைத்து காசி நகருக்கு தன் காதலனுடன் வருகிறாள் வாழ்விழந்த விதவை சொர்ணம். இரண்டு மாதங்களுக்குள் திரும்பி வருவதாகவும், மாதாமாதம் அவள் செலவுக்காக பணமும் அனுப்புவதாகச் சொல்லிவிட்டு, அவளை காசியில் தன் நண்பனான புரோகிதர் ஒருவருடைய வீட்டில் விட்டுச் செல்கிறான் வைத்தி. வாக்குக் கொடுத்தபடி பணம் அனுப்பவில்லை. விளைவு-?

"இதோ, நாலு மாசத்துக்கு மேலாச்சு! உன் வச்சகாரனிடமிருந்து தம்பிடி கூட வரவில்லை. பட்டிமுண்டைகளுக்கு நான் சத்திரம் கட்டி வைத்திருக்கிறேனா?'' என்றான் புரோகிதன்.

"நான் என்ன செய்வேன் சுவாமி. அநாதை..? என்றாள் சொர்ணம் பலஹீனமான குரலில்.

திக்கென்று சினம் கொழுந்துவிட்டது புரோகிதனுக்கு. விகாரமான பாணியில் விரலைக் காட்டி, ஏய் நாயே! டால் மண்டிக்குப் போனால் உன் உடம்பு இருக்கும் ஜோருக்குச் சுலபமாக இரண்டு துட்டு சம்பாதிக்கலாமே? காசியிலா ஆளுக்குக் குறைவு? என்ன பண்ணுவது உடம்பை விற்றாவது கொண்டு வா'' என்றான், நாக்கில் நரம்பில்லாமல்.

இதைச் சொன்னதும், பரந்த காசி நகரம்தான் சொர்ணத்தின் புகலிடமாக இருக்க முடியும்.

"ஹிந்துக்களின் புண்ணிய தீர்த்தம் காசி பிச்சாண்டியாய்க் கையேந்தித் திரிந்த விசுவேசுவரனுக்கு அன்னபூரணி அமுதிட்ட திவ்ய காசி. ஆனால் இந்த புதுமையுகத்தின் சாபக் கேட்டால், இன்று அந்த அன்னபூரணியும் பிச்சைக்காரியாய் மாறிப் போனாள்! இன்றோ, காசியின் ஒவ்வொரு சந்திலும் படித்துறையிலும் ஆலயத்தின் பிராகாரங்களிலும் ஆயிரக்கணக்கான அன்னப்பூரணிகளின் பரிதாபமான அழுகைக் குரல் கேட்கிறது. "அப்பா, பைசா போடேன், உன்னை விசுவநாதன் காப்பாத்துவாறு.''

*(சந்திரமதி - கற்பவல்லி - பக். 74-75)*

இந்தப்பக்கம் சொர்ணத்துக்கு வயிற்றுக் கொடுமையால் விபசாரத்தில் ஈடுபட வேண்டிய சூழல். அங்கே ஊரில் "கோயில் மண்டபத்தில் சாஸ்திரிகள் ஒருவர் நடத்தும் மகாபாரத உபன் யாசத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான் வைத்தி.

'வ்யாஸ பகவான் என்ன சொன்னார் என்றால் ஹே பீஷ்ம, எவன் ஒருவன் தன் இந்திரியங்களை வசப்படுத்திக் கொள்கிறானோ....'

*(கற்பவல்லி பக் 84)*

மேலே சொன்ன இந்த இரு வேறு காட்சிகளையும் ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி சோகத்தின் சுமை தாங்காமல் வெளிப்படும் நையாண்டியாக இந்த சிறுகதையில் அமைத்துள்ளார். திரைப்படத்துறையில பயன்படுத்தப்படும் 'பேரலல் கட்டிங்' என்ற இந்த உத்தியை 'உள்ளொன்று வைத்து புறம் ஒன்றும் பேசும்' சமூக மாந்தர்களின் தில்லுமுல்லுகளைத் திறம்படக் காட்ட, பயன் படுத்தியுள்ளார் த.நா.கு.

மற்றொரு வித்தியாசமான சிறுகதை **'கண்ணீர் துளிகள்'** சந்திர கிரகணம் தொகுப்பில் இடம் பெற்றுள்ள இந்தக் கதையில், ஒரு கலைஞனுக்கு, ஒரு கவிஞனுக்கு உண்மையான பரிசு பொன்னோ பொருளோ அல்ல, சுவைஞனிடத்தில் அவன் படைப்பு ஏற்படுத்தும் உணர்ச்சியே சிறந்த பரிசாக அமையும் என்ற கருத்தினைச் சொல்லியுள்ளார்.

"அபாரமான சங்கீதத்தைப் பாடிக் கொண்டிருந்தான் அந்த குருபியான புலவன். அவன் இருதயத்துள் ஆழ்ந்திருந்த துக்கம் அனைத்தும் நீங்கிவிட்டது. "எவ்வாறு அவனால் தன் மனவேதனையை இசை மூலமாகக் காட்ட முடிந்தது! என்று பலர் ஆச்சர்யப்பட்டனர். அதை வருணிக்க சொற்கள் இராத குறையால் பலர் கண்ணீர் பெருக்கினர் நெக்குருகினர்...

"புலவரே பரிசெல்லாம வழங்கியாகிவிட்டதே உமக்கு நான் எதைத் தருவது?" என்று விசனப்பட்டான்.

"மன்னர் பிரானே, பரிவெய்த வேண்டாம்! எனக்குப் பரிசு கிடைத்துவிட்டது". என்றான் அவ்வேழைப்பாவலன்.

"எப்போது? புலவர் மணியே!" என்று வேந்தன் வினவினான்.

"இப்போதுதான் அரசே! தங்களுடைய கண்களில் அரும்பிய



நீர்த்துளி இன்னும் உலரவில்லை. அதுவே எனக்குப் போதுமான வெகுமதி" என்றான் கவிஞன்.

அதே சமயம் கொலுவறைக்கு வெளியே பலர் வாயிலிருந்து, "இசையரசே இதோ எளிய மக்களான நாங்களும் உங்களுடைய இசையைக் கேட்டு கண்ணீர் உகுத்தோம்..." என்ற வாக்கியம் ஒலித்தது.

"இதைவிட வேறு என்ன வேண்டும் என்ற அந்த குருபி கவி உளம் மகிழ்ந்தான்.

*(சந்திரகிரகணம் பக்.101, 102)*

வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட சிறுகதைகள் பல படைத்துள்ளார் த.நா.கு. அவற்றில் குறிப்பிடத் தக்கவை. கனவில் கேட்ட குரல்; சிருங்கார திலகம்; குகைச் சித்திரம்; புலிக்குருளை; ராமராயன் கோயில்; ஞானக் குழந்தை கண்ணீர் கொள்வாய்; புல்புலின் குரல்; இரு ஜாதி. வரலாற்று பின்னணியில் அமைந்த கதைகளில் த.நா.கு. வின் நடையில் இலக்கிய மணத்தையும் கம்பீரத்தையும் ஒருங்கே காணலாம்.

"இவருடைய பன்மொழிப்புலமை இவருடைய எழுத்துக்கு அழகையும் உரத்தையும் ஊட்டியது. இவருக்கு என்று அமைந்த நடை தனிச் சிறப்புடையது. வேறு யாருடைய நடையிலும் இந்தப் பாணியைக் காண இயலாது. இயற்கையின் எழிலை ஓவியமாகக் காட்டுவதில் இவர் வல்லவர்".

*(கி.வா. ஜகந்நாதன் கன்னியாகுமரி கதைத் தொகுப்பின் முன்னுரையில் 3வது பதிப்பு - 1987 அல்லயன்ஸ்)*

**'ராமராயன் கோயில்'** சரித்திரப் பின்னணியில் (விஜய நகர சாம்ராஜ்ஜியத்தின் இறுதிக்காலம்) அமைந்த காதல் கதை, நிறைவேறாத காதல். ஆசை நாயகிக்காக மனக்கோட்டை கட்டி, கோயில் நிறுவி, ஏமாந்தான் ராமராயன். வருகிறேன் என்று வாக்குக் கொடுத்த, உள்ளம் கவர்ந்த மஞ்சரி, தன்னுடைய தம்பி இளைஞனான விருபாட்சனையே மணந்த செய்தி கிடைத்தவுடன் ராமராயனின் புத்தி நிலைபிறழ்ந்து விடுகிறது. போர்களையே கண்ட ராமராயன், தன் முகத்தில் முதுமைவரைந்த கோடுகளை கவனிக்க மறந்தான்.

"இடியுங்கள் கோயிலை! இடித்துத் தள்ளுங்கள்" என்று ஒரு

பயங்கரமான கூச்சலிட்டான். பிடிப்பிடியாக பொன் நாணயங்களை அள்ளி ஆற்றில் இட்டான். தானே கடப்பாறையை கரத்தில் ஏந்தி அலங்கோலமாககோபுரத்தின் மீது ஏற ஆரம்பித்தான். மாதக் கணக்காக வேலை செய்து மிகவும் ஜாக்கிரதையாக அமைத்து உயிர் பெற்றவைபோல் விளங்கிய பதுமைகள் சின்னாபின்னமாகி நதியில் விழுந்தன. ரத்தினதாசன் சிற்பிகளில சிறந்தவன். தள்ளாத கிழவன் ஆலயத்தின் ஒரு மூலையில் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். ராமராயன் இதைக் கவனித்ததும் தன் முகத்தைச் சிற்பியின் முகத்தோடு வைத்துக் கொண்டு, ''ஏன் கண்ணீர் வீடுகிறாய்? தலை நரைத்து விட்டதே என்றா?''

ஜனங்கள் ஒன்றும் தோன்றாமல் விழித்துக் கொண்டிருக்கையில் பிரவாகமாக ஓடும் துங்கபத்திரையில் ராமராயன் குதித்தான்''.

*(தமிழ்நாட்டுச் சிறுகதைகள் 3வது தொகுதி கன்யாகுமரி பக் 36)*

**'ஞானக் குழந்தை'** நாயன்மார்களில் ஒருவரான திருஞானசம்பந்தரின் வாழ்க்கையில் ஏற்பட்ட சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது. இலக்கிய மணம் கமழும் நடை, இந்தச் சிறுகதையின் சிறப்பு அம்சமாகும்.

''சிவானந்தப் பெருக்காறு வருவது போல் தொண்டர் கூட்டம் வந்து கொண்டிருந்தது. நுரை குமிழி போல் முத்துக் குடை தொலைவில் எழும்பிக் குதித்தது மனிதக் கடல் மீது பல்லக்கும் மெல்ல, மிதந்து வந்தது. துங்கவெண்குடையும், செழுந்திரள் முத்துக் கதிர்விடும் தூய சிவிகையும் பொங்கி ஊதும் திருச்சின்ன ஒலியும் பின்னும் அவள் இதயத்துள் திடத்தை ஊட்டின. சிவிகையினுள் ஞானத்தின் திருஉருவைக் கண்டாள்.

*(ஞானக் குழந்தை - நீலாம்பரி அல்லயன்ஸ் - 1954)*

**'சிருங்கார திலகம்'** பல்லவர் காலத்தை அடிப்படையாக வைத்து புனையப்பட்ட சிறுகதை .இல்லை அதனை குறுங்காவியம் என்று சொல்லலாம். வரலாறு தொடர்பான கதைகளைப் புனையும் போது த.நா.கு இயன்றவரை, தான் எடுத்துக் கொண்ட கால நிலையைப் பற்றிய நூல்களை ஊன்றிப் படிப்பார். அது தொடர்பான இலக்கிய மேற்கோள்களை ஆராய்வார். சில சமயங்களில் கல்வெட்டுகளை நேரில் சென்று படித்து வருவார். புலவனின் உள்ளத்தில் தோன்றிய காதலை அறிந்த மகேந்திர பல்லவன், அவன் விரும்பிய காதலியை அப்புலவனுடன் இணைத்து வைக்கிறான். இந்தக் கதையில்



த.நா.கு. வின் நடை, வாசகர்களை பல்லவர்கள் காலத்துக்கே இட்டுச் செல்கிறது.

''ஒரு பெரிய ராஜ வீதி, இருமருங்கிலும் வெண் சுதை மாடங்கள் அரமியங்கள். அந்திவேளை. பலகணி வழியாகப் படர்ந்து கீற்றாகச் செல்லும் அகில் புகையின் மணம் தெருவெங்கும் கமழ்ந்தது. குழலை வகுத்தும், கொண்டையைத் தொகுத்தும் பனிச்சையை விரித்தும் ஒரு பிடியில் அடங்கும் இடையுடைய மடந்தையர் சிலர் விரைவாக எங்கோ சென்றனர். பெரிய ஆடரங்கு. தூணுக்குத் தூண் மணி விளக்குகள். அரங்கில் யவனிகை விழுந்தது. அடுத்த காட்சி ஆரம்பமாகியது. பைத்தியக்காரன் வேஷத்தில் ஒருவன் வந்தான் அவன் கையில் ஒரு மண்டை ஓடு. பைத்தியக்கார சேஷ்டை இருந்தது. உயர்ந்த நடிப்பு. கடைசியில் பரத வாக்கியம் 'சத்ருமல்லேன லோகஹ' என்று பாடிமுடிக்கும்போது அது மகேந்திரனின் 'மத்த விலாசப் பிரகசனம்' என்பது தெரிய வந்தது.''

*(சிருங்கார திலகம் - நீலாம்பரி பக். 128-129)*

**'இருஜாதி'** - கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் அமைந்து, ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கிய காலகட்டத்தைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்டது. இந்த கதையில், அந்நாளில் நிலவிய, உடன் கட்டை ஏறுதல் போன்ற சில சமுதாய பழக்கவழக்கங்களைச் சித்தரிக்கிறார் ஆசிரியர். ஜாப்சார்ணாக் என்ற இளைஞன், கிராமத்து யுவதி லீலாவதியைக் கண்டதும் காதல் கொள்கிறான். ''உறுதியான பாறையைத் தேடிக் கொண்டு பல்லாவரத்துக் குளப் பக்கமாக வந்த ஜாப்சார்ணாக் கல்லுக் கிடையே ஒரு கன்னி மலரையும் கண்டுபிடித்தான். சார்ணாக் வரும் வேளை லீலாவதிக்குத் தெரியும். தன்னையும் மீறி அவள் கால் குளத்துக் கரைக்கே செல்லும். அவன் ஆங்கில மொழியில் என்னவோ பிதற்றுவான். அவள் தலை நிமிராமல் விரலால் தரையைக் கீறிக் கொண்டே இருப்பாள்.''

''ஐந்து ஆறு வருஷங்கள் கடந்துவிட்டன. பூவிருந்த வல்லிக்கு அருகில் அவன் ஒருநாள் வந்து கொண்டிருக்கையில் கூவம் ஆற்று வளையில் மணல் திட்டில் ஒரே கூட்டமாக இருந்தது.

உயிருள்ள மனைவி கணவனுடன் உடன் கட்டை ஏறும் இந்த உயர்வான புண்ணியக் கிரியைக்கு சாட்சி பூதமாகச் சார்ணாக் சற்றுத் தொலைவிலிருந்தே நின்று கவனித்தான். ''இதென்ன நான் பார்ப்பது உண்மைதானா? என் முன்னால் நிற்கும் இந்தப் பேதை என் காதலிதானா?''

"எனக்குத் துளி கூட அந்தக் கணவன் மீது ஆசை இராதபோது நான் சாகவேண்டிய அவசியமில்லை." என்றாள் லீலாவதி.

"கோயில் கட்டி ஜனங்கள் போற்றுவார்கள் அம்மா நீ சிதையில் போய் படுடி" என்றாள் முதிய சுமங்கலி ஒருத்தி.

"என்னைப் பத்தினிக் கடவுளாக யாரும் வழிபட வேண்டாம். என் மனசை வேறு ஒருவனுக்கு கொடுத்துவிட்டேன்!"

"மகாபாவி, மகாபாவி.." என்று ஜனங்கள் வெறிபிடித்து கூவினர். "வாருங்கள் இவளைக் கட்டிப்பிடியுங்கள். இவள் ஒப்புக் கொண்ட பாவத்திற்கே இவளைச் சுட்டுக் கொளுத்தலாம். கொட்டுங்கள் மேளத்தை.." என்று அவளைப் பற்றக் குறுகினர் மூட ஜனங்கள்.

*(இரு ஜாதி கலைமகள் ஜனவரி 1953)*

தோலும் உடம்பும் வேறு வேறு நாட்டினருக்கு அடையாளமாக இருக்கலாம். ஆனால் மனதளவில் அதன் உள்ளிருந்து எழும் உணர்ச்சியைப் பார்த்தால் எல்லோரும் ஓர் இனம் என்ற கருத்தை இந்த அருமையான சிறுகதையில் படம் பிடித்துள்ளார். இந்தக் கதை எந்த ஆதாரத்தை வைத்து எழுதப்பட்டது என்பதை கதையின் முடிவிலே குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

"கல்கத்தாவில் உள்ள ஸெயின்ட் ஜான் சர்ச்சில்.. அந்த கோயிலார் பத்திரப் படுத்தி வைத்திருக்கும் 1686 கி.பி. முதல் 1786 கி.பி. வரையிலான ஜனனமரண பதிவேட்டில் சார்ணாக் லிலா, அவர்களுடைய மூன்று பெண்கள் ஆகியவர்களைப் பற்றிய குறிப்பு உங்களுக்கு இந்த கதையின் உண்மையை ருஜுப்படுத்தும்!"

**'புலிக்குருளை'**- இந்தச் சிறுகதையில, மாவீரன் சிவாஜியின் இளமைக் காலத்தைக் காட்டி, பின்னர் உலகமே மெச்சும் அளவுக்கு அரசியல் தந்திரமுள்ள வீரனாக வளர்ந்ததின் அறிகுறிகள், அந்த வயதிலேயே அவனிடம் இருந்தன, என்பதை இளைஞன் சிவாஜிக்கு, அவனுடைய குரு எடுத்துக் காட்டுகிறார். இருவரும் குதிரை சவாரி செய்து கொண்டே பூனாவுக்கு அருகில் உள்ள ஒரு மலையகத்தில் குறுகிய பாதைவழியே வந்து கொண்டிருந்தனர். அப்போது இருவருக்குமிடையே பேச்சு எழுந்தது.

"...இந்த மாதிரி நிர்மானுஷ்யமான இடத்தில் எவனுமே வரமாட்டான்" என்றான் கிழவன்.



"அப்படியா! என் கண்ணை வேண்டுமானாலும் இருகக் கட்டிவிடு; நான் தன்னந்தனியே இந்தக் குதிரைமீது பூனாவுக்கு பத்திரமாக வந்து சேருகிறேனா இல்லையா பார்..! பந்தயம்! என்றான் இளையவன்.

குறும்புச் சிரிப்பு உலவியது வாலிபனின் முகத்தில் இதைத் தாதோஜி ஓரக்கண்ணால் கவனிக்காமல் போகவில்லை. "இதில் கெட்டிக்காரனே ஒழிய, படிப்பிலே சாமர்த்தியத்தைக் காணோம், வேறு எதற்கு லாயக்கு நீ..?" என்றான்.

"தாதோ, என்னை அப்படியெல்லாம் நினைக்காதே. இப்போது இந்த இடத்திலே புலிவரட்டும்; ஒரே குத்து இந்தப் பல்லியத்தாலே..."

"அட போடா, பயந்து போய் எங்கேயாவது செடியின் கீழ் ஒளிந்து கொள்ளமாட்டாயா?"

"பயம்!"- பையன் இடி இடியென்று நகைத்தான் விடாரகமும் எதிரொலி கொட்டியது. "சரி பயம் என்பது என்ன, முதலில் சொல்லு. பசிதாகம் போல் ஒருவிதக் களைப்பா?" என்றான்.

"உங்கள் கோட்டை வாசலில் எதிரி, சைனியத்துடன் வந்து நிற்கட்டும், அப்போது சொல்லுகிறேன், பயம் இன்னதென்று" என்றான் தாதோ.

"சரி தாதோ, இப்போது திடுமென பத்துபேர் மடக்கிக் கொள்கிறார்கள் என்று வைத்துக் கொள், நீ என்ன பண்ணுவாய்?" என்றான்.

இருளிடையே கூர்ந்து ஒரு தரம் நோக்கிய பின்பே கிழவன் "ஒரு கைப் பார்ப்பேன்" என்றான்.

"ஐம்பது பேர் வந்தால்"?

"அப்போதும் தயங்கமாட்டேன்."

"மடத்தனம். உனால் ஜவாப் சொல்ல முடியாது."

"நாலு பேரையாவது கொன்ற பிறகே உயிரைவிடுவேன்."

"அப்படிச் சாவதில் ஒரு பலனும் இல்லை, தாதோ, நானோ அவர்களுடன் துளிகூட போராட மாட்டேன் ஓட்டம் பிடிப்பேன்".

என்றான் இளம் சிவாஜி.

''உன் வீரத்தை மெச்ச வேண்டுமடா, கண்ணே! வெட்கம் இல்லையா? எப்பேர்பட்ட போன்ஸ்லேயின் பிள்ளை நீ. ராஜ புத்திரர்களின் வீரக்கதைகளைப் படித்தாயே. என்ன பிரயோஜனம்?'' என்றான் தாதோ.

''ராஜ புத்திரர்கள் வெறும் மூடர்கள். சண்டைப் போடத் தெரியுமே தவிர அவர்களுக்கு உயிர் வாழத் தெரியாது. தாதோ எல்லாம வாஸ்த்தவம் யுத்தம் செய்வதற்கு எதற்காக?'' என்றான்.

''பலப்பரிட்சைக்குத்தான். சக்தி எவனுக்கு அதிகமோ அவன் ஜயிப்பான்.''

''ஜயிப்பதற்கு பலம்தான் அவசியமோ? சூழ்ச்சியால் வெல்ல முடியாதா?''

''அது தர்மயுத்தமாகாது''

''இராது போனால் போகட்டுமே. ஜயிக்க வேண்டியது தானே கணக்கு?''

*(புலிக்குருளை-கற்பவல்லி பக் 64-65)*

இதற்கு என்ன விடைப் பகர்வது என்று தாதோஜிக்குப் புரியவில்லை. மேற்கண்ட இந்த உரையாடலைத் திறம்பட அமைத்துள்ளார் த.நா.கு. இதன் மூலம் சிவாஜியின் எதிர்கால அரசியல் கொள்கை எத்தகையதாக உருவாகும் என்பதை ஒரு சில வரிகளிலேயே சுருக்கமாக வெளியிட்டு விளக்கியுள்ளார். கதைகளில் சித்தரித்த கதைமாந்தர்களை நுட்பமாக வரலாற்று பின்னணியுடன் ஆய்ந்து உருவாக்குவது த.நா.குவின் தனிச்சிறப்பு. புராண இதிகாசங்களை அடிப்படையாக வைத்து த.நா.கு. வனைந்த கதைகளில் வித்து புராணத்தையோ, இதிகாசக் கதைகளையோ அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், அவர் அதனைஆராய்ந்து, அதற்கு அளிக்கும் கோணம் வித்தியாசமானது. 'அகலிகை வந்தாள்' என்ற கதையில் முனிவர் சாபம் நீங்கி, புத்தெழிலுடன் தன் கணவன் முன் அகலிகை இளமைகுறையாமல் நிற்கிறாள். ஆனால் முனிவராகிய அவளுடைய கணவனுக்கோ, அவள் இளமையை அனுபவிக்க தக்க வயதில்லை. அந்த முனிவர் மூப்பு எய்தி விட்டார். அந்நிலையில் அவர்களிடையே தோன்றும் உணர்ச்சிகளை ஏக்கங்களை வர்ணிக்கிறார்.



**'பாண்டு-மாத்திரி'** மற்றொரு கதை. மகாபாரதக் கதைகளில் ஒன்றை அடிப்படையாகக் கொண்டது. நோயுற்ற தன் கணவன் தன்னுடன் உடலுறவு கொண்டால் உடனே அவனுக்கு மரணம் நேரும் என்று நன்றாகவே அறிவாள் மாத்திரி. ஆனால் கணவனோ தன்னுடைய உணர்ச்சியை மனைவி மாத்திரி புரிந்து கொள்ளவில்லையே என்று ஏங்குகிறான். மாத்ரி தன்னுடைய, பொங்கிவந்த இளமை உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு கணவனைத் தேற்ற முயல்கிறாள். தன்னுடன் இன்பம் துய்க்க வேண்டும் என்ற வேட்கை, கட்டு மீறி விட்டதை உணர்ந்தாள் மாத்ரி. பாண்டு இணங்கவில்லை. ''ஊழிக்காலம் வரை அந்த இன்பம் இல்லாமல் வாழ்வதை விட ஒரு சில நிமிடம் உன்னுடன் கூடி இன்பம் துய்த்து மரிப்பதையே நான் விரும்புகிறேன். என் அருகில் வா, மாத்ரி..''

**'முனிவர் முறை'** இந்தக் கதை மகாபாரதத்தில் உள்ள ஆதிபர்வத்தில் வரும் ஒரு உபாக்கியானத்தை மூலமாகக் கொண்டு, அக்காலத்தில் ரிஷிகளிடையே நிலவி வந்த வித்தியாசமான திருமண முறையை அடிப்படையாகக் கொண்டு கணவன் - மனைவி, தாய்-மகன் பாசம் இவற்றை திறம்பட வனைந்துள்ளார், ஆசிரியர். உத்தாலக ஆருணி கேள்வி முற்றிய வேள்வி அந்தணர். பழைய ரிஷி மரபைச் சார்ந்தவர். குலத்தலைவர் கசியபருடைய ஒரே மகளான அபூர்வ அழகு கொண்ட மந்தஸ்மிதாவை ரிஷிகளுக்கு விதித்துள்ள மரபுப்படி மணந்து குலம் விளங்க, சுவேத கேது என்ற மகனையும் மந்தஸ்மிதா மூலம் பெற்றார். பரம் பொருளை நோக்கி உத்தாலகரின் மனம் போனதால், தன் இளம் மனைவியின் உள்ள உணர்ச்சிகளை அவர் கவனிக்கவே இல்லை. மனம் நொந்து உடல் தேய்ந்தாள் மந்தா. உத்தாலகரின் நண்பர் சோமகர் சிறந்த ஆயூர்வேத மருத்துவர். அவருடைய சிகிச்சைக்குப் பிறகு மந்தஸ்மிதாவின் உடல் தேறுகிறது.

உத்தாலகர், வேறு ஒரு சந்தர்பத்தில், கந்தர்வக் கூட்டத்தினரால், கவரப்பட்டு மனைவியை இழந்து வாழ்வு வெறுமையுற்று திரும்பிய சோமகருக்கு மந்தாவை நன்றிக் கடனாக தானமாக கொடுக்க முடிவு செய்கிறார். அந்த முயற்சி, சுவேத கேதுவின் தாய்ப்பாசத்தால் தடைபடுகிறது. ரிஷிகளிடையே திருமண முறையில் ஒழுங்கு வேண்டுமென்று, ரிஷிகள் கூடியுள்ள சபையில் முழங்கினான் சுவேதகேது!

''என் தந்தை தம் பத்னியான என் அன்னையை, அவளுடன்

இல்லறம் நடத்தும்போது, அதீதிக்கு ஆற்றும் கடமையாக, அக்னிசாட்சியாக ஏற்ற தர்ம பத்தினியை பிறருக்குத் தருவது பெருங்குற்றமாகும். ரிஷி மரபில், இது போன்ற வழக்கு இருந்தாலும் குற்றம் குற்றமே. மண முறை என்பது யாராலும் பிரிக்க முடியாத புனித பந்தம். கணவனுக்குப் பின் பெற்ற மகனுக்கு கடமைப்பட்டவளே பண்புடைய பெண்.''

*(கலைமகள் தீபாவளி மலர் 79)*

த.நா.கு. படைத்த உருவகக் கதைகள் இரண்டு - **வண்டும் மின்மினியும், நரநாராயணன்.** வண்டும் மின்மினியும் சந்திர கிரகணம் கதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. நரநாராயணன் காந்தி வழிக் கதைகள் என்ற தலைப்பில் வெளியான பல ஆசிரியர்களின் சிறுகதைகள் அடங்கிய தொகுப்பில், அகிம்சை என்ற தலைப்பின் கீழ் வெளியாகியுள்ளது.

**வண்டும்-மின்மினியும்** - மலரைத் தேடி வண்டு வருகிறது. மலரிலுள்ள தேனை உறிஞ்சி விட்டு, பின்னர் வேறு மலருக்குத் தாவிவிடுகிறது. ஆனால் மலர், தன்னைப் பிரிந்து சென்ற வண்டினை நோக்கிக் காத்திருக்கிறது. மாலையில், அந்திக் கருக்கலில் ஒளி குறைந்து இருள் தன் சிறகினை மெல்ல விரிக்கும் வேளையில், மின்மினிப்பூச்சியைப் பார்த்து மலர் கேட்கிறது, ''என் காதலன் வண்டினைப் பார்த்தாயா?'' என்று. பார்த்துச் சொல்கிறேன் என்று போய்விட்டது மின்மினி.

மீண்டும் வந்தது மின்மினிப்பூச்சி, மலரை நோக்கிச் சொல்லியது, ''நான் இன்னும் பார்க்கவில்லை உன் காதலனை''.

மலர்: 'யார் என் காதலன் யார் அவன்?'' என்றது முகம் சிடுத்து.

''நேற்று சொன்னாயே அவனைத்தான்''

''நேற்று இங்கு இல்லையே நான்! இன்று புதிதாய்ப் பிறந்தேன் நான்.''

''அந்த அணி மலர் எங்கே?''

''வாடி உதிர்ந்துவிட்டதே. அதன் பக்கத்துக் காம்பில் முளைத்தவள் தான் நான்.''

என்றது மலர். மின்மினிப் பேச்சற்றது.



''ஆனால் உனக்குத் தெரியுமா அந்த ஆளை'' என்று கேட்டது புதுமலர் மின்மினியிடம்.

*(வண்டும் மின்மினியும்-சந்திர கிரகணம் பக்.188)*

இந்த உருவகக் கதையில், மனித வர்க்கத்தில் ஒரு தலைமுறை பிறக்கிறது; வளர்கிறது, பின்னர் தேய்கிறது. அதன் அடியொற்றி மற்றொரு தலைமுறை உருவாகிறது. ஆனால் இனக் கவர்ச்சியும், கூடலும் பிரிவும் தொடரும் கதைதான் என்ற ஆழ்ந்த, எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான உண்மையை இந்த உருவகக் கதை மூலம் நமக்கு அளிக்க முயல்கிறார் த.நா.கு.

**நரநாராயணன்**- த.நா.கு.வின் ஆன்மிக கருத்துக்கள் நிறைந்த சிறந்த உருவகக் கதை. கடவுள் பிரபஞ்சத்தைப் படைத்தவுடன், இயற்கை மகளின் கண்ணீரைத் துடைக்க ,அவர் இயற்கை மகளுக்காக தான் படைத்த உயிரற்ற பதுமைகளுக்கு உயிர் கொடுத்தார் - மண்ணுலகில் மாந்தர் பிறந்தனர்.

''மண் உலகத்தவர் தம்மைக் காண விழைவதைப் பார்த்து கடவுள் சிரித்தார். ''என்னைக் காண ஆசைப்படுகிறீர்களா? என்றார்.

''ஆமாம், ஆமாம்'' என்று மனித இனம் இருளில் தடுமாறியது.

''முதலில் உங்களையே நீங்கள் அடக்கியாளுங்கள். வென்று வாருங்கள். என் நாட்டுக்கு வர வழி திறக்கும்'' என்றார்.

'' அந்த அமோக சக்தி எங்களிடம் ஏது? என்றது மனித வர்க்கம்.

''உங்களிடமே மறைந்து இருக்கிறது, வெளிப்படுத்துங்கள்'' என்றது கடவுளின் வாணி.

மனித இனம் கடவுளின் திருவாசகத்தை வேறு விதமாக விபரீதமாகப் புரிந்து கொண்டது. மக்களிடையே யுகங்கள் தோறும் பெரும்பூசல் மூண்டது. குருதி வெள்ளம் உலகை மாசு படுத்தியது. ஜாதிப் போர், சமயச் சண்டை, உரிமைப் போட்டி, கடைசியில் நிறச் சண்டை ஒவ்வொன்றாக எழுந்து மனித சமுதாயத்தை அலைத்து உருக்குலைத்தன. மக்கள் குலம் அழிவதும் தோன்றுவதுமாய், அரசர்கள் அட்டகாசம் புரிவதும், மஹாபுருஷர்கள் அமைதி தருவதுமாய் விரைந்தது காலம்.

திடுமென ஒரு இடிக்குரல் உலகைக் குலுக்கிப் போடுகிறது. வல்லான் ஒருவன் வெற்றிக் கோலத்துடன் கடவுளை எள்ளி, ''இதோ

உன்னைவிட நான் எவ்வளவு பெரியவன் எவ்வளவு பலசாலி என்னைப் பார்த்து நடுங்கு'' என்று இரைகிறான். அப்போது கடவுள் இடி இடி என்று நகைத்தார். இருண்ட வானிடை நட்சத்திரங்கள் உதிர்ந்தன. பாரின் முதுகு நெளிந்தது.

நாற்றிசையும் ''அச்சமில்லை, அச்சமொன்றும் இல்லையே'' என்ற சப்தம் பேரிகை போல் முழங்கியது. மக்கள் திரளாக எழுந்தனர்.

*''இருளினின்று ஒளியை அடைவோம்*
*பொய்யிலிருந்து மெய்யினைக் காண்போம்*
*மரணத்திலிருந்து அமர நிலை எய்துவோம்.''*

என்று பாடிக் கொண்டே தியாகத் தீயில் குதித்தனர்.

சிறைக் கூடங்கள் முறிந்தன. இரும்புத் திரைகள் விலகின. ஏகாதிபத்திய தளைகள் விண்டன.

வல்லான் எழுப்பிய அகந்தைக் கோட்டைத் தகர்ந்தது. யுக புருஷன் முன்னணியில் சென்றான். அவன் வேய்ங்குழல் அகிம்சை ராகத்தை ஊதியது. படமெடுத்த அதிகார வர்க்கம் பணிந்துவிட்டது. இன்னும் இருக்கிறதே கடைசி காட்சி. அன்பு நெறியில் செல்ல எல்லோரையும் அழைத்தான் சாத்வீகவீரன். வகுப்புவாதம் அவனைச் சுட்டது.

''இப்போதாவது சொல் - நீ தோற்றுவிட்டாயா?''

''இல்லை''

மறுபடியும் சுட்டது.

இல்லை.

மூன்றாவது முறையும் சுட்டது.

''இல்லை.'' அப்போதும்.

உலகத்தவர் ஒன்று கூடினர். இந்த அதிசயத்தைப் பார்த்து வியந்தனர். விழிநீர் பெருக்கினர்.

''உனக்கினி யமபயமேது!''

''யார் நீ'' என்றான் முடிதாழ்ந்த வல்லான்.



''நான் புதுமையைச் சொல்லும் குடுகுடுப்பை ஆண்டி.''

''எதற்காக இந்தப் பாட்டு''

''உடல் அழிந்தாலும் உயிர் அழியாது. இப்பெரு வெற்றியால் மனிதர் உள்ளத்தில் குடிகொண்டிருந்த பீதி, அவ நம்பிக்கை அசூயை யாவும் விலகின''.

வல்லான் கையிலிருந்து கொடிய அஸ்திரம் மண்ணில் விழுந்தது. அவனுக்கு என்பு வரை நடுங்கியது''.

*(காந்தி வழிக் கதைகள் (1969) தமிழ் நாடு காந்தி நினைவு நிதி மதுரை-13. பக்கம் 45, 46, 47)*

அகந்தையும் சுயநலமும் ஓங்கும்போது மனிதன் தன் இனத்தின் மீதே தொடுக்கும் போரும் அதனால் விளையும் நாசத்தையும்-இறுதியில் நல்ல எண்ணங்களான அஹிம்சை, சத்தியம், பொறுமை இவற்றின் வெற்றியையும்- உருவகமாக விளக்கியுள்ளார் த.நா.கு. நரநாராயணன் என்ற இந்தச் சிறுகதையில்.

நயமான நகைச்சுவையினை நமக்கு விருந்தாக அளிக்கும் கதைகளையும் த.நா.கு. வனைந்துள்ளார். **ரகுராமனின் கல்யாணம், விநோத வேட்டை** (சந்திர கிரகணம் முதலிய கதைகள் தொகுப்பில் உள்ளது) ***சீமைப்பூ, உத்தியோகபர்வம்*** ஆகிய கதைகளையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். நடுத்தரவர்க்க குடும்பத்தினரின் வாழ்வில் தோன்றும் சம்பவங்கள், பிரச்சனைகள் இவற்றை நளினமான நகைச் சுவை பாங்குடன் வர்ணிக்கிறார் ஆசிரியர், இக்கதைகளில்.

இவ்வாறு 1930, மற்றும் நாற்பதுகளில் தமிழ்ச் சிறுகதை உலகில், உருவான புது முயற்சிகளில், த.நா. குமாரஸ்வாமியின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

''தரத்தில் எத்தனையோ தரங்கள் உண்டு- நல்ல தரமான சிறுகதைகள் எழுதியவர்கள் என்று முப்பதுகளில் உருவானவர்கள், என் அபிப்ராயத்தில், ந. பிச்சமூர்த்தி, சி.சு. செல்லப்பா, ந. சிதம்பர சுப்பிரமணியன், த.நா. குமாரஸ்வாமி, தி.ஜ.ரங்கநாதன் - இவர்களைச் சொல்லுவேன்'' என்கிறார் க.நா.சு.

*(இந்திய இலக்கியம் பக்கம் 69-70)*

த.நா.கு. எழுதிய பல சுவை மலிந்த சிறுகதைகளில், சமுதாய நிலை, உள்மன உந்துதல்கள், ஆண்பெண் உறவு, குழந்தை மனம் இவற்றை நுட்பமாக ஆராய்ந்துள்ளார். அவருடைய நூலறிவுப் புலமை, ஆழ்ந்த அனுபவ ஞானம் இவற்றை அன்னாருடைய கதைகளில் பரக்கக் காணலாம். த.நா. குமாரஸ்வாமியின் சிறுகதைகளில் கதையின் போக்கு, செயற்கையான திடீர் திருப்பங்கள் இல்லாமல் மொட்டிலிருந்து மலரும் பூ இதழ்கள் போலவே மெல்லவே வளரும். கதையோட்டத்துடன் நடையழகு கைகோர்த்துச் செல்லும். சிறுகதை எனும் சிறிய சாளரத்தின் மூலம் பரந்த உலகையும், அதில் உலவும் பல்வேறு வகையான குண இயல்புகள் உடைய மனிதர்களையும், அவர்களுடைய விசித்திர வெளிப்பாடுகளையும் நுண்ணிய இயல்புகளையும், உணர்வு நிலைகளையும் நம் கண் முன் முழுமையுடனும் நிறைவுடனும் நிறுத்துகிறார், அவருக்கே உரிய தனிச்சிறப்பான நடையிலே.

''கதையைச் சொல்லிவிட்டு போக வேண்டியதுதானே, நடைக்காகவும் சொற்களுக்காகவும் அனாவசியமாக சிரமப்படுவானேன்? என்று எண்ணுகிற எழுத்தாளர் அல்ல அவர். ஜீவனுள்ள பழந்தமிழ் சொற்களைத் தேடிப் பிடித்து, சின்னஞ்சிறு வாக்கியங்களில் அவர் அதை அமைத்துத் தரும் போது, 'கதை எப்படியோ போகட்டும் தமிழனின் அழகை ரசிப்போம்' என்றே எண்ணத் தோன்றுகிறது. நடையழகுக்காக கதையம்சத்தையும் பலிகொடுத்து விடவில்லை, குமாரசாமி'', என்று வருணித்துள்ளார் குமுதம் ஆசிரியர் காலம் சென்ற எஸ்.ஏ.பி. அவர்கள்.

*(நீலாம்பரி - குமுதம் விமர்சனம்)*

# 3
# புதினங்கள்

1940களில் சிறுகதைகளைப் புனைவதிலும், வங்க எழுத்தாளர்களின் படைப்புக்களை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதிலும் இருந்த நாட்டம், 1950க்குப் பிறகு புதினத்தின் பால் சென்றது. வங்கத் திரை உலகில், அந்நாளில் நடந்த சில ஆக்க முயற்சிகளில் பங்கு கொண்ட த.நா.கு திரைக் கதைக் கலையில் ஆர்வம் காட்டினார். அவரின் அந்த நாட்டம் மற்றும் சிறந்த வங்க நாவல் ஆசிரியர்களிடம் இருந்த ஈடுபாடும், நாவல்களைப் புனைய த.நா.கு.வைத் தூண்டிய ஊக்கிகள் எனக் கூறலாம்.

ஆங்கில நாவலாசிரியை ஜேன் ஆஸ்டின் தன்னுடைய புதினங்களில் ''ஒரு சிறு உலகையே'' காட்டினார். அதுபோல த.நா.கு எடுத்துக் கொண்ட பின்னணிகள் பொதுவாக செங்கை மற்றும் வடஆற்காடு மாவட்ட மக்களின் வாழ்க்கை மற்றும் சூழலை அடிப்படையாகக் கொண்டவை. அந்தப் பகுதிகளின் மண்ணின் மணத்தினை குறிப்பாக ''வீட்டுப் புறா'', ''ஒட்டுச் செடி'' போன்ற அவருடைய புதினங்களில், நாம் நுகரலாம். த.நா.குவின் வடமொழி மற்றும் தமிழிலக்கிய நுகர்ச்சி, மேலை நாட்டு இலக்கியங்களில் அவருடைய ஈடுபாடு மனிதப் பண்புகள், உள்ளங்களைப் பற்றிய ஆழ்ந்த ஞானம் இவற்றுக்கெல்லாம் மேல், வங்க எழுத்தாளர்களின் எழுத்தில் த.நா.கு. கொண்ட ஈடுபாடு இவையாவும் ஒன்று சேர்ந்து சிறந்த கதையோட்டம் கொண்ட புதினங்களையும், தனிப் பாணியில் அமைந்த நடையழகினையும் உருவாக்கின.

த.நா.கு பெரும்பாலான புதினங்களை 1950 முதல் 1960 வரையிலான காலகட்டத்தில் எழுதினார். 1960க்குப் பின் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ''பொற்கொல்லன் மகள்'' என்ற வரலாற்றுப் புதினத்தை அமுத சுரபி ஏட்டில் எழுதத் தொடங்கினார். விஜய நகர அரசாட்சியின் தொடக்க கால மன்னர்களில் ஒருவரான முதலாம் தேவராயனுக்கும் பிருஸ் என்பவனுக்கும் இடையே கிராமத்து பொற்கொல்லனின் அழகு மகள் தொடர்பாக எழுந்த பூசலையும், போரில் ஏற்பட்ட தோல்வியினால் தேவராசன் தான் அன்புடன் வளர்த்த மகளை சுல்தானுக்கு மணமுடித்து சமாதானம் செய்து கொண்டதையும் வருணிக்கிறார் த.நா.கு. சில அத்தியாயங்களே வெளியாகி த.நா.குவின் கண்கள் பாதிக்கப்பட்டதால் முற்றுப் பெறாமல் இடையிலேயே நின்றுவிட்டது அந்த நவீனம்.

''வரலாற்றில் அவ்வளவாக புகழடையாத, வரலாற்று நூல்களில் அலசப்படாத, பலருக்கும் தெரியாத சரித்திர சம்பவங்களை மையமாக வைத்து, வரலாற்று உண்மைகளிலிருந்து, இம்மியளவும் பிறழாமல், சரித்திரத்தில் உலவி, வாழ்ந்து மறைந்த உண்மை மனிதர்களையும், நிகழ்வுகளையும் வைத்துத் தான் கதைகளைப் புனைய வேண்டும் என்ற திட்டத்துடன் 'பொற்கொல்லன் மகள்' நவீனம் தொடர்பான குறிப்புக்களை மூல நூல்களை (தெலுங்கு மொழியில் அமைந்தவை) ஆய்வு செய்தும், விஜய நகர பேரரசின் அரசியல் சமூக நிலை குறித்து, அராபிய மற்று ஐரோப்பிய பயணிகள் அந்நாளில் நேரில் கண்டு எழுதிய குறிப்புக்களையும் தீவிரமாக ஆய்வு செய்து, அந்த காலத்துக்கு ஒவ்வாத (anachronism) செய்திகள் ஏதும் அந்தப் புதினத்தில் கலந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கையுடன் 'பொற்கொல்லன் மகள்' வரலாற்று நவீனத்தை நான் எழுதத் தொடங்கினேன்.''

*(த.நா.கு.வின் டைரிக் குறிப்புக்கள்)*

'பொற்கொல்லன் மகள்' முழுவதும் முற்றுப் பெற்றிருந்தால் தமிழில் ஒரு சிறப்பான வரலாற்றுப் புதினமாக அது அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.



## ஒட்டுச் செடி

1950களில் ஆனந்தவிகடன் இதழில் தொடராக வந்த புதினம் ஒட்டுச் செடி. தமிழ் நாட்டைச் சேர்ந்த செங்கை மற்றும் வட ஆற்காடு மாவட்டச் சூழலை பின்னணியாக வைத்துப் புனையப்பட்டது. பூண்டி நீர்த்தேக்கம் உருவானபோது இடம்பெயர்ந்த ஒரு கிராமத்தின் கதை. அந்த கிராமத்தில், இளம் வயது முதல், சிறுப்பிள்ளை விளையாட்டிலிருந்து, அன்பின் வித்து ஊன்றி, பெருமராய் வளரவேண்டிய கதிர்வேலு கண்ணம்மா இவர்களின் காதல் ஒரு ஒட்டுச் செடியாகத்தான் வளர முடிந்தது. செங்கை மாவடடத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நாயக்கர் வகுப்பினரின் மரபுகளை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்டுள்ளது ஒட்டுச் செடி.

பூண்டி நீர்த்தேக்கம் உருவானதால் இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர் கண்ணம்மாவின் குடும்பத்தாரும் கதிர்வேலு குடும்பத்தினரும். கதிர்வேலுவின் காதலும் கண்ணம்மாவின் காதலும் சிறு உள்ளங்களின் எணணப் புதையலாக நின்றுவிட்டதே தவிர, பெரியவர்களின் செவிக்கு எட்டவில்லை. வயது வந்ததும் கண்ணம்மாவை, சோங்குவுக்கு திருமணம் முடிக்கின்றனர். உடலளவில் கண்ணம்மா சோங்குவுக்குச் சொந்தமானாள். ஆனால் அவள் உள்ளத்தில் சிறு வயதில் ஊர் ஆலமரத்து அடியில் கதிர்வேலு கணவனாகவும், அவள் மனைவியாகவும் அவர்களின் குடும்பத் தலைவன் தலைவி விளையாட்டு அவள் கண்முன் வந்து அவ்வப்போது நிழலாடும். கண்ணம்மாவின் இளமைத் துள்ளலுக்கும், ஆற்றலுக்கும், வேகத்துக்கும் நோஞ்சானான சோங்கு பொருத்தமானவன் இல்லை என்பது சோங்குவுக்கே தெரியும். பல ஆண்டுகளுக்குப் பிறகு, கதிர்வேலு கண்ணம்மா சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. சோங்குவை மாடு முட்டி விலாவில் உள் காயம் ஏற்பட, சிகிச்சைக்காக திருவள்ளூரில் உள்ள ரங்கசாமி டாக்டரிடம் சென்ற கண்ணம்மா அங்கே கம்பௌண்டராக, பணிபுரியும் கதிர்வேலுவைச் சந்திக்கிறாள். இருவருக்கும் பலவேறு வகையான உணர்ச்சிகள் உள்ளத்தினுள் கொப்பளிக்கின்றன. தாங்கள் இருக்கும் சூழலை மறந்து, பேச்சின்றி நின்றனர்.

கதிர்வேலுவின் சிபாரிசினால், சோங்குவுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. சோங்குவை கவனிக்கும் சாக்கில், கண்ணமாவுடன் நெருங்கிப் பேச வாய்ப்பினை அவ்வப்போது ஏற்படுத்திக் கொண்டான் கதிர்வேலு. சிறு பிராயத்திலிருந்து

தேக்கிவைத்திருந்த ஆசையெல்லாம் ஒன்று சேர ஒரு நாள் கண்ணம்மாவை நெருங்குகிறான் கதிர்வேலு.

"என் மனசு தான் உன்னுடையது. என் உடம்பு மேல உள்ள இந்த ஆசை நம்மளை எங்கேயாவது கொண்டு தள்ளிடும் கதிரு... இந்த மாதிரி நோக்கத்தோட இனிமே என்னைப் பார்க்க வேண்டாம்", என்று கண்ணம்மா மனவருத்தத்துடன் கூறினாள். கண்ணம்மாவின் இப்பேச்சு கதிர்வேலுவின் கண்களில் நீரைச் சேர்த்தது. சம்மட்டி போன்ற தன் புறங்கையால் கண்ணீரை உதறித் தள்ளிவிட்டு, அவளின் நினைவுச் சின்னமாக, அவளுடைய கால் விரலிலிருந்து மெட்டியைக் கழற்றி மோதிரமாக மாட்டிக் கொண்டான் கதிர்வேலு."

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, கதிர்வேலு கண்ணமாவை பார்க்க வரவே இல்லை. பட்டாளத்தில் சேர்ந்தான். இரண்டாம் உலகப் போரின் மும்முரம். பணியில் சேரும் முன் வெண்பாக்கத்தில் உள்ள தன் தாயைக் காண வருகிறான். தனையனைக் கண்ட தாய், தனக்கு என்று எதுவும் வைத்துக் கொள்ளாமல், கதிர்வேலுக்கு பிடித்த பதார்த்தத்தை ஆக்கிப் போட்டு, மகன் வயிறார உண்ணுவதைக் கண்டு மனம் களித்தாள், முதுமையின் ஓரத்தில், நின்று கொண்டிருந்த கதிர்வேலுவின் தாய் தன்னுடைய மகன் மிலிட்டரியில், சேரப்போகிறான் என்று கேள்விப்பட்டு "அப்பா குண்டு போடறாங்களே அங்கே போய் நிக்காதே" என்று கூறி உச்சிமோந்து தன்னுடைய மகன் கூர்ந்து நோக்கிய வண்ணம் நின்றாள். தன்னுடைய மகன் பீரங்கிப் படையில் சேர்ந்துள்ளான் என்பதை அந்தத் தாய் எப்படி அறிவாள்! கதிர்வேலு, தன் தாய் வருத்தமடையப் போகிறாள் என்று அதைக் கூறவில்லை. ஏழ்மையின் பிடியிலேயே உழன்று, விடிவெள்ளியை மட்டும் கண்ட கதிர்வேலுவின் தாயால், உதயத்தைக் காண முடியவில்லை. கதிர்வேலு அனுப்பிய முதல் மாத சம்பளம், தாயாரின் ஈமக் கடன்களை நிறைவேற்றத்தான் பயன்பட்டது!

இரண்டாம் உலகப் போரின் மும்முரம், போர்முனையில் குண்டு பட்டு, கால முடமாகிறது கதிர்வேலுவுக்கு. காலில் குண்டு துளைக்கும் போது கூட அம்மா என்று கதறாமல், அவனுடைய உள்ளத்திலிருந்த கண்ணம்மா தான் கதிர்வேலுவின் வாயிலிருந்து கூக்குரலாக வெளிப்பட்டாள்.

கதிர்வேலு சென்றதிலிருந்து கண்ணம்மா குடும்ப வாழ்க்கையில் ஒட்டாமல் இருந்தாள். சோங்குவுக்கு கண்ணம்மாவின் மன நிலை நன்றாகவே தெரிந்தது. "கண்ணம்மா நான் உனக்கு ஏத்தவன்



இல்லேன்னு எனக்குத தெரியும். தெரியாம பெரியவங்க தப்பு செஞ்சுட்டாங்க, உனக்குப் பொருத்தமானவன் கதிர்வேலுதான்." என்று மனம் உணர்ந்து சொன்னான் சோங்கு.

தான் வாழும் இரட்டை வாழ்க்கைக்கு ஒரு முடிவு கட்டவேணும் என்ற நோக்கில் மனதளவில் கதிர்வேலுவே நிறைந்துள்ள கண்ணம்மா சோங்குவிடம், "என்னைப் போலவே என் தங்கச்சி இருக்கு என்னை விட இள வயசு. உன்னை நல்லாபார்த்துக்குவா... நாம எல்லாமே ஒரே வீட்டில இருப்போம்" என்று கூறி கணவனின் கருத்தை அறிய முற்பட்டாள். கணவனுக்கு இதில் கருத்து வேறுபாடு இல்லை என்பதை அறிந்து மனம் மகிழ்ந்தாள்.

போர்முனையில் அடிப்பட்ட கதிர்வேலு, பணியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி, கண்ணம்மாவிடம் வந்து சேர்ந்ததால் சோங்குவின் விருப்பத்துக்கு இணங்கி, கால் முடமாகி ஊனமுடன் வந்த கதிர்வேலுவுக்கு கண்ணம்மாவின் அன்பு ஊன்று கோலானது. கண்ணம்மாவுக்கு உடலளவில் கதிர்வேலு முழுமையாகக் கிடைக்காவிட்டாலும், மனதளவில் காதலின் நிறைவை அவளால் உணரமுடிந்தது. தரையில் படர்ந்த கொடியை நோக்கி கதிர்வேலு என்ற கொழு கொம்பு சென்றது, கொடியின் அரவணைப்புக்காக.

ஒட்டுச் செடி, கிராம மணம் கமழும், காதல் ஓவியம். ஒரு சிறு கிராமச் சூழலைப் பின்னணியாகக் கொண்டு புனையப்பட்ட மாறுபட்ட காதல் கதை. சமூகக் கட்டுப்பாடுகளை மீறி சங்கமிக்கும் இரு மனங்களின் கதை.

"ஒவ்வொரு அத்தியாயமும்,குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்ற சங்கப் பாடல்களைப் படிக்கும் அனுபவம் தரும்.. இது கிராமிய மணம் வீசும், சிறு காவியம்" என்று ஆனந்தவிகடன் ஆசிரியர் பொறுப்பில் இருந்த, பிரபல நகைச்சுவை மற்றும் பயணக் கட்டுரைகளை எழுதிய தேவன் அவர்கள், ஒட்டுச் செடியைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

இப்புதினத்தில் கிராமியச் சூழலுக்கு ஏற்ற உவமைகளை, சொல் ஓவியங்களை பரக்கக் காணலாம்.

"பாதைக்கு ஓரமாக மேடான ஏரிக்கரை, அந்த மேட்டின் வளைவில் அங்காளம்மன் கோயில்.. அரச மரமும் அதின் கீழ் நாகக் கற்களும், மஞ்சள் குங்குமம் இவற்றின் புள்ளிகள் அதன் மீது, காற்று இராதபக்கமாக பெண்கள் இருவர், வறட்டியை அடுக்கி,

புதுப்பானையில் பொங்கல் வைத்து விட்டு தயாராக நின்றனர்...''

வேறு ஒரு இடத்தில், கண்ணம்மா கதிர்வேலு இவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட திடீர் திருப்பத்தினை ஆசிரியர்..'' நாய் புலி ஆட்டம் திடீரென்று திருப்பம் பெறுவது போல்'' என்று கிராமங்களில் மக்களிடையே புழக்கத்திலிருக்கும், ஒரு விளையாட்டினை உவமையாக்க காட்டியுள்ளார். பூண்டி நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டதால், பல கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் மன வருத்தத்தை எடுத்துக் காட்டியுள்ளார்.

''கலிகாலம் முடிஞ்சு போச்சு, பெரியவங்க சொன்னதும் பலிச்சுப் போச்சு.. கொடதலே ஆறு கரைபுரண்டுச்சுன்னா, வெம்பாக்கம் வாசல்லே நீரோடும்.. ஊன்றிசுவரர் கோயில் மேலாக அல்லிபூக்கும், வறண்ட பூண்டிலே தூண்டில போட்டு மீன் பிடிப்பாங்க வீரராகவர் கோபுரத்து உச்சியிலே ஊமச்சிமேயும் என்பாங்க...''. செங்கை மாவட்டத்தில் நாயக்கர் மரபினைச் சார்ந்த மக்கள் பேசும் பேச்சு மொழியில் புதினத்தை அமைத்துள்ளார். அப்பகுதி மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள், திருவிழாக்கள்; நாட்டுப்புறப் பாடல்கள் இவை இடையிட்ட ஒட்டுச் செடி புதினம் 1950 களின் முற்பகுதியில் ஆனந்த விகடன் இதழில் தொடராக வெளிவந்து வாசகர்களின் வரவேற்பினைப் பெற்றது. இந்த புதினம் அகில இந்திய வானொலி சென்னை நிலையத்தில் நாடகமாக்கப்பட்டு பின்னர் ஒலிபரப்பாகியது.

''சிறுகதைகளில் உள்ள காவியதொனியிலிருந்து, ஓரளவுக்கு விலகி, யதார்த்தம், நடப்பு இயலைச் சார்ந்து நாவல்கள் இருந்தன, என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். அவர் விசேஷமான அக்கறையோடு தன் படைப்பின் மூலாதாரத்தையும் பின்புலன்களையும் தேர்வு செய்தார். அதில் குறிப்பிடவேண்டியது ஒட்டுச் செடி. பூண்டி நீர்தேக்கம் அமைக்கப்பட்ட போது தனது வீட்டை இழக்கும்-கிராமத்தை விட்டுவிட்டு வெளியே வரும்-ஏழை விவசாயிகளின் அளவறியா சோகத்தை, பிராச்சாரமின்றி மிகவும் செட்டான சம்பவங்களாலும், சொற்களாலும் நாவலாகப் படைத்துள்ளார். சொல்லப்பட்டதற்கு மேலே சொல்லப்படாத வாழ்க்கையும் சோகமுமே நாவலின் அடித்தளமாக உள்ளது.''

*(சா. கந்தசாமி: த.நா.கு. சில குறிப்புக்கள் - தமிழ்மணி தினமணி இணைப்பு ஜனவரி 12, 1991)*



## அன்பின் எல்லை

1953-ல் தொடராக ஆனந்த விகடனில் வெளிவந்தது, அன்பின் எல்லை. 1930-களில் தமிழகத்தில் சிறப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் அந்தணர்கள் சமூகத்தில் நிலவிய குடும்ப சூழல், பழக்க வழக்கங்கள், திருமண முறை, கொண்டாடிய பண்டிகைகள், நாட்டுப் பெண்-மாமியார்-நாத்தி உறவு முறை- இவை உருவாக்கும் இன்பம், துன்பம், சவால்கள், சமாளிப்புக்கள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், பாசம் பொறாமை இவற்றை சுவைபட எளிய நடையில் அந்தணர் சமூகச் பேச்சு வழக்கில் விறுவிறுப்பாக சொல்கிறார் த.நா.கு.

**'அன்பின் எல்லை'**, ஸீதா-சுந்தர். லட்சுமணன்-அவயம் என்ற இரண்டு கணவன் மனைவியரை சுற்றிப் பின்னப்பட்ட யதார்த்தமான உணர்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள பல கதை மாந்தர்களின் கண்காட்சி என்றே கூறலாம்.

சுந்தரும், லட்சுமணனின் மனைவி அவயமும் நெருங்கிய உறவினர்களாக கதைப்படி அமைந்தாலும், ஸீதா-சுந்தர், லட்சுமணன்-அவயம் இந்த இருதம்பதியரின் கதை, நடைமுறையில பார்த்தோமானால் தனித்தனியாகவே ஆசிரியரால் சொல்லப்பட்டு உள்ளன.

இந்த நவீனத்தில் வரும் ஒவ்வொரு முக்கிய பாத்திரமும் அன்பினைத் தேடி, இறுதியில் உண்மையான அன்பினை அவரவர் கண்ணோட்டத்தில் கண்டவர்களே! நவீனத்தில் ஆசிரியர் கையாண்ட கதையமைப்பில் ஒரு ஹார்மோனியப் பெட்டியில் உள்ள வெள்ளை கருப்பு ஸ்வரஸ்தானங்களைப் போல், இன்பம், துன்பம், இச்சுவைகள் மாறி மாறி வருமாறு அமைத்துள்ளது படிப்போர் மனதில், தாமே அத்தகைய நிஜ வாழ்க்கையினை வாழ்ந்து அனுபவித்த ஒரு உணர்வினை ஏற்படுத்துகிறது. பழமையும் புதுமையும் சந்திக்கும் ஒரு கால கட்டத்தை பின்னணியாக வைத்துப் புனையப்பட்ட இந்தக் கதையில் பழையன கழியும் நிலையில் புதுமைகள் புகும் வழியில் மாறுகின்ற கால நிலையில் நிற்கும் கதைமாந்தர்களின் சிந்தனை ஓட்டத்தினை திறம்படி வருணிக்கிறார் ஆசிரியர்.

''பழைமையும் புதுமையும் சந்திக்கும் ஓர் இக்கட்டான காலத்தில் திகைத்து நின்றார். புதுமைக்காக அவளை எட்டாம் வகுப்பு வரை படிக்க அனுமதித்தார். பழமைக்காக, கன்னிப் பருவம் கழியும் முன்

அவளை மணம் செய்து கொடுக்கத் துணிந்து விட்டார். மலைக்குத்து குறுக்கிட்ட ஆறு போல் அவர் நகரவுமில்லை, நிற்கவுமில்லை''.

*(அன்பின் எல்லை, அத்தியாயம்-2)*

சமூகத்தில் தொன்று தொட்டு இருந்துவரும் சம்பிரதாயங்கள் சடங்குகள் கொஞ்சம் கொஞ்சமாக அருகி வருவதை வேறொரு இடத்தில் ஆசிரியர் குறிப்பிடுகிறார். இளம் மணப்பெண் சீதா தன் கணவன் வீடு செல்கிறாள். வீட்டில் காலடி வைக்கும் முன் மாலை மாற்றும் வைபவம். அந்தச் சமயத்தில் மாப்பிள்ளையை மாமன் தோள் தூக்க வேண்டும்.

''பழைய பழக்க வழக்கங்களில் விருப்பமுடையவர் இருவர். ''தோள் மீது ஏற்றிக் கொண்டு மேளவாத்தியத்துக்கு தகுந்த மாதிரி சற்று நடைபோட்டால் ரொம்ப அனுபவிக்கலாம். வரவர நம் பழமையான சம்பிரதாயங்களை விட்டுக் கொண்டே வருகிறோம். பெண்கள் சோபனம் கும்மி அடிப்பதையும் மறந்து விடுகிறார்கள்'' என்றனர்.

அதே நேரத்தில் திருமணம் தொடர்பாக நடைபெறும் சில பழக்க வழக்கங்களை, ஆசாரங்களை சொல்லோவியமாக திறம்படக் காட்டுகிறார் த.நா.கு.

''உட்புறத்திலிருந்து ஜானகம்மாள் ஊரிலேயே முதிய சுமங்கலியான வேணுபாட்டியை அழைத்து வந்தாள். நரைத்த கூந்தலும், நெற்றியில் ரூபாய் அளவு குங்குமப் பொட்டும், கயிற்றில் கட்டிய மூக்குக் கண்ணாடியும், சுருங்கிய உடல் தசையுமாக, கூனிக் கொண்டே வந்து அவள் தீர்த்த கலசத்தை ஏந்தி மணமக்களை முதலில் வலம் வர, மற்ற சுமங்கலிகள் அறுவர் விளக்கும் தீர்த்த கலசமும் மாறி மாறி ஏந்தித் தொடர்ந்தனர். இச்சடங்கு ஆனதும் ஊஞ்சல் லாலிபாடுவதில் தேர்ந்த இரு பெண்கள் புன்னாகவராளி பைரவி இவற்றில் எதுவென்று புரியாத ராகத்தில் ஜண்டையாக,

*வச்ரம் வைடூரியத்தால் பலகை சேர்த்து*
*மரகதத்தினால் இழைத்த கால்கள் நாட்டி*
*உசிதமான ரத்தினம் பதித்து, கொடுங்கை பூட்டி*
*உகந்த சார்ங்கராஜன் ஆடிர் ஊசல்''.*

அந்தணர் சமூகத்தில் குடும்ப விழாக்களின் போது, நடைமுறையில் இருந்த சில சம்பிரதாயங்களை விளக்கும் பல காட்சிகளை, கதையோட்டத்துடன் மணிகளிடையே செல்லும் நூல் போல் அமைத்துள்ளார் த.நா.கு. அன்பின் எல்லை புதினத்தில்.



அக்கிரகாரத்தில், குடும்பங்களிடையே அமைதியைக் குலைத்து, மனக்கிலேசங்களை உருவாக்கும் விஷமத்தனமான வம்புகளை அள்ளி வீசும் வில்லிகளான பெண்டுகளின் சித்திரத்தை திறம்பட வரைந்துள்ளார் ஆசிரியர். திருமணமாகி புகுந்த வீட்டில் அப்பொழுதுதான் அடி எடுத்து வைத்த சீதாவை ''மதிப்பிடும் நோக்கத்துடன்'' உறவினர் யமுனா மீனா ஆகியோர் குடும்பத்தில் குழப்பத்தினை ஏற்படுத்த முற்படுகின்றனர்.

''ஜானகம் யாருக்குமே பட்டபிற்பாடுதான் தெரியும். ஆனால் உன் விஷயத்திலே... மாட்டுப் பெண் கிடைச்சிருக்கு. அது சிறிசு. இப்போ தெரியாது. தேளுக்குப் பிறந்தது என்னிக்காவது கொட்டித்தான் தீரும். ஜாக்கிரதை! ஒரே பையன் உனக்கு. அடிக்கடி அவனை அங்கே அனுப்பாதே. மருந்து வைக்கிற கூட்டமடி. இந்த மாட்டுப் பெண்ணையும் இங்கேயே மசியவை'' என்றாள் மீனா, சற்றைக் கொருதரம் கண்களை நாலாதிசையும் உருட்டிய வண்ணம்...

நிம்மதியாக ஸத்கதையை படிக்க உட்கார்ந்த ஜானகத்தின் மனத்துள் விபரீத சந்தேகங்கள் புகைய ஆரம்பித்தன!''

*(அன்பின் எல்லை அத்தியாயம்-12)*

அன்பின் எல்லை-இரண்டு அன்பு ராகங்களின் சங்கமம். ஒரு ராகத்தில் இன்பத்தின் துள்ளலும், மற்றொரு ராகத்தில் துன்பத்தின் பெருமூச்சும் ஆதார சுருதியாக இழையோடுகிறது. முகாரி முகத்தின் திலகமாகத் திகழ்கிறது. அன்பின் எல்லையில் தோன்றும் அவயத்தின் பாத்திரப் படைப்பு. கதன குதூகலமாய், இன்பத்தின் இசையாய்த்தான் தொடங்கியது. அவள் வாழ்வு. ஆனால் எந்த இன்பமும் திகட்டும் அளவுக்கு ஒருவருக்குப் போய் விட்டால், பின்னர் துன்பத்தில்தான் முடிகின்றது.

''ஐந்து வருஷம் நான் அவரோடு, ஸம்ஸாரம் பண்ணினேன், பட்டிணத்தில். என்பேரில் அவருக்கு ஏராள ஆசை. அந்த ஆசையே எனக்கு வெறுப்பைத் தந்தது. கொஞ்சம் நேரம் கூட என்னைத் தனியே விடமாட்டார். ஆபிசிலிருந்து எத்தனை நாள் லீவ் போட்டு விட்டுப் பகலில் திரும்பிவிடுவார்... என்று நிறுத்தினாள். ஸீதாவை நெருங்கி அவள் காதோடு ''அவருக்கு இருந்த ஆசை என் உடம்பை அடியோடு பாழாக்கிவிட்டது'' என்று நெஞ்சு அடைக்கச் சொன்னாள்.

சீதாவுக்கு விஷயம் வெளிச்சமாகவில்லை. பெரும்புதிராகவே இருந்தது. அவயத்தை இணைவதுபோல் நெருங்கி, ''எல்லோருக்குமா இப்படி ஆகிவிடும் புருஷா அதிக ஆசைவைத்தால்?'' என்றாள்.

''உடம்பை பற்றிய ஆசை எத்தனை நாள் நிற்கும்? அவர் என் உயிருக்காக அழவில்லை... என் அருமை அவருக்குத் தெரியவில்லை. என்னைச் சற்றும் பிரியாத மனுஷன், அந்த ஆறுமாசம் எட்டிப் பார்க்கவே இல்லை. எலும்பெடுத்த என் உடம்பில் புது ரத்தம் ஊறியது. என் மேனி பளபளத்தது. எனக்கு மீண்டும் திகில் மூண்டது. இந்த உடம்பு அவர் கண்ணை உறுத்துமோ என்று, எனக்குச் சகிக்கவில்லை அந்த மிருக ஆசை. பெண்களான நமக்கு உடல் மட்டுமா இருக்கு. உயிரும் ஒன்று இருக்கே? மரம் சாக மருந்தாக அதன் பட்டையை யாராவது உரிப்பார்களா? உடம்பு தேறாமல் நான் செத்துப் போயிருந்தால் சரியாகி விட்டிருக்கும்.

நான் போனதிலிருந்து அவருக்கு என் பேரில் எரிச்சல்... யமுனாவின் கலகம் வேறே சேர்ந்தது இரண்டு மாசத்துக்கெல்லாம் ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டார்!''

ஆனால், அவயத்துக்கு, பஞ்சபூதங்களின் சாட்சியாக மணம்புரிந்து கொண்ட கணவனுடன் வாழ ஆசைப்பட்டது அவளது உள் மனது.

''எனக்கு இன்னும் அவரோடு வாழவேண்டும் என்ற ஆசைதான். ஆனால் வழி அடைத்துவிட்டதே! இந்த அழகான உலகில் நான் எல்லோரும் போல வாழ ஆசைப்படுகிறேன்... ஆனால் இப்போ நான் அவர் மீது இருக்கும் ஆசையை என் மனசில் குடியிருக்கும் தெய்வத்திற்குத் திருப்பிவிட்டேன். என் பாட்டின் மூலம் அந்தக் கடவுளை அந்தரங்கத்துள் கூடி மகிழ்கிறேன். இந்த அன்பில் உடலின் உபத்திரவம் இல்லை''.

*(அன்பின் எல்லை அத்தியாயம்-13)*

அன்பினை உள்ளத்தில் தேடாமல், உடல் பசிக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தன்னையே அழித்துக் கொண்டு, இரண்டாம் மனைவியினால் உதறித் தள்ளப்பட்டு, அவளால் தனக்குக் கிடைத்த வாரிசுக்காக மட்டும் உயிர்வாழும் அவயத்தின் கணவன் லட்சுமணனின் கதை. விரக்தி அடைந்த ஒரு மனிதனின் கதை.



காமத்திலிருந்து மீண்டு, உண்மைக் காதலை உணர்வதற்குள், மீண்டும் காமத்தீயின் வெந்தழலில் சிக்குண்டு தன்னையே பொசுக்கிக் கொண்ட அவனுக்கு வாழ்வில் இருந்த பற்றுக்கோடு அவனுடைய பிஞ்சு மகன்தான். தாயினால் புறக்கணிக்கப்பட்ட அந்த பிஞ்சு நெஞ்சிற்கு ஆறுதலாக தாயாகவும் தந்தையாகவும் இருந்தான் லட்சுமணன். இந்தத் துன்பச் சூழலில் அவயத்தைக் காண வேண்டும் என்று ஏங்கியது அவன் உள்ளம். எதிர்பாராத சந்தர்ப்பத்தில் சென்னைக் கடற்கரையில் அவயத்தைக் காண்கிறான். தன் கணவனை, பல ஆண்டுகளுக்குப் பிறகு கண்டதும அவளுக்கு ஏற்பட்ட மாறுபட்ட உணர்ச்சியை வருணிக்கிறார் த.நா.கு.

''லட்சுமணன் சொந்த புருஷன்தான். ஆனால் பத்து வருஷத்துக்கு அப்புறம் அவன் அன்னியனாகவே தோன்றினான் அவளுக்கு. வழியில் அவயம் லட்சுமணனுடன் பேசவில்லை. தன் தோளில் பதித்த அவன் கையை விலக்கவுமில்லை. ஆனால் முன்புகாணாத ஒரு மென்மையும் ஆதரவும் அவனுடைய ஸ்பரிசத்தில் இருப்பதை உணர்ந்தாள். அவனுடைய குரலில் அந்த பழைய மிடுக்கு ஒழிந்து இளக்கமே அதிகமாக ஒலிப்பதைக் கேட்டாள்.

லட்சுமணனைப் பொருத்தவரை, ''அவயத்திடம் பெண்மையின் உயர்வையும், தன் ஆசைக்காக ஏற்றுக் கொண்ட மரகதத்திடம் அதன் தாழ்வையும் கண்டான். அவளை அழைத்துக் கொள்ள அவனுக்கு மூஞ்சி இல்லை.

அவயம்தான் ஒரு சமயம் இவன் கெடுபிடிக்கெல்லாம் பயந்து போனாள். மரகதம் அப்படியன்று. அவன் கண்களில் விரல்விட்டு ஆட்டுவாள். கடைசியில் நெஞ்சிளக்கமுள்ள அவயத்தினிடமே அடைக்கலம் புகுவதெனத் தீர்மானித்தான்.''

*(அன்பின் எல்லை அத்தியாயம் 21)*

தனக்காக ஒரு துணை தேவை என்பதற்கு மேல், தன் மகனுக்கு ஒரு உண்மையான அம்மா தேவை என்பதை உணரத் தொடங்கிய லட்சுமணனுக்கு அழுது தன் குறையைச் சொல்ல அவயத்தை நாடினான்.

பெரியவர்கள் சாதிக்கமுடியாத காரியங்களை, விடுவிக்க முடியாத சிக்கல்களை பிஞ்சு மனங்கள் கொண்ட இளங் குழவிகள்

சாதிக்கின்றன. தன்னை முழுவதும் அவயத்திடம் அளிக்க முடியாமல் மன உறுத்தல், மனத்திடை அவயத்துக்குத் தான் இழைத்த கொடுமைகள் இவை மனதினை அலைத்ததாலும் லட்சுமணன் அவயத்தை அவள் வீட்டில் சந்தித்தபோது, சங்கடமான அமைதி நிலவியது.

''அவயம் தலை நிமிராது வெகுநேரம் கம்மென்று இருந்தாள். நந்து கீழே கிடக்கும் தம்புராவின் தந்திகளைத தொடவே 'பஸ' என்று ஒலித்தது இருவர் இதயமும் இந்தச் சுருதிக்கு ஒத்துத் துடித்தன.

''யார் குழந்தை இவன்?'' என்றாள் அவயம். புடவை நுனியை திரித்துக் கொண்டே.

''ஜாடை தெரியவில்லையா?''-என்றான் லட்சுமணன்.

நந்துவைப் பார்த்து லட்சுமணன், ''உன் அம்மா, இவதாண்டா. உன் அம்மாகிட்டே இருக்கியா?'' என்றான்.

அதற்கு அந்த பாலன் தலையை அழகாக வளைத்து ''நான் அம்மாகிட்டே இருக்கிறேன். நீயும் இங்கேயே இரு அப்பா'' என்றான்.

லட்சுமணன் சிரித்தான். அவயத்தின் முகத்திலும் முறுவல் பூத்தது.''

*(அன்பின் எல்லை அத்தியாயம்-22)*

ஆனால் மீண்டும் குருத்துவிட்ட அவர்களின் அன்பு நிலைத்து நிற்க முடியவில்லை. ராஜபிளவை என்ற ஒரு வகை புற்றுநோய் தாக்கி வாழ்வின் இறுதிக்கு வந்துவிடுகிறாள், வாழவேண்டிய அவயம். ஆனால் அவள் தேடிய அன்பு பல இடற்பாடுகளுக்குப் பிறகு இறக்கும் தருவாயில்தான் அவயத்துக்குக் கிட்டியது. கொட்டிலை விட்டகன்ற பசு, கன்றினை நோக்கி மீண்டும் வருவதுபோல், வாழ்வில் பல ஏமாற்றங்களை ஏற்று, சொந்த தம்பியாலேயே வஞ்சிக்கப்பட்டு திரும்பி வந்த மரகதத்தை, உண்மையான அன்புப் பிணைப்பினை உணர, தான் மரணத்தின் வாயிலில் நின்று கொண்டிருந்தபோதும், வழி செய்து தருகிறாள் அவயம். தான் இளம் வயதில் பெறாத அன்பினை, தன்னுடைய சக்களத்தியாவது பெறட்டும் என்ற பெரிய உள்ளத்துடன், தன் இரண்டாவது மனைவியை, பகிஷ்காரம் செய்து, வெறும் பணியாள் போல் அவளை நடத்திய லட்சுமணனை அவளுடன் இணைத்து



வைக்கிறாள். இளைய ஸ்வரங்கள் இணைப்பில், உருவான இன்பராகமாகத் தொடங்கிய, அவயத்தின் மணவாழ்க்கையில், பல ஆண்டுகள், அபஸ்வரம் ஏற்பட்டு, மீண்டும் சுருதிகள் சேரும் தருவாயில், அவளுடைய வாழ்க்கையின் இசைக் கோலத்தில் திடீரென்று ஒரு மங்கலம் பாட வேண்டிய நிலை ஏற்பட்டபோது, இசையின் சிந்தனையிலேயே தன்னுடைய இறுதி நேரங்களில் திளைத்தாள்.

''மரகதம் தலை குனிந்தபடியே அவயத்தின் அருகில் வந்தாள். அவளுடைய கையைப் பற்றி லட்சுமணனின் கையோடு சேர்த்து, ''இந்தமாதிரி நீங்கள் இருந்தால் தான் என் மனசு சந்தோஷப்படும்... எனக்குப் பேச முடியவில்லை. கஷ்டமா இருக்கு அதோ பாருங்களேன்... அந்த ராகங்கள் ஸ்வரங்கள் இப்படி எங்கேயோ இறகு முளைச்சு பறந்து போகிறதே... நந்து என் கண்ணா அதையெல்லாம் பிடிச்சுக் கோடா.. பிடிச்சுக்கோடா என்றதும், அவள் கண் எதிரே, மரணம், அவள் வழிபடும் அழகிய சியாம சுந்தரனாகவே வருவதைப் பார்த்து, அவள் அவனை அணைத்துக் கொள்ள இரு கைகளைத தூக்கி, மீராவின் பாட்டை 'ஸீநி மைம் ஹரி ஆவோன்கி அவாஜ்' எனறு மெல்ல பாடிக் கொண்டே, கண்ணை மூடிவிட்டாள்''

*(அன்பின் எல்லை அத்தியாயம்-32)*

சுந்தர்-சீதா இவர்களுடைய கதையில், அவயம் லட்சுமணன் கதையில் உள்ளது போன்ற சோகத்தின் கனம் இல்லாவிட்டாலும், இளம் கணவன்-மனைவியிடையே ஏற்பட்ட பிரிவின் தாபம் எப்படி இருவரையும் பாதித்தது மனதளவில் என்பதைக் காட்டியுள்ளார் த.நா.கு.

திருமணமானவுடன் சில மாதங்களுக்குள், உயர் படிப்புக்காக இங்கிலாந்து செல்கிறான் சுந்தர். சுந்தரின் தந்தைக்கு தன் மகன், திருமணமான புதிதில், மனைவியைப் பிரிந்து வெகுதூரம் செல்வது, பிடிக்கவில்லையென்றாலும், மகனின் பிடிவாதத்திற்கு அவர் இணங்க வேண்டிவருகிறது. மேல் நாடு சென்று உயர் படிப்பில் ஈடுபடவேண்டும் என்று சுந்தர் முனைப்புடன் இருந்ததற்கு மற்றொரு, காரணம் தன் அக்காவுடன் ஜம்ஷெட்பூருக்கு சென்றபோது, அவனுடைய அத்திம்பேரின் நண்பர் சாரி, அவர்களின் மனைவி (இறந்த தன் தம்பியின் மறுபதிப்பினை சுந்தரிடம் கண்டாள்) கொடுத்த ஊக்கமும், சுந்தரை அந்த முயற்சியில் தீவிரமாக்கியது. சுந்தருக்கும் தேவகிக்கும் இடையே ஏற்பட்ட சந்திப்பின் விளைவால், இருவருக்கும் விவரிக்க முடியாத

ஒரு பிணைப்பு ஏற்படுகிறது. அதனால் சுந்தருக்குள் ஏற்பட்ட வித்தியாசமான அனுபவத்தை வருணிக்கிறார் த.நா.கு.

''படத்தைப் பார்த்து சுந்தரே திடுக்கிட்டான். அவனுடையே சாயலாகவே இருந்தான் இறந்துபோன சம்பத்.

படத்திலிருந்து தன் கண்ணை எடுத்து தேவகியை நோக்கினான். முகத்தை மூடிக் கொண்டு அவள் விம்மிவிம்மி அழுது கொண்டிருந்தாள். சுந்தரின் கண்ணும் கலங்கியது. அவளை எப்படி சமாதானப்படுத்துவது என்று தெரியவில்லை. அவளுக்கு துயரின் வேகம் ஒருவாறு அடங்கியதும் கண்ணீர் வெள்ளத்தில் நீந்தும் கருவிழிகளைத் தூக்கி சுந்தரையே வெகுநேரம் நோக்கி, அவன் கையைப் பற்றி, ''சுந்தர் நீ வேறு யாருமில்லை.. சம்பத்துக்குப் பிறகு நீயே என் அருமைத் தம்பி...'' என்றாள்.

அவளுடைய அன்பு பாசத்தில் சிக்குண்ட சுந்தரின் உள்ளங்கை உணர்ச்சி வேகத்தில் நடுங்கி வியர்த்தது. அப்போது அவனுக்கு தேவகி மீது படர்ந்த இந்த அபூர்வமான மனநிலையை, வாஞ்சையா, பாசமா, பக்தியா, சிநேகமா, மோகமா எதுவென்று சொல்லுவது மனோ தத்துவ நிபுணர்களுக்குக் கூட புரியாத விஷயம் இது!''

*(அன்பின் எல்லை - அத்தியாயம் -16)*

தேவகி, தன் தம்பியின் மீது வைத்த பாசத்தின், அன்பின் எல்லையை சுந்தரைக் கண்டவுடன், எவ்வாறுஅடைகிறாள் என்பதை ஆசிரியர் தேவகியின் பாத்திரப்படைப்பில் காட்டியுள்ளார்.

மனைவியைப் பிரிந்து, லண்டனில் உயர்படிப்பில், ஈடுபட்ட போது, இளமையின் வாசலில் அடி எடுத்து வைத்த சுந்தரின் மனதில், மார்கரெட் என்ற பெண்ணோடு ஏற்பட்ட சந்திப்பின் எதிரொலியும், அவனுக்காகவே ஒரு பிஞ்சுமனம் வீட்டில் காத்துக் கொண்டிருக்கிறது என்ற எண்ணமும் ஒன்றோடு ஒன்று மோதும் போது சுந்தரின் மனதில் ஏற்படுகிறது, ஒரு எண்ணக் குமுறல். கீரினிசுக்கு அவளை மீண்டும் சந்திக்க ஓடுகிறான் சுந்தர். அவனுக்கு முன்னால் அவனுடைய எண்ணங்கள் ஓடின. ஆனால் சொன்னபடி சுந்தரை சந்திக்க வரவில்லை மார்கரெட்.

மனதில் ஏற்பட்ட ஏதோ ஒரு சலனத்தினால், முன்பு அவன் மார்கரெட்டைச் சந்தித்தபோது, தனக்குத் திருமணமான விஷயத்தையும் அவளிடம் மறைத்தான் சுந்தர். வெகு நேரம் காத்திருந்தும மார்கரெட் வராததால் மனவருத்தம் ஒருபுறமும், குற்ற



உணர்வு மற்றொரு புறமும் அலைக்க, விடுதிக்குத் திரும்பினான். இனம் புரியாத ஒரு வேதனை சுந்தரின் மனதில் படர்ந்தது.

'அன்று அவன் முகத்தைப் பார்த்து ஆர்த்தர் திகிலடைந்து போய் ''என்ன உனக்கு? உன் முகம் இப்படி பேயாடினாற்போல் இருக்கே?'' என்று கேட்ட போது சுந்தர் பொங்கி வரும் அழுகையை அடக்கிக் கொண்டு ''எனக்கு இன்று ஸப்பர் வேண்டாம். நான் பட்டினியாக இருக்கப் போகிறேன்.'' என்றதும் தன் அறைக்குள் ஓடி, சீதாவின் போட்டோவை பெட்டியிலிருந்து எடுத்து கண்ணீரும் கம்பலையுமாக அதன் எதிரே தான் செய்த தவறைச் சொல்லி வெகு நேரம் தன் மார்போடு அந்தப் படத்தை அணைத்து இரவெல்லாம் மனம் புழுங்கி பிராயச் சித்தம் செய்து கொண்டான்.

*(அன்பின் எல்லை - அத்தியாயம் 28)*

புகுந்த வீட்டில், அதுவும் கணவன் அருகில் இல்லாதபோது, இளம் மருமகள் அடையும் உடல் வேதனையும், மனவேதனையும், இருதலைமுறைகளுக்கு முன் சில குடும்பங்களில் அனுபவித்தே தீர வேண்டிய நிலையாக இருந்தது என்பதை சீதாவின் பாத்திரப்படைப்பில் காட்டுகிறார் த.நா.கு.

''ஹிந்து குடும்பங்களில் புகும் நாட்டுப் பெண்கள் இரண்டு பேருக்கு அடங்கியாக வேண்டும். மாமியார் நாத்தனார் இவர்களிடம் நல்ல பெயர் எடுக்காது போனால் குடும்பத்தில் அவர்களுக்கு நிம்மதி ஏது?... எவ்வளவு வேலை இட்டாலும் முகத்தைச் சிடுத்துக் கொள்ளாமல் சீதா செய்யக் காத்திருந்தாள். ஆனால் ஜானகமும் கமலாவும் பல விதமாகத் தன்னைக் குத்திக் காட்டுவது தான் அவளுக்குச் சகிக்கவில்லை. கமலா பிரசவித்த புதிது; தீட்டு கழிவதற்குள் சீதாவின் பாடு தீர்ந்துவிட்டது.

குத்துவிளக்கு சுற்றுபுறமெல்லாம் ஒளியைப் பரப்பும்; ஆனால் அதன் கீழே எப்பொழுதும் இருள் கவிந்திருக்கும். நாட்டுப் பெண்ணின் கதி இவ்வாறு தான். இந்த நிர்பாக்கியவதிகள், நிழலில் இருக்கும் செடி போல் வளர்ச்சி குன்றி, கணவனுடைய அன்பின் ஒளியை நோக்கி படரப்பார்ப்பார்கள். அதுவும் கிடைக்காது போனால் வெளுத்து, வதங்கி, உடல் வளைய வந்தாலும் உள்ளம் வரைக்கும் இறந்தவர்களாகிவிடுவார்கள்''.

சீதாவைப் பொறுத்தவரை- சுந்தர் படிப்பை முடித்து கொண்டு சில நாட்களுக்குள் திரும்பி விடுவான் என்ற எண்ணமே, புகுந்த

வீட்டில் அவள் படும் கஷ்டங்களுக்கு மனவேதனைகளுக்கு மருந்தாக அமைகிறது. உள் மனதில் கணவனுடன் கூட வேண்டும் என்ற ஏக்கம், இள மங்கையின் மனத்தினில் ஒரு மாயக் கனவினை ஏற்படுத்துகிறது.

''காலையிலிருந்து அவள் நெஞ்சுள் மூண்ட, பலவிதமான அதிர்ச்சியின் எதிரொலிபோல, இனியதும் இன்னாததுமான விசித்திரக் கனவுகள் வரிசையாக எழுந்தன. கனவில் வேதனை தரும் காட்சிகள் வரும்போது அவள் மார்பு விம்மும்!.. சுந்தர் தன் தலையை மெல்லத் தொட்டு, 'இதோ நான் வந்துவிட்டேனே! கண்ணைத் திற' என்று கனவு உலகில் நடக்கும் நிகழ்ச்சியினைப் பார்த்து அவளுடைய இதழ்கள் முறுவலினால் விரியும்.

திடுமென அவள் கண்ணைத் திறந்தபோது தன் பக்கத்தில் தரையில் நீல நிற கடிதம் ஒன்று, விழுந்திருப்பதைப் பார்த்தாள். இன்னும் கனவின் மயக்கம் அவளுக்குத் தெளியவில்லை. எழுந்து அதைப் பற்றத் தாவினாள். ஏமாந்தாள்! அந்த நீலக் கடிதம் வேறொன்றும் இல்லை. ஜன்னலின் கண்ணாடிக் கதவின் வழியாக வந்து கீழே படிந்த நிலவுத்துண்டே.

*(அன்பின் எல்லை அத்தியாயம்-29)*

கணவன் அருகில் இருக்கும் போது, சீதாவுக்கு எல்லாமே கணவன் மயம்தான். இன்பத்தின் எல்லைக்கு வந்த பிறகு சீதாவின் மனதில் தோன்றிய நிறைவு, அந்த நிறைவு உருவாக்கிய மனச்சுமையை, அன்பின் எல்லையின் இறுதிப் பகுதிகளில் வருணிக்கிறார்.

''என்ன உடம்பு சீதா?'' என்றான் சுந்தர். சீதா முகத்தை நாணத்தால் வேறு புறமாகத் திருப்பி, எனக்கு என்ன?'' என்றாள்.

''என்னவோ மறைக்கிறாய், என்னிடம் சொல்லக் கூடாத ரகசியம் என்னவோ?''

''எனக்கு ஒரு வாரமாக எதைக் கண்டாலும் பிடிக்கவில்லை. அதுதான்''

சுந்தர் அவள் தோள்களைக் கையால் தொட்டு, சீதா, இதோ பார் உனக்கு என்ன வேண்டும் சொல்லேன்''. என்றான்.

''நீங்கள்தான்!''



சுந்தர் அவள் முகத்தையே கூர்ந்து நோக்கினான். அவள் தோளிலிருந்து மேலாடை மெல்ல நழுவியது. அவளுடைய மேனி வெளுத்துப் பூசி இருப்பது அவன் கண்ணில் படாமல் போகவில்லை. அழுகையும் சிரிப்பும் ஒருங்கே சேர, சீதா கண்களை கெட்டியாக பொத்திக் கொண்டாள்.''

அன்பு அதன் எல்லையில் வந்து நின்றது. அன்பின் எல்லை நவீனத்தில் அந்தணர் மரபில் வழக்கில் வந்த பல சடங்குகள் சம்பிரதாயங்கள் சமூகச் சூழல் இவற்றை திறம்பட சொல் ஓவியமாகத் தீட்டியுள்ளார், த.நா.கு. இவற்றில் பல பழக்கங்கள் தற்பொழுது அருகிவிட்ட போதிலும், இந்த நவீனத்தைப் படிக்கும் போது மூன்று தலைமுறைக்கு முன்னர் இருந்த கோலம் போட்ட கட்டாந்தரை, மங்கலான வெளிச்சம் உடைய பூஜை அறை, பாத்திரங்கள் பளபளக்கும் புகையேறிய அடுப்பறை, முதிய பெண்டுகள் சொல்லும் ஸ்லோகங்கள், இளம் பெண்களின் கொடி இடையை அலங்கரித்த ஒட்டியாணமும், அவர்கள் செம்மஞ்சு பூசிய பாதங்களிலிருந்து வரும் மெட்டி ஒலி ஆகியவை நம் செவிகளுக்கும் கண்களுக்கும் விருந்தாக அமைந்து அந்த நாட்களை நம் கண்முன் நிறுத்துகின்றன, த.நா.கு.-வின் விறுவிறுப்பான நடையிலே.

## கானல் நீர்

1955-56-ல் அமுதசுரபி இதழில் தொடராக வெளிவந்தது. 1970-ல் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கத்தின் ஆதரவில் புத்தக வடிவில் வந்தது. இப்புதினம்.

கானல் நீரின் கதையமைப்பை, நன்றாக அமைக்கப்பட்ட திரைக்கதை என்றே கூறலாம். திரைக் கதையில் அமைந்துள்ள சில பிரதான உத்திகளை இந்நவீனத்தில் த.நா.கு பயன்படுத்தி உள்ளார். இந்நாவலில் தீட்டப்பட்ட சில சம்பவங்களும், திரை உலக நிகழ்வுகளை அடித்தளமாக வைத்து ஆசிரியரால் அமைக்கப்பட்டுள்ளன. 1950களில் கல்கத்தாவில் திரைப் படத்துறையில் அவருக்கு ஏற்பட்ட இனிமையான மற்றும் இனிமையற்ற சில சொந்த அனுபவங்களை மையமாக வைத்துச் சில சம்பவங்களை உருவாக்கியுள்ளார் இந் நவீனத்தில்.

''இப்புதினத்தில், பாத்திரங்களாக வரும் சுரமா, பாலு, நடராஜன், ரங்கவல்லி, பிலோமினா ஆகியோர் உண்மை வாழ்க்கையில் நடமாட நான் கண்ட மனிதப் பிறவிகளே, அவர்களுடைய

வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றை அப்படியே கூறிவிட்டுச் செல்லுவது வெறும் செய்தியாகும். கலை நோக்கிலிருந்து அதைச் செய்வது இலக்கியமாகும். உண்மையெனும் கொழு கொம்பினை பற்றியே கற்பனைக் கொடி படர்கிறது. தன் பாத்திரங்களுடன் எழுத்தாளனும் ஒன்றிவிடும்போது அவன் படைப்புக்கு ஒரு சுவையும் விறுவிறுப்பும் தோன்றுகின்றன.''

*(கானல் நீர் - முகவுரை)*

குறுக்குச் சுவர், ஓட்டுச் செடி நவீனங்களில், கதையமைப்பு உத்திகளில், எளிமையைக் காணமுடிகிறது. ஆனால் கானல் நீர் நவீனத்தில், சம்பவங்கள் பல நிறைந்த, சிக்கலான கதை அமைப்பினைக் காண்கிறோம். எதிர்பாராத திருப்பங்களும் நிகழ்வுகளும், கானல் நீர் நவீனத்துக்கு விறுவிறுப்பான ஓட்டத்தினை அளிக்கிறது. இதில் த.நா.கு, பல இடங்களில், திரைப்படத் துறையைச் சார்ந்த கதை சொல்லும் உத்திகளை இடையிடையே பயன் படுத்தியுள்ளதால், ஒரு நல்ல சம்பவச் செட்டான திரைப்படத்தினை பார்க்கும் உணர்வினை, படிப்போர் மனதில் ஏற்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளார். கதை மாந்தர்களின் எண்ணங்கள் இயக்கங்கள், இவற்றை மூன்றாவது மனிதனின் கண்ணோட்டத்தில், போக்கில் இடையிடையே ஆராய்ந்து அளிக்கும் குறிப்புக்கள், கதையோட்டத்துடன், கதை மாந்தர்களுடன் ஆசிரியரையும் இணைத்து விடுகிறது. ஆசிரியரின் இத்தகைய குறுக்கீடு இடையூராகத் தோன்றவில்லை. அதற்குமாறாக, புதிய புதிய பரிமாணத்தை அளிக்கிறது. ஓசையின்றி தாவரத்தின் வேர் உறுதியான பாறையைப் பிளப்பதுபோல், சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்படவேண்டும் என்ற கருத்தினை பல இடங்களில் வலியுறுத்துகிறார்.

''தம் ஆசை மகளின் உள்ளத்துள் துயர் ஒன்று குடிகொண்டு அவளை இப்படிக் கனவில் கூட வருத்துகிறதென அவர் உணராமல் இல்லை. மாண்ட கணவனைக் குறித்ததன்று அந்தத்துயர் என்பதும் அவருக்குத் தெரியும். சுரமாவின் யௌவனம் வீண போவதுதான் அவர் நெஞ்சைப் பிழிந்தது. அவ்வளவு படித்தவர், மகாபண்டிதர், அவருக்கும் ஆத்திரம் பொங்கியது. நெடு நாளாக இந்தச் சமூகம் இயற்றி வரும் மூடவழக்கங்களை - கொடுமைகளை, உதறித் தள்ள வேண்டுமென்று. ஆனால் காரிய முறையில் காட்டுவது அவ்வளவு எளிதன்று... மனிதன் முள்ளை விதைத்தால் அதன் விளைவை அவன்தானே அறுவடை செய்ய வேண்டும்! பரந்த உள்ளத்துடன்



புதிய சமூகத்தைப் படைக்க வேண்டாம் என்று அவனைக் கடவுள் தடுக்கவில்லையே? மனிதவர்க்கம் படிப்படியாகத் தன் பிழையைத் திருத்திக் கொண்டு உன்னத லட்சியத்தை நோக்கிச் செல்கிறது. எறும்பூரக்கல்லும் தேயும் என்பதுபோல் இது அமையவேண்டும்.

*(கானல் நீர் பக்கம் 4,5)*

பள்ளிப் பருவத்தில் வேரூன்றிய காதல் உணர்வு உந்த, பல ஆண்டுகளுக்குப் பிறகு தனது சொந்த ஊரான மருதவயல் கிராமத்துக்கு திரும்பி வருகிறான் நடராஜ். சுரமாவின் திருமணமும், பின்னர் ஏற்பட்ட கைம்மையும், பிறந்த வீட்டில் அவள் அமைதியாக அனுபவித்து வரும் துன்பத்தினையும் அறிந்த நடராஜ் அவளுக்கு புது வாழ்வு கொடுக்க எண்ணி கடிதம் கொடுக்கிறான். கண்ணீரே பாய்ந்து வரண்ட சுரமாவின் உள்ளத்தில், பசுமையின் சிலிர்ப்பு, பழைய நினைவுகளின் இனிமையான இழை ஓட்டம்.

''விதியோ, கடவுளோ அது எதுவோ அவளை இவ்வளவு நிர்பாக்கியவதியாக்கினாலும், அவள் உள்ளத்துள் ஊற்றெடுத்த தெம்பையோ, அவளுடைய உடலில் பரவிய அழகையோ, நலத்தையோ அழிக்க அதற்கு வலிமையில்லையே! இளமையுள்ளவர்கள் எப்பொழுதுமே ஆனந்தத்தை நோக்கிப் படருபவர்கள், வாழ்க்கையின் வேதனைகளைச் சடுதியில் மறக்கக் கூடியவர்கள். சுரமாவும் தன் கைம்மையைக் குறித்து இடி விழுந்து போய்விடவில்லை. கணவனுடைய சகவாசத்தையே அறியாத ஒரு விதைவைக்கு எந்த விதத்தில் இன்பத்தின் வாசல் அடைப்பட்டு போகும்...''

*(கானல் நீர் பக்கம் 21)*

நண்பன் பாலுவின் உதவியுடன், நடராஜன்,சுரமாவை கூட்டிவருவது பற்றி ஆலோசித்து திட்டம் தீட்டுகிறான். தன்னுடைய சித்தப்பா வீட்டுக்கு போய்க் கொண்டிருக்கும் சுரமாவை ரயில் நிலையத்தில் சந்தித்து தான் அவளை ஏற்றுக் கொண்டு வாழ்வளிப்பதாக உறுதியளிக்கிறான். மாசி மகத்துக்கு மகாபலிபுரத்துக்கு நீராட வருவதாகச் சொன்ன சுரமா அங்கு காத்திருப்பதாகவும் கூறுகிறாள். நடராஜனுக்காக காத்திருந்த சுரமா, இரவு நெருங்கியும் அவன் வராததை அறிந்து, கடலில் மூழ்கி உயிர்விடத்துணிந்தாள். கடலில் இறங்கினாள். டயர் பஞ்சர் ஆனதால், அங்கு நேரத்துக்கு வந்து சேர முடியாத பாலுவும், நடராஜனும், கடலில் மூழ்கும் சுரமாவை காப்பாற்றி சென்னைக்கு

அழைத்துச் சென்றனர்.

புதிய இடம், புதிய சூழல் இவற்றிற்கு தன்னை ஒருவாறு தயார்படுத்திக் கொண்ட சுரமா நடராஜனின் நண்பன் பாலுவின் முரட்டுத்தனமானத் தோற்றத்துக்கு பின் மறைந்துள்ள பிஞ்சு மனத்தை உணர்கிறாள்.

பாலுவின் இளமை வாழ்க்கையில் ஏற்பட்ட நிறைவேறாத காதலை அடிப்படியாக கொண்டு படம் எடுக்கத் திட்டமிடப் பட்டுள்ளதை அறிந்து, தான் ஏன் கதா நாயகியாக அதில் நடிக்கக் கூடாது என்று சுரமா தன்னுள் தோன்றிய எண்ணத்தை வெளியிட்டாள்.

பாலு இதை அறிந்து மகிழ்ந்து, சுரமாவை கம்பெனியில் மூன்றாவது பார்ட்னராகச் சேர்த்து கம்பெனிக்கு சுரமா பிக்சர்ஸ் என்று பெயரிடுகிறான். படத்தின் துவக்க விழா சிறப்பாக நடைபெறுகிறது. அச்சமயம் நடராஜனின் பழைய தொடிசு ரங்க வல்லி வந்து சேருகிறாள். அவளுடன் பொழுதினைப் போக்கிவிட்டு, வந்த நடராஜனைக் கண்டித்தான் பாலு. நடராஜன் நண்பன் பாலுவுடன் கருத்து வேறுபாடு கொண்டு, சுரமாவையும் விட்டு விட்டு வெளியேறுகிறான். பிறகு ரங்கவல்லியின் ஆலோசனையின் படி, குண்டர்களை வைத்து, சுரமாவை பாலுவின் இல்லத்திலிருந்து கடத்துகிறான். பங்களூரில் 'லவ் டேல்' என்ற பங்களாவில், சுரமாவை குடிவைக்கிறான் நடராஜன். அங்கே ஒரு நாள், ஒரு வித மயக்க நிலையில் தன்னை நடராஜனுக்குத் தந்தாள் சுரமா. இதற்கிடையில், பிலோமினா என்ற நங்கையிடம், மணமுடிப்பதாக வாக்களித்துவிட்டு வந்த நடராஜனை, பிலோமியின் அண்ணன் அப்போன்ஸோ கடத்திச் சென்று பிலோமியுடன் சேர்த்து வைக்கிறான். அல்போன்ஸோவின் மிரட்டலுக்குப் பயந்து பிலோமியை, நடராஜன் திருமணம் செய்து கொள்கிறான்.

பிரமுகர்கள் கூடும் கிளப் ஒன்றில் பாலு தற்செயலாக ரங்கவல்லியைச் சந்திக்கிறான். நயமாகவும் மிரட்டியும் ரங்கவல்லியிடம் பேசி, நடராஜனும், சுரமாவும் தங்கியுள்ள லவ்டேலை அடைந்தான் பாலு. அங்கே சுரமாவைக் காணாது திகைத்தான் பாலு. விசாரித்து பார்த்தபின் பங்களூருக்கு அருகில் உள்ள கிராமம் ஒன்றில் சுங்கம்மா என்பவளின் பாதுகாப்பில் சுரமா இருப்பதை அறிந்து அவளை மீட்கிறான் பாலு.

பாலு படப்பிடிப்பு வேலையில் மும்முரமாக ஈடுபடுகிறான்.



படப்பிடிப்பு துவங்க முடிவு செய்யப்பட்டு, சுரமா கர்ப்பமுற்றிருப்பதை அறிந்து மனவேதனை அடைகிறான் பாலு. எவ்வளவு விசாரித்துப் பார்த்தும் நடராஜனைப் பற்றிய தகவல் தெரியாததை அறிந்து பின்னும் கவலை கொண்டான். பிறக்கப் போகும் குழந்தைக்கு தகப்பன் இல்லாமல் போகக்கூடாது என்பதற்காகவும், சுரமாவைத் தானே பதிவுத் திருமணம் செய்ய முடிவெடுத்தான் பாலு.

ஓரிரண்டு மாதங்களுக்குள் படத்தை எப்படியாவது எடுத்து முடித்துவிட வேண்டும் என்று பாலு முயன்ற போது டைரக்டர் ஒத்துழைக்க மறுக்கவே, கல்கத்தாவுக்குச் சென்று அங்குள்ள டெக்னீஷியன்களைப் பயன்படுத்தி படத்தை முடிக்க முடிவெடுத்து பாலு கல்கத்தா செல்ல திட்டமிடுகிறான்.

சுரமாவின் பெயரில் பெருந்தொகையை வங்கியில் டெபாசிட் செய்தான். பிறக்கப்போகும் குழந்தையைத் தன் வாரிசாக சட்டபூர்வமாக உயிலையும் எழுதினான். பின்னர் கல்கத்தா புறப்படத் தயாரானான் பாலு. நடராஜனின் கருவை ஏந்தியிருந்த சுரமாவை பாலு ஏற்றுக்கொண்டது "சிப்பிக்குள் விழுந்த ஒரு பனித்துளி நல்ல ஜாதிமுத்தாக வளர்வதற்கே.." என்றான் பாலு, கண்களில் நீருடன் சுரமா அதை ஒரு அவமானச் சின்னமாக கருதியபோது.

"இது அவமானச் சின்னமே அன்று. நீ கொண்டிருந்த உயர்ந்த காதலின் சின்னம்! உலகம் தூற்றுவதற்கு அஞ்சாதே. உன் சிசுவை, என்னுடையதென்று ஏற்க நான் தயாராக இருக்கிறேன்! அது நடராஜனுடைய குழந்தையன்று; என் குழந்தையே." என்றான் பாலு கண்களில் நீர் துளிக்க.

"பாலு என்ன மனசு உனக்கு. எனக்கு இவ்வளவு யார் செய்வார்கள்? கணவனுக்கும் மேலானவன் நீ. சகோதரனுக்கும் மேலானவன், நீ என் கடவுள்." என்று உணர்ச்சி மிகுதியில் பாலுவின் மடியில் சாய்ந்தாள் சுரமா. மண நாளன்றே பாலு கல்கத்தா பயணம் போக வேண்டியுள்ளதைக் கண்டு சுரமா,

"போயும் போயும் இன்றைக்கா இதற்கு முகூர்த்தம் பார்த்தாய் பாலு?" என்றாள்.

நம்முடைய மண நாள் என்று சொல்லுகிறாயா? எனக்கு எல்லாம் ஒரே தினம். இளம் காதலர்கள் போல் நாம என்னமாவது விளையாடப் போகிறோமா? காதலர்களுக்கு மட்டும்தானா கல்யாணம்! இரண்டு

ஆத்மார்த்த நண்பர்கள் கூடுவதும் கல்யாணம்தான்! உன்னைப் போன்ற தங்கையை அடைந்ததும் கல்யாணமே. மணம் என்ற சொல்லுக்கு நான் தரும் அர்த்தமே வேறு' நாம் நடத்திய இந்த திருமணம் உடலுக்கு அன்று உள்ளத்துக்குத்தான்'' என்றான். சுரமாவுக்கு மயிர்க் கூச்செறிந்தது'

(*கானல் நீர் பக்கம் 206*)

ஆனால் கல்கத்தா புறப்படும் முன், எதனாலோ குறுக்கும் நெடுக்குமாகச் சற்று அலைந்தான். அவனுக்கே தெரியவில்லை அதன் காரணம். சுரமா அப்போது உட்புறம் சென்றிருந்தாள். சுரமா என்று கூப்பிட்டான் சுரமா பாலுவின் குரலைக் கேட்டதும் வெளியே வந்தாள். அவளிடம் பருத்த 'பர்ஸ்' ஒன்றைத் தந்ததும், ''நான் வருகிற வரைக்கும் இதிலிருந்து செலவு செய்து கொள்'' என்று கூறி பாலு சற்று நிதானித்தான்.

சுரமாவும் அங்கேயே நின்றாள். இத்தனை நாள் அடக்கி வைத்திருந்த உணர்ச்சியின் வேகம் உடலை அசைக்க, பாலு சுரமாவின் முகத்தை இரு கைகளாலும் மெல்ல தூக்கி அவள் கன்னத்தில் முத்தம் தந்தான். சற்றுப் பொறுத்து பாலுவே குரல் தழுதழுக்க, ''நான் தவறு செய்துவிட்டேன். சுரமா ஏமாந்து போனேன்.''

''பாலு நீ என்ன செய்துவிட்டாய்? நான் உன் சொத்துதானே... இன்று நம் மண நாள். உன் அன்பின் பரிசாக இதைப் பெற்றேன்.'' என்றாள். (கா.நீ பக்கம் 209,210) மண நாள் அன்றே, ரயில் விபத்தில் பாலு மரணத்தைத் தழுவினான்.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, பல விசித்திரமான சூழலில் அடிப்பட்டு தன் காதலி பிலோமியை இழந்து, நடராஜன், அவனுடைய மகன் சார்லியை சுரமாவிடம் ஒப்படைக்கிறான். சுரமாவும் சார்லியை நேசிக்கிறாள். சுரமாவுடன் தான் வாழ தகுதியற்றவன் என்று முடிவு செய்து பித்தன் போல், பழைய நினைவுகள் மனதினை வாட்ட மருதவயல் கிராமத்திற்கே சென்று, புல்லாங்குழலில் உள்ளத்தை வாட்டிய சோகத்தினை வெளிப்படுத்தினான். தான் யார் என்பதை மருதவயலில் வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை நடராஜன்.

இதற்கிடையில், பாலுவின் தந்தை பாலுவின் சொத்துக்களுக்காக, சுரமாவின் மீது வழக்கு தொடர்ந்து இருப்பதாகவும், சுரமாவின் குழந்தை ரூபஸியை தன் பொறுப்பில்



பாலுவின் தந்தை அபகரித்து வைத்திருப்பதையும் அறிந்து, ரூபஸியை மீட்டு சுரமாவிடம் சேர்த்துவைக்கிறான். தந்தையைக் கண்டதும் சார்லியின் மனவேதனையும் மறைகிறது.

அத்துடன் பாலு இறப்பதற்கு முன் தனக்கு எழுதிய கடிதத்தை சுரமாவிடம் ஒப்படைக்கிறான். அந்தக் கடிதம் கோர்ட் கேசை சுரமாவுக்கு சாதகமாக்க உதவும் என்று கூறிவிட்டு, புறப்பட்ட போது, 'போக வேண்டாம்' என்று தடுத்தாள் சுரமா.

''எனக்கு இனி இந்த வாழ்வில் என்ன இருக்கிறது? கானல் நீரை உண்மை என்று நம்பி அலைந்தேன். வாழ்வு என் வரைக்கும் வறண்ட பாலையே...'' என்றான் நடராஜ்.

''இல்லை ராஜ்! அது இன்பம் குலவும் பூஞ்சோலை ஆவதற்கு எத்தனை நாழிகையாகும்? என்றாள் சுரமா. அவள் நடராஜனின் மார்பில் முகத்தைக் கவித்துக் கண்ணீர் பெருக்கினாள். ஓர் ஆன்மா மட்டும் இதைக் கவனித்து பேர் அமைதியை அடைந்ததோ என்னவோ? அது பாலுவின் ஆன்மாதான்!

கானல் நீர் நவீனத்தில் பாலு ஒரு உயர்ந்த பாத்திரப் படைப்பு. பகைவனுக்கும் அருள் வாய் நல்நெஞ்சே என்ற முதுமொழிக்கு இலக்கணமாக நண்பன் நடராஜன் பல முறை மறைமுகமாக தன்னிடம் உண்மைகளை மறைத்து ஏமாற்றியிருந்தாலும், அவனை மனதார மன்னித்து, அவனிட்ட வித்தினை, தன்னுடையதாக சமுதாயத்தின் முன் ஏற்ற துணிவு, இவை பாலுவின் வித்தியாசமான அணுகுமுறையை நமக்குக் காட்டுகிறது. இளமையில் தன் காதல் கை கூடாததால், விரக்திகொள்ளாமல், காதலை இணைக்கும் பாலமாகிறான் பாலு. நடராஜனின் நயவஞ்சகத்திற்கு, பதில் வஞ்சம் வைக்காமல், அவன் கைவிட்ட சுரமாவுக்கும், அவள் சுமந்த நடராஜனின் வாரிசுக்கும் சமுதாய அந்தஸ்து கொடுக்கிறான். இறப்பதற்கு முன், நடராஜனுக்கு எழுதிய கடிதத்தில் பாலுவின் உள்ள நிலையை ஆசிரியர் உளவியல் தளத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

''உன்னையும் சுரமாவையும் இணைக்க வேண்டுமென்று நான் முயன்றது கைகூடவில்லை.. நான் அவளிடத்தில் ஓரளவுடன் பழகுகிறேன். வரம்பு மீறிச் செல்லாமல் கடவுள் என்னைக் காப்பாராக. என்மீது அவளுக்கு அதை என்னவென்று சொல்லுவது-மெல்லப் படர்ந்து வருகிறது... நான் விலக விலக அந்த மெல்லிய கொடி என்னைப் பற்றத் தாவுகிறது.. ஒதுங்கிப் போய் விட

முடியும்? ஆனால் என்னவோ ஒன்று அவளிடத்தில் என்னை நிலைக்கச் செய்கிறது. இந்த மாயா வசீகரத்திலிருந்து எப்படிப் பிழைப்பேன்? இப்படியே சென்றால் முடியாதென்றே படுகிறது. என் மரணம் ஒன்றுதான் இந்த பயங்கர நிலையிலிருந்து என்னை விடுவிக்கும்''. பாலுவின் கடிதத்தைப் படித்த பின் நடராஜனின் எண்ணப் போக்கில், மற்றொரு உளவியல் பரிமாணத்தைக் காட்டுகிறார்.

''தன்னை நோக்கி வரும் சுரமாவை அவன் தொட்டிருந்தால் தான் என்ன? அது தவறே அல்ல. ஒருவனிடம் ஏமாற்றமடைந்த உள்ளம் மற்றொருவனிடம் ஆறுதல் கொள்ளுவது மனித தர்மத்திற்கு முரணானதன்று...''

*(கானல் நீர் பக்கம் 268,269)*

கானல் நீரில் த.நா.கு. உருவாக்கியுள்ள நடராஜ், ரங்கவல்லி, சுரமா, பாலசுந்தரம், பிலோமினா ஆகியோர் நவீனத்தின் சம்பவச் செறிவில் சிக்குண்டாலும் முழுமை பெற்ற பாத்திரங்களாகவே விளங்குகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் அடிப்படை உணர்வு உந்துதலாக அமைகிறது. நடராஜ்-காதல் வேட்கை ரங்கவல்லி -வஞ்சம். சுரமா-அன்பு-பாசம். பாலசுந்தரம்-தியாகம். பிலோமினா-தூய அன்பு. கானல் நீர் நவீனத்தில் த.நா.கு கதையமைப்புக்கும் பாத்திரப் படைப்புக்கும் சம அளவில் உரிய இடமளித்துள்ளார். விறுவிறுப்பான கதையோட்டத்துடன், சீரான முறையில், கதைமாந்தர்களின் வளர்ச்சியையும், உயர்ச்சியையும், வீழ்ச்சியையும் நாம் காண்கிறோம். ஆங்கில திறனாய்வாளர்கள் இத்தகைய நவீனங்களை ''சீராக அமைந்த புதினங்கள்'' (Well made novels)என்று குறிப்பிட்டுள்ளனர். கானல நீர் புதினத்துக்கும் அந்தக் கூற்று பொருத்தமாக அமையும்.

## குறுக்குச் சுவர்

மெல்லிய தென்றல் போல, பூவினுள் தங்கியுள்ள மகரந்தம் போல் மணம் வீசும் சிக்கலற்ற உணர்ச்சி ஓவியம் குறுக்குச் சுவர். வானொலிக்காக பிரத்யேகமாக எழுதப்பட்டு, தொடராக சென்னை வானொலியில் வானொலி அலுவலர் டி.என். விஸ்வநாதனின் இனிய குரல் மூலம் இலக்கிய ஆர்வலர்களையும் நேயர்களையும் கவர்ந்தது இப்புதினம். ஒரு சில கதை மாந்தர்களை மட்டுமே கொண்டு, பட்டு இழைபோல் நளினமான கதையோட்டத்துடன் அமைந்துள்ள இந்த காதல் கதையில் சுந்தரம் உஷா இவர்களிடையே



தோன்றும் மன உணர்ச்சிகளை, எழுச்சிகளை, புன்னகைகளை, பெரு மூச்சுக்களை மெல்லி நூல் மாலை போல் பின்னியுள்ளார் ஆசிரியர்.

பல்வேறு குறுக்குச் சுவர்கள், வாழ்க்கையில் நம்முடைய இலட்சியங்களை அடைய ஒட்டாமல் தடுக்கின்றன. சில நாமே உருவாக்கிக் கொள்பவை. சில சமுதாயம், குடும்பம் இவை உருவாக்கும் தடைச் சுவர்கள். மொட்டாகி மலர்கின்ற பருவத்தை அடைவதற்குள் உலர்ந்து உதிர்ந்துவிட்ட சுந்தரத்தின் காதலை, அத்து மீறாத கட்டுக்குள் அடங்கிய உணர்ச்சியாகவே தொடர்ந்து காட்டுகிறார் ஆசிரியர்.

''அன்று இரவு சுந்தரம் வாசல் திண்ணையில் படுத்துக் கொண்டான் உள்ளே இறுக்கமாக இருக்கவே. அவன் உள்ளத்தில்தான் ஒரு கிளர்ச்சி மூண்டு விட்டதே! எத்தனையோ விந்தைக் கனவுகள் எழுந்தன. எதிர்வீடு யாருமே புகமுடியாத ஒரு காவற்கோட்டை-அதன் மச்சு அறை ஒன்றில் ரூபவதியான இளவரசி பவளக்கால் கட்டில் மீது அன்னத்தூவி- அணைமீது கண் வளர்கிறாள். அவளை எழுப்பும் மந்திரம் யாருக்குமே தெரியவில்லை. மதிலைத்தாண்டி சுந்தரம் உள்ளே செல்கிறான். யாருமே அவனைத் தடுக்கவில்லை... மெல்ல அணுகி அவள் பிறை நெற்றியைத் தொடுகிறான். குவளை போன்ற கண் இதழ்கள் விரிகின்றன. மந்திரத்துயில் கலைகிறது...''

டீன் ஏஜ் உள்ளங்களிடையே அவ்வப்போது காதல் வயப்பட்டதால் தோன்றும் நினைவும் கனவும் கலந்த உள்ள நிலையை காவிய நயத்துடன் அளிக்கிறார்.

''அழகின் சிறு அரும்பு முற்றி முகைப் பதத்துக்கு வரும் ஒரு பெண்கொடி உஷா, நினைப்பதெல்லாம் கண்கூடாக உருவாக்க விரும்பும், உலக அனுபவத்தின் வாசல்படியில் நிற்கும் இளைஞன் சுந்தரம், அவள் யாரோ! இவன் யாரோ! எந்த முறையிலும் நெருங்கியவர் அல்ல. கேட்கப் போனால் மலை மடு போன்ற அந்தஸ்தில் இருப்பவர்கள். இப்படித் திடுமென இருவரையும் ஏதோ ஒன்று இணைத்துவிட்டது. உள்ளத்தில் மெல்லத் தென்றல் புகுந்து ஒரு மாயத் திரையை விலக்க வழிதெரியாமல் அலையும் மன நிலையில் இருந்தான் சுந்தரம். அவள் அறையில் இராது போனாலும், அதன் ஒவ்வொரு பொருளிலும் அவள் நிறைந்திருப்பதுதான் அவனுக்கு வியப்பை அளித்தது'' (குறுக்குச் சுவர் பக்கம் 26) கடவுள் மீது மாறாக்காதல் கொண்ட பக்தர்களின்

உள்ள நிலைபோல், சுந்தரத்தின் மனதிலும், ஓர் அபூர்வ உணர்ச்சியின் தொடக்கத்தை மலரிலுள்ள மணம் போல் நமக்கு அளிக்கிறார் த.நா.கு. சுந்தரம் உஷா இவர்களிடம் படர்ந்த அன்பின் இழையில், ஒரு சிக்கலாக, முடிச்சாக, தோன்றுவார், பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ், என்று சுந்தரம் எதிர்பார்க்கவில்லை. வெள்ளை மனதுடன், உஷாவைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் கள்ளம் இல்லாமல் கூறினான் சுந்தரம், தன்னுடைய அலுவலகத் தலைவர் பாலகிருஷ்ணனிடம்.

''அவர்கள் வீட்டில் சகஜமாய்ப் பழகுகிறாய் இல்லையா? இது பாலகிருஷ்ணனின் அடுத்த கேள்வி.

''அப்பாவும் சுப்பராமனும் சிறுவயது பிடித்தே தோளோடு தோள் ஒட்டிய நண்பர்கள்... மனசை விட்டு பேசும் சுபாவம் உஷாவுக்கு..''

''உன்னிடம் மனம் விட்டு என்ன சொன்னாள்?'' அப்போது சுந்தரத்தின் முகத்தில் ஒரு மாறுதல் தோன்றியது. பாலகிருஷ்ணனையே நோக்கினான். தன்னைக் காயாகவைத்து அவர் ஆடுவது துளிகூட தெரியவில்லை...

''அவருக்கு ஏதாவது வரன் கிரன் தேடுகிறார்களா?'' என்றார் பாலகிருஷ்ணன்.

''நான் ஏன் அதைப்பற்றியெல்லாம் விசாரிக்கப் போகிறேன் . அவளுக்கு அத்தான் உறவா அம்மான் சேய் உறவா ஆவலாகத் கேட்பதற்கு'' என்றான் சுந்தரம் முகத்தில் வேதனைபடர.

அவருடைய கேள்விகள் சுந்தரத்தின் மனதுள் எந்த நுட்பமான இடத்தையோ துடிக்கச் செய்துவிட்டன... பாலகிருஷ்ணன் ஒருவாறு சுந்தரத்தை உரைத்துப் பார்த்துவிட்டார் தம் கட்டளைக் கல்லில்... குறுக்கே ஒருவன் நுழையும்போது இவர்கள் உள்ளம் உடைந்து போவதற்கு இந்த நட்பு அவ்வளவு முதிர்ச்சியடையவில்லை..''

''கல்யாணப் பேச்சைக் கேட்டதும், உஷாவின் மனத்தினில் விசித்திரமான எண்ணப் போக்கு உண்டாகியது. அன்று பார்த்த பாலகிருஷ்ணன் முகத்துடன், உஷாவின் மனக் கண்ணாடியில் மற்றொரு முகமும் தென்பட்டது. ஒன்றை மறக்க முயன்றால் மற்றொன்று வந்து நின்றது.

ஆனால் சுந்தரத்தின் அடி மனதில் அவனையும் அறியாமல் மெல்ல உஷா குடியேறிவிட்டது. அவனுக்கே தெரியவில்லை. ஆனால் அன்னைக்கு மேலாக அவன் மேல் பாசம் வைத்த



சிற்றன்னை அம்மணி மட்டும் சுந்தரத்தின் உள்மனத்தின் துடிப்பினை அறிந்தாள்.

''ஸரஸ்வதி அலங்காரத்தை அன்று இரவு எல்லோரும் மெச்சினர். காலையில் சுந்தரம் சித்தூருக்குக் கிளம்பும் போது அம்மணி அவனிடம், நீ தப்பாக எண்ணிக் கொள்ளாதே. 'இந்தப் பிச்சைக் கார பயலுக்கு அவர்கள் வீட்டில் என்ன ஜோலி?' என்று ஊரில் பேச்சு... உஷா நல்லமாதிரிப் பெண்தான். அவளுடன் ரொம்பப் பழகாதே. பின்னால் எதாவது கஷ்டம் நேரிடும்.'' என்றாள்.

உஷாவுடன் பழகுவதில் சங்கடம் நேரிடலாம் என்பதை இது நாளும் சுந்தரம் உணரவில்லை. இருவர் நெஞ்சம் நட்பில் பின்னிக் கொள்வதை உலகம் வேறு கண்ணோடுதான் பார்க்கும். இரண்டு மாதம் ஊர்ப்பக்கமே திரும்பக் கூடாதென சங்கல்பம் செய்து கொண்டான். ஆனால் சுந்தரத்தின் வரவை நோக்கி ஆவலுடன் காத்திருந்தது மற்றொரு உள்ளம், கார்த்திகை மாதத்து நிலவொளியில்.

''பாவை இன்னும் அந்த ஜன்னலைவிட்டு நகரவே இல்லை. தொலைவில் ஒரு குடிசைமுன் தட்டாமாலை ஆடிய மாவளி திக்கென்று பொறிகளை வீசி மறைந்துவிட்டது. கோடிக்கணக்கான ஆண்டுகள் கழிந்த பின்னர் நினைவுக்கும் மறதிக்கும் எட்டாத ஒரு மந்திரச் சொல் அன்று அந்த நிலவில் அமுததாரையாக அவள் உள்ளத்துள் நுழைந்து என்ன வெந்தழலை மூட்டியதோ? தன்னை அடக்கி ஆளும் தடைகளை மீறிச் சற்று வெளியே தான் விரும்பிய இடத்துக்கு செல்ல அவள் சிறகு அடித்துக் கொண்டதோ என்னவோ?'' என சுந்தரம் வருவான் என்று எதிர்பார்த்து காத்திருந்த உஷாவின் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளை காவிய நயத்துடன் வடிக்கிறார் த.நா.கு.

குறுக்குச் சுவரின் உச்சக் கட்டத்தினை, வெளி உலகச் சம்பவங்களாகவோ, நிகழ்ச்சிகளாகவோ, இல்லாமல், சுந்தரத்தின் மனதில் புரையோடி இருந்த எண்ண வெளிப்பாடாக அமைத்துள்ளார். டைபாயிடு ஜுரவேகத்தில் சுந்தரத்தின் பிதற்றலில், இறக்கைகளைத் தீய்த்துக் கொண்ட ஆண் புறாவின் அழுகையை கேட்க முடிகிறது. வெளில் அமைதியான மார்கழி மாதத்து இரவின் சூழல், சுந்தரத்தின் உள்ளத்தில் ஊழியின் தாண்டவம். முற்றிலும் உள இயல் தளத்திலேயே கதையின் போக்கினை இந்த இடத்தில் அமைத்துள்ளார் ஆசிரியர்.

''குப்புசாமியின் வீட்டின் உட்புறத்தில் ஓர் அறை. மங்கலாக எரியும் அரிக்கேன் விளக்கு. அம்மணியும் குப்புசாமியும் சற்றைக் கொருதரம் தூக்கி போடும் சுந்தரத்தின் உடலை அழுத்திக் கொண்டிருந்தனர். வெறித்த நோக்குடன் அவன் எழுந்து ஓட யத்தனிக்கிறான், டைபாயிடின் மூன்றாவது வாரம் ...ஜன்னி அவனுக்குக் கண்டிருக்கிறது. பற்களால் கடித்துக் கொள்வதால் உதடுகளில் ஒரே ரத்த வளர்வு- ''அதோ என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள்...'' என்றதும் சட்டென ஓய்ந்து போய்விடுகிறது அவன் உடல். மறுபடியும் நெம்பி எழுந்திருக்கப் பார்க்கிறான். அவனைக் கட்டிப் பிடிக்க அம்மணியால் முடியவில்லை. இதுவைர அவன் பக்கத்திலேயே இருந்து விட்டு சற்று கண்ணயரச் சென்ற கணவரை அவள், ''சீக்கிரம் வாங்கோ... இவன் இப்படி ஓடுகிறானே'' என்றதும் குப்புசாமி தரையில தடுக்கி விழுந்து கொண்டே வருகிறார். கண்களில் ஒளியே இராமல் எங்கோ நிலைத்த பார்வையுடன் இடிஇடியென்று சிரித்து அவன் பாட ஆரம்பித்து விடுகிறான்.

*மங்கியதோர் நிலவினிலே*
*கனவில் இது கண்டேன்*
*வயது பதினாறு இருக்கும்*
*இளவயது மங்கை,*
*துங்கமணி மின்போலும வடிவத்தவள் வந்து*
*தூங்காதே, எழுந்து என்னைப்*
*பார் என்று சொன்னாள்'*

அந்த மயக்க நிலையிலும் சற்று ஞாபகம் வருகிறது அவனுக்கு. வேதனையுடன் தன்னையே நோக்கும் தந்தையைப் பார்த்து அவன், ''ஏனப்பா... ஏன் அப்படிப் பார்க்கிறே, அதோ உஷா நிற்கிறாள்...'' என்கிறான்.

மறுபடியும சந்தரம் ஜன்னி வேகத்தில் எழுந்து உட்காகார்ந்து, ''அதோ பாரம்மா... உஷா திரும்பிவந்து என்னைக் கூப்பிடுகிறாள்'' என்றான், நிஜமாகத்தானோ என்று அம்மணி திரும்பி பார்த்தாள். யாருமில்லை இருண்ட வாசல் படிதான்.

சுந்தரம் மிண்டும், ''என்னை விடம்மா.. நான் போகிறேன், அதோ பார் உஷா...'' என்றதும உண்மையாகவே உஷா, கண்கள் கலங்க, அறை வாசற் படியில் நிற்பதை அம்மணி கண்டாள், இது உடன் நிகழ்ச்சியே தவிர வேறில்லை. சுந்தரம் காணும் உஷா, அவன் குழம்பிய மூளையில் தோன்றும மாயா ரூபந்தான்''

*(குறுக்குச் சுவர் பக்கம் 122, 124)*



''.........அவனையும் அறியாமல் அவன் கண்கள் மீண்டும எதிர்வீட்டை நாடின. நிமிஷத்துக்கு நிமிஷம் அந்த வீடு விண்ணை நோக்கி வளர்ந்தது. தனக்கும் உஷாவுக்கும் குறுக்கே நிற்பது போன்ற பிரமை. விம்மிக் கண்களை மூடிக் கொண்டான்.''

*(குறுக்குச் சுவர் பக்கம் 128)*

பிரபல எழுத்தாளர் நா. சிதம்பர சுப்பிரமணியன் குறுக்குச் சுவர் நவீனம் பற்றி இவ்வாறு கூறுகிறார்:

''உஷாவின் முன்பு பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ்ஸையும் சுந்தரத்தையும் நிறுத்தி,'' இதோ பார் உஷா இந்த அழகிய புருஷன் ஒரு கலெக்டர், இவனை மணம் செய்து கொள்கிறாயா? என்று கேட்டால் ''என் மனசுக்குப் பிடித்த சுந்தரத்தையே கல்யாணம் செய்துகொள்கிறேன் அப்பா,'' என்று அவள் சொல்லிவிடலாம். இருந்தாலும் ஏதோ, அவள் உள்ளத்தின் அடிப்பாதளத்தில் காதலுக்காக அந்தஸ்தையும்,செல்வாக்கையும் உதறித் தள்ளிவிட்டது சுட்டுக் கொண்டேயும் இருக்கலம். இப்படி அவளைத் திணறவைக்கும் இக்கட்டான சந்தர்ப்ப விஷேசமே, முக்கியமான குறுக்குச் சுவராக நிற்கிறது.

குமாரசாமியின் நடையிலே எப்போதுமே ஒரு கம்பீரம் உண்டு. அனால், இதில் கிராமக் சூழ்நிலைக்குத் தகுந்தார்போல் நடையில் எளிமையும், கிராம வழக்கில் எள்ள சொற்களும், நடைக்கு ஜீவனைத் தருகின்றன. சிக்கலில்லாத கதைப் போக்கு, தேவைக்கு அப்பாற்பட்ட வருணனையோ விஸ்தரிப்போ கிடையாது, கதையின் போக்கில் ஏற்படும் கால வளர்ச்சியைக் குறிக்கும் வகையில் நவராத்திரி, தீபாவளி, கார்த்திகை முதலிய பண்டிகைகளும் கதையில் பங்கு கொண்டு அந்த இரு உள்ளங்களின் கிளர்ச்சிக்கு உதவி நிற்கின்றன.

நாலைந்து பாத்திரங்களையே கையாண்டிருந்தாலும் அவர்களை உயிருடன் தீட்டியிருக்கிறார், ஆசிரியர். பெற்ற தாய்க்கு ஒரு படி மேலாகவே நிற்கும் மாற்றாந்தாய் அம்மணி, எல்லாவற்றிலும் எல்லோருடனும் கலந்து கொள்ளும் இலட்சிய கலெக்டர் பாலகிருஷ்ணன், ஆரம்பத்திலேயே தோன்றி மறைந்து ஒரு வார்த்தை மாத்திரம பேசி, அனுதாபத்தைக் கவரும் அஞ்சனா போன்ற பாத்திரங்கள் உயிருடன் தீட்டப் பட்டிருக்கின்றனர்''

*(குறுக்குச் சுவர் முதற்பதிப்பு முன்னுரை 1960).*

## வீட்டுப்புறா

ஆனந்த விகடனில் தொடராக வந்த 'வீட்டுப்புறா' குறுக்குச் சுவர் நவீனம் போல் இளம் உள்ளங்களின் வேட்கைகளை, ஆர்வங்களை எண்ண ஓட்டங்களை அடிப்படையாக வைத்து அமைந்தது. மீனு-பாபு ஆகிய இளம் உள்ளங்கள் இடையே பாசத்தில் தொடங்கி, நேசமாக மலர்ந்து, பின்னர் காதலாக வளர்ந்த அவர்களின் சிந்தனை ஓட்டத்தினை திறம்பட வருணித்துள்ளார் த.நா.கு. தன்னை வளர்த்தவர் தன் சொந்தக் தந்தையல்ல, என்ற உண்மை மீனுவுக்குத் திடீரெனத் தெரிய வரும்போது, பாசத்தோடு வளர்த்த தந்தையினும் மேலான மார்க்க பந்துவையும், தான் நேசம் கொண்ட பாபுவையும மறந்து, கிராமத்துப் பாதுகாப்பான சூழலையும் அன்புக்கு உரியவர்களையும் விட்டு விட்டு மீனு தன் அன்னைக்கு கொடுமைகள் இழைத்துப் பிரிந்து சென்ற தன் தந்தையைத தேடி, விவேகம் இல்லாமல்வேகத்துடன் வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். பரந்த உலகில் தெரிந்தவர்களுடனும், தெரியாதவர்களுடனும் பழகும் போது ஏற்படும் விசித்திர அனுபவங்கள் பலவற்றால் பாதிக்கப்பட்டு, இறுதியில் காணாமல் போன தன் காதலியைத் தேடி வந்த தன் உள்ளம் கவர்ந்த பாபுவினால், இக்கட்டான சூழ்நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டு அந்தத் தருணத்தில் பாபுவுடன் வந்த முதிய ஓவியர்தான் தன்னுடைய காணாமல் போன தந்தை என அறிந்து கொள்கிறாள்.

இந்த நவீனத்தில் மீனு ஒரு வித்தியாசமான பாத்திரப் படைப்பு. பாபு மீது அவளுக்கு அன்பு இருந்தாலும், அதை வெளிப்படையாக அவளிடம் கூறாமல் தன்னுடைய காதலை வெளிப்படுத்தாமல் இருக்கிறாள். மாறாக பாபு தன்னுடைய அன்பினை வெட்கத்தின் காரணமாக உள்ளத்திலேயே புதைத்து வைத்தான். காலம் கனிந்து வரும் என்று காத்திருந்தான். திடீரென தந்தையைத் தேடும் முயற்சியில் இறங்கி, வீட்டுப் புறாவாக இருந்த மீனு, வெளி உலகில் சிறகடித்துப் பல இடங்களுக்குப் செல்லும் பறவையாகி விட்டாள். பாபு, மலரிலும் நெல் வயல் ஆட்டத்திலும் வீட்டுப் பொருட்கள் எல்லாவற்றிலுமே மீனுவைத்தான் கண்டான். மீனு அங்கு இல்லாதபோது, பாபுவுக்கு அவள் ஈர்ப்பு அதிகமாகவே இருந்தது.

''நாளில் பெரும் பகுதியை வயல் வெளியிலேயே கழித்துவிடுவான். பகல் வேளைச் சாப்பாட்டிற்குக் கூட வீடு திரும்ப மாட்டான். பம்ப் தூம்பிலிருந்து குபு குபு வென்று கொட்டும் நீரோட்டத்தில் காலைத் துழாவிக் கொண்டே மறைந்து போன



மீனுவைக் குறித்துச் சிந்தனைச் செய்வான். நீரோட்டத்தின் சலசலப்பு அவள் கைகொட்டித் தன் பின்புறம் சிரிப்பது போல் தோன்றும். மேல் காற்றில் ஒரு புறமாக ஓய்யெனச் சாயும் அந்தக் கரும்புச் சோலை மீனுவின் ஓர் உடல் பாணியை ஒத்திருப்பது போல் தோன்றும அவன் கண்களுக்கு. அன்றொரு நாள் தூர்ந்துபோன கால்வாயின் சேற்றில் மீனு வைத்த காலடியின் குறி வெய்யிலில் உலர்ந்து கலையாமல் அப்படியே இருந்தது. அதை அழித்து யாரும் பாழாக்காமல் இருப்பதற்கு மண் வெட்டியில் ஓர் வரப்பைக் கோலி அணைபோட்டான்.

இதே போல், தந்தையைத் தேடும யாத்திரையில், ஈடுபட்டு தன்னுடைய பள்ளித் தோழி ரஞ்சனியின் இல்லத்தில் தங்கியபோது, ஒரு நாள் அவளைத தேடி பாபு வந்தபோது மீனுவுக்கு ஏற்பட்ட உள்ளக்கிளர்ச்சியைப் பார்ப்போம்:

''பாபு, ஊருக்குத் திரும்ப என் மனம் இடம் தரவில்லை... உனக்கு நான் எத்தனையோ விஷயங்களில் கடமைப்பட்டவள். என்னிடத்தில் நீ வைத்திருக்கும் அன்பு எத்தகையது என்று தெரியும். அதற்குத் தகுதியுடையவளா நான்? பாபு. – பாபு என்னை மறந்துவிடு நீ..'' என்றதும் மீனு தலையை கைமீது வைத்து உடல் குலுங்கத் துயரின் வேகத்தில் துழன்றாள்.

பாபு போய் ஐந்து நிமிடங்களுக்குமேல் ஆகியிருக்கும் திடுமென மனம் மாறி, அவனைப் பின் தொடர அவளுக்கு அவா தோன்றியது. தான் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதைக் கூட மறந்து அசடி, ''பாபு-பாபு நீ போகாதே பாபு ஊ..ஊ...'' என்று உரக்கக் கூவிக் கொண்டே மாடிப்படியில் இறங்கி ஓடும்போது, ரஞ்சனி அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

*(வீட்டுப்புறா பக்கம் 127-128)*

வீட்டுப் புறா நவீனத்தில், சில சம்பவங்கள் கல்கத்தா மற்றும் அதைச் சார்ந்த சிற்றூர்களில் நடைபெறுவதால், வங்க மண்ணின் கலை பண்பாடு இவற்றை சொல்லில் சித்திரமாக வரைந்துள்ளார்.

''குளம் குட்டைகள் நிரம்பிய வங்காளத்தின் இயற்கை வனப்பு வளைவான கோபுரமுடைய அந்நாட்டின் ஆலயங்கள்; ஓகார ஷகார உச்சரிப்புடைய அவர்களுடைய பேச்சு; மருளும் மானின் கண்கள் படைத்த வங்காள யுவதிகள்; கையில் எப்பொழுதும் உக்கா வைத்து புகைப்பிடிப்பவர்கள்; மலைபோல் பருத்து மூச்சு வாங்கும பாபுக்கள்;

வாரக் கடைசியானதால் உல்லாசமாக ஹார்மோனியம் தபலா வைத்துக் கொண்டு செல்லும் பிக்னிக் கோஷ்டியினர்; இவைபோல் இன்னும் எவ்வளவோ விந்தையானக் காட்சிகளை வழி நெடுகப் பார்த்துக் கொண்டே சென்றான் பாபு.

*(வீட்டுப் புறா (முதல்பதிப்பு) பக் 245, 246)*

த.நா. குமாரஸ்வாமியின் நாவல்கள் பற்றி படைப்பாசிரியரும், தற்கால தமிழ்ச்சிறுகதைகள் புதினங்கள் இவற்றின் ஆய்வுகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட சாயாவனம் கந்தசாமி இவ்வாறு கூறுகிறார்:

''மொழிபெயர்ப்பாளர் என்பதற்கு மேல் படைப்பு இலக்கியத்தில் சிறுகதையோடு நாவல்களையும் எழுதினார். அன்பின் எல்லை, குறுக்குச் சுவர், ஒட்டுச் செடி என்று அதன் பெயர்களையும் குறிப்பிட வேண்டும். சிறுகதையின் காவிய தொனியிலிருந்து ஓரளவுக்கு விலகி, யதார்த்தம் நடப்பு இயலைச் சார்ந்து நாவல்கள் இருந்தன என்பதையும் குறிப்பிட்டேயாகவேண்டும். அவர் விசேஷமான அக்கரையோடு தன் படைப்பின் மூலாதாரத்தையும், பின் புலன்களையும் தேர்வு செய்தார்''.

*(த.நா.கு சில குறிப்புக்கள் தமிழ் மணி-தினமணி ஜனவரி 91)*

# 4

# பாலம்

**(மொழி பெயர்புப் பணிகள்)**

த.நா. குமாரஸ்வாமியின் இலக்கிய பணிகளில், முக்கிய இடத்தை வகிப்பது அவருடைய மொழி பெயர்ப்புகள். 1930களில் தொடங்கிய அவருடைய மொழிபெயர்ப்புப் பணி 1980 வரை 50 ஆண்டு காலம் தொடர்ந்தது. ''ஒரு மொழியின் இலக்கியத்தில், புதிய கருத்துக்கள், புதிய உவமைகள், புதிய சொற்கள் புகுவதினாலேயே அம்மொழி வளர்ச்சியும் செம்மையும் பெறுகிறது. ஒரே வழியுடைய அறையில் இருந்தால் புழுங்கித்தான் போக வேண்டும். சுற்றுப்புறம் சாளரங்கள் இருந்தால்தான் நல்லன உள்ளே புகவும், நம்மைப் பற்றி பிறர் அறியவும் வழி ஏற்படுகிறது.'' *(எழுதுவது எப்படி?-மொழி பெயர்ப்பு த.நா.குமரஸ்வாமி பழனியப்பா பிரதர்ஸ் முதல் பதிப்பு 1969)* இத்தகைய இலக்கியக் கொள்கையைத் தன் மூச்சாகக் கொண்டு த.நா.கு. முதலில் அக்காலத்தில் இலக்கியத்தில் முன்னோடிகளாக விளங்கிய பங்கிம் சந்திரர், சரத் சந்திரர், ரவீந்திரர், தாரா சங்கர் ஆகியோருடைய நவீனங்களையும், சிறுகதைகளையும் தமிழில் வங்காள மொழி மூலத்திலிருந்தே பெயர்த்தார். த.நா.கு மொழி பெயர்க்கும் காலகட்டத்தில், பல வங்க நாவல்கள், ஹிந்தி மொழியிலிருந்தும் தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்டன. இருப்பினும் வங்க மொழியிலிருந்து செய்யப்பட்ட நேரடி மொழி பெயர்ப்புகளுக்கு, மக்களிடையே அதிக வரவேற்பு இருந்தன. 1930களில்

அலையன்ஸ், கலைமகள் காரியாலயம் இவ்விரு பதிப்பகங்களும் நூல் வடிவிலும், பத்திரிகைத் தொடராகவும், பங்கிமின் விஷவிருக்ஷம், கபாலகுண்டலா, ஆனந்த மடம் போன்ற நவீனங்களை வெளியிட்டன. சரத் சந்திரரின் நவீனங்களை மொழி பெயர்த்த அ.கி. ஜெயராமன் அவர்கள் த.நா.கு. வின் மொழி பெயர்ப்புகளைப் பற்றி கூறுகிறார்:

"என்னுடைய ஊரான குமார மங்கலத்திலிருந்து, ஆனந்த மடம் மொழி பெயர்ப்புத் தொடரை வாங்குவதற்காக அருகில் உள்ள ரயில்வே ஜங்ஷனுக்குச் செல்வேன்.. அக்காலத்தில் நானும் என்னுடைய நண்பர்களும் ஊர் குளத்தங்கரை அருகில் உள்ள மர நிழலில் அமர்ந்து ஒருவர் உரக்கப் படிக்க, மற்றவர்கள் அதை ஆர்வத்துடன் கேட்போம். அவருடைய மொழி பெயர்ப்பு, ஒரு நல்ல தமிழ்க் கதையைப் படிப்பது போல், அவ்வளவு இயற்கையாக இருக்கும். கதா பாத்திரங்களின் வங்காளிப் பெயர்கள்தான். அது ஒரு மொழி பெயர்ப்பு என்பதை நினைவூட்டும். இலக்கிய ஆர்வலர்கள், அலைய்ன்ஸ் பதிப்பகத்தார் அலுவலகத்துக்கு முன் கியூ வரிசையில் நின்று த.நா.கு வின் மொழி பெயர்ப்புக்களை வாங்கிச் செல்வர் அக்காலத்தில்..."

த.நா.கு. நாவல்களை மொழியாக்கம் செய்ததோடு மட்டுமில்லாமல், மூல ஆசிரியர் பற்றிய விளக்கமான குறிப்புக்களையும், பிற்சேர்க்கைகளையும் இணைத்து முழுமையான தகவல் தரும் வண்ணம் அமைத்தார். குறிப்பாக ஆனந்த மடத்தில் மொழி பெயர்ப்பு வெளியான காலத்தில், அதில் அமைந்த பங்கிமின் 'வந்தே மாதரம்', பாடல் அரசியல் கண்ணோட்டத்தில், ஒரு சில சாராரின் எதிர்ப்புக்கு உள்ளாகியது.

"பங்கிம் சந்திரருக்கு அமரத்துவம் வந்ததற்குக் காரணம் தேசீய உணர்ச்சி ததும்பும் நவீனமான இந்த ஆனந்த மடமே... இப்பேர்ப்பட்ட நவீனத்தை நாமும் மொழி பெயர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன், இப்பொழுது மூன்றாம் முறையாக என் சிற்றறிவுக்கு எட்டியவரை தமிழில் கொண்டு வரத் துணிந்தேன். இதில் எல்லா அத்தியாயங்களுக்கும் தலைப்புக்கள் கொடுத்திருக்கிறேன். அவை, பல தமிழ்ப் பெரியார்களும், பாரதியாரும் இயற்றிய பாடல்களிலிருந்து எடுத்தவையாகும்.

இப்போது மீண்டும் குருத்துவிட்டு வளரும் தேசாபிமானம், பங்கிம் சந்திரர் பாடிய 'வந்தே மாதர' கீதத்தில் இன்று



பிரதிபலிக்கின்றது. இந்த மகா கீதத்தையல்லவா சிலர் வெறுக்கின்றனர்."

*(ஆனந்த மடம்-த.நா.குவின் முகவுரை-முதல் பதிப்பு அலையன்ஸ் 1938)*

ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் தலைப்பாக தமிழ் மேற்கோள்களை, அந்தப் பகுதியில் வரும், கதைப் போக்கிற்கு பொருத்தமாக அளிக்கும் வழக்கத்தை, முதலில் தொடக்கிவைத்த பெருமை த.நா.கு வைச் சாரும்.

வங்காளத்தில் 18ஆம் நூற்றாண்டின், தொடக்கத்தில், மக்களுக்கும் கிழக்கு இந்திய கம்பெனியாருக்கும் இடையே நடைபெற்ற போர்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது ஆனந்த மடம். அக்கதையின் வரலாற்றுப் பின்னணியினை வாசகர்கள் முழுமையாக அறிந்துகொள்ள, வரலாற்றுச் சம்பவங்களைப் பற்றிய குறிப்புக்களையும், த.நா.கு பிற்சேர்க்கையாக இணைத்துள்ளார், இங்கே த.நா.கு வை நாம் ஒரு மொழி பெயர்ப்பாளராக மட்டும், காணாமல் ஒரு பதிப்பாசிரியராகவும் பார்க்கலாம். அக்காலத்தில் த.நா.குவின் மொழி பெயர்ப்புக்கள், பற்றி இலக்கிய இதழ்கள் அளித்துள்ள சில கருத்துக்களைக் காண்போம்:

"மொழிபெயர்ப்பு, கேவலம் உயிரற்ற மொழி பெயர்ப்பாக இராமல், மூலத்திலுள்ள நயத்தை அப்படியே கொணர்ந்திருக்கிறார். பங்கிம் சந்திரர் இதனைத் தமிழ் மொழியிலேயே எழுதியிருக்கக் கூடுமோ என்று எண்ணும் படியாக இஃது அமைந்திருக்கிறது..." *(ஜோதி)*

"முதல் நூலிலிருந்து நயத்தையும் அழகையும் வர்ணனையையும், இம்மொழி பெயர்ப்பில் இருப்பதைவிட அழகாக மொழி பெயர்க்க முடியாது" *(ஜயபாரதி)*

"கதை சுவாரஸ்யம் என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது... இலக்கிய மணம் கமழும்படி, இனிய நடையில், ரொம்ப அழகாக மூலத்திலிருந்து கொண்டு "அழகு தமிழில் பழகு தமிழில் அற்புதமாக மொழி பெயர்த்திருக்கிறார் த.நா. குமரசாமி. தாரா சங்கர், குமாரசாமி இருபெரும் சங்கமங்களில் தமிழுக்குப் புதுமையான நல்லதொரு நவீனம் கிடைத்திருக்கிறது"

*(ஆரோக்கிய நிகேதனம் பற்றி கல்கி (26.5.1976) இதழில்...)*

நடுத்தர வர்க்கத்தினரின், ஆசைகள், அவலங்கள், இன்பங்கள், ஏமாற்றங்கள் இவற்றை நல்ல நடையில் ஆங்கிலத்தில், சிறுகதைகளாகவும் குறு நாவல்களாகவும் புனைந்த கே.எஸ். வெங்கடரமணியின், Jatadharan and other stories, என்ற சிறுகதைத் தொகுப்பை, த.நா.கு. தமிழில் மொழி பெயர்த்தார். அந்த மொழி பெயர்ப்பை படித்துவிட்டு, கா.சி. வெங்கடரமணி த.நா.கு வைச் சந்தித்தார்.

''மொழி பெயர்ப்பினைக் கண்டேன். நான் மிகவும் வருத்தப்டுகிறேன்... என்று சொல்லி நிறுத்தினார். எனக்குச் உடம்பெல்லாம் ஜில்லென்று வியர்த்தது. சற்று நடுக்கத்துடன் தயங்கியபடி 'ஏதாவது தவறு செய்துவிட்டேனா? மன்னிக்கவும்' என்றேன் நான். கா.சி. வெங்கடரமணி, நான் இவ்வாறு கூறியதைக் கேட்டு, புன்னகைத்தவராய்.. ''இல்லை குமாரசாமி.. நான் சொல்லவந்தது என்னவென்றால்... உன் மொழி பெயர்ப்பை படித்தவுடன்... ஏன் நான் தமிழில் எழுதாமல், ஆங்கிலத்தில் எழுத்தாளன் ஆனேன் என்று வருத்தப்படுகிறேன்,'' என்று சொன்ன பிறகு, என்னைத தட்டிக் கொடுத்து, ''அருமையாக இருக்கிறது. என்னுடைய மற்ற கதைகளையும் முடிந்தால் தமிழில் நீ மொழி பெயர்ப்பு செய், என்றார்.''

*(த.நா.கு வின் டைரிக் குறிப்புக்கள்)*

குமாரசாமியின் மொழி பெயர்ப்புகளில் பெரும் பகுதி ரவீந்திரரின் நூல்களே. அன்னாருடைய கோரா, புயல் போன்ற நவீனங்களின் மொழி பெயர்ப்புக்கள், நல்ல வரவேற்பினைப் பெற்றன. ''வங்கமொழி நாவலாசிரியரான தார சங்கரின் ஆரோக்கிய நிகேதன், மாணிக் பந்தோபாத்யாவின் பொம்மலாட்டம் நாவலையும் மொழி பெயர்த்தார்... அதோடு வேறு பல நாவல்களையும் சிறு கதைகளையும் சொந்த ரசனையின் அடிப்படையில மொழி பெயர்த்தார். அவற்றில குறிப்பிட பட வேண்டிய நவீனங்கள் - மயூராட்சி, சந்துவீடு. டாகுர் நூற்றாண்டு விழாவின் போது, அவர் மொழிபெயர்த்த ஆரம்பகாலத்து டாகுர் படைப்புக்கள் பலவற்றையும் புதிய தொகுப்புக்களாக, சாகித்ய அகாதமி வெளியிட்டது. அத்தோடு புதிதாக டாகுர் கட்டுரைகள் பலவற்றையும் மொழி பெயர்த்தார்.

*''(த.நா.கு சில குறிப்புக்கள் சா. கந்தசாமி தினமணி (தமிழ்மணி) ஜனவரி 1991)*



இவரை 'டாகுர் மொழி பெயர்ப்பாளர்' என்று பொதுவாக இலக்கிய விமர்ச்சகர்கள் கருதினாலும், பாலாயி சந்திர முகோபாத்யாய, மாணிக் பானர்ஜி, சரண்தாஸ் கோஷ், சரோஜ் குமார் ராய்சௌதுரி போன்ற பல வங்க எழுத்தாளர்களையும், தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்தார் த.நா.கு.

டாகுரின் மொழி பெயர்ப்புகளில், அவருடைய கவிதைத் தொகுப்பினை, கவிதை நயம் கொண்ட வசன நடையில் மொழியாக்கம் செய்தார்.

''சிறுகதை, கட்டுரை, புதினம், நாடகம்இவற்றை மூலநூலுக்கு ஏற்ப, சிறிதும் வழுவாமல் நம் மொழியில் கொணர முடியும். ஆனால் கவிதைக்கு வரும்போதுதான் பெரும் பிரச்சனைக் குறுக்கிடுகிறது. முதலில் யாப்பு, தன் மொழியில் பாடும் பாவலனுக்கு, சொற்கட்டும் தானே வருகிறது. கருத்துக்கு இசைய சந்தம் விழுகிறது. அதே ஓசை நயத்துடனும், யாப்பு நடையுடன் மொழிபெயர்ப்பது எளிதன்று. அவ்வாறு அமையினும் வேறேதோபோல் ஒலிக்கும். இத்துறையில் வெற்றி கண்டதாகக் கூறுவது வெறும் அகம்பாவமேயாகும்... மூல ஆசிரியரினின் உவமைகளைச் சொல் மரபுகளை கூடிய மட்டும் உள்ளவாரே அமைத்தல் நல்லது. ஏற்ற தமிழ் மரபு அல்லது சொல்தொடர் இருந்தால் எடுத்துக் கொள்ளவும்.. என்னைப் பொறுத்தவரை கவிதைகளை நல்ல உரை நடையிலேயே தந்தால் அது கவிஞனின் கருத்துக்களை நன்கு தெளிவு படுத்தும்...'' எழுதுவது எப்படி? - மொழிபெயர்ப்பு-த.நா.கு. பழனியப்பா பிரதர்ஸ் 1969.) காட்டாக ரவீந்திரரின் ஸாகரிகா என்ற கவிதையை தமிழில் தந்துள்ளார் த.நா.கு. அதிலிருந்து சில வரிகள்.

*கதிர் நிலா காயும் அக்கவினார் வேளை*
*உண்டேன் நின் மதன் இன் மாமை.*
*அந்நாள் திமிர்ந்த தொய்யிற் கொடியும்,*
*விழைந்தே சூட்டிய பனிமலர்க் கண்ணியும்,*
*என்றும் போலவே இருந்தன நின் வயின்,*
*யாழுடன் மிடறும் சேர்ந்தே இழைத்த என்*
*சந்தக் கவிதைக் கேற்ப*
*நின் முருகாற் உடலும் வளைந்தது...*

மூல ஆசிரியரின் கவிதை நயத்தை, வசன நடையில், பழம் தமிழ் சொல்லாட்சியில் அளித்துள்ளது. அவருடைய மொழி பெயர்ப்பு புலமையை நமக்கு உணர்த்துகின்றது. ''ஒரு மொழி பெயர்ப்பாளனுக்கு மிகவும் தேவை பிற மொழி-தன்மொழி

இவற்றில் சிறந்த பயிற்சி, இரு மொழியின் நுணுக்கங்கள், மொழி சார்ந்த மக்களின் பண்பாடு இவற்றில் ஆழ்ந்த அறிவு அவசியம். ''மூல ஆசிரியரின் எழுத்தில், நடையில், உள்ளத்தில் துளைந்து வரக்கூடிய திறமை நிரம்ப இருந்ததால்தான் மொழி பெயர்ப்பில் ஓரளவுக்கு வெற்றி அடைய இயலும், வெறும் அகராதி, இலக்கணம் இவற்றின் துணைக்கொண்டு மொழி பெயர்த்து விடமுடியாது'' (எழுதுவது எப்படி? மொழிபெயர்ப்பு த.நா.கு) என மொழி பெயர்ப்பு முயற்சியாளர்களுக்கு ஆலோசனையும் எச்சரிக்கையையும் அளிக்கிறார். மூல ஆசிரியர் பயன்படுத்திய சொல்லை சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்தால் வரும் அவலத்தை நகைச் சுவையோடு விளக்குகிறார். '' 'ஜலகாபார்' என்றால் வங்காள மொழியில் 'சிற்றுண்டி' என்று அர்த்தம். இதை அறியாது சொல்லுக்குச் சொல்லாக ஜல, காபார் - தண்ணீரும், உணவும் என்று எப்படி மொழி பெயர்க்கமுடியும்?''.

*(எழுதுவது எப்படி? மொழி பெயர்ப்பு-1969)*

சில சமயம் மூல ஆசிரியரின் கருத்துக்களை சரியாக புரிந்து கொள்ளாமல், தவறாக சொற்களைத் தேர்ந்தெடுத்து மொழி பெயர்ப்பது, பெரும் தொல்லைகளையும் தவறான எண்ணத்தையும் உருவாக்கும். இக்கருத்தை ஒரு உதாரணத்துடன் விளக்குகிறார் த.நா.கு. ''காந்தியடிகள் குஜராத்தி மொழியில் எழுதிய 'ஸத்யநா ப்ரயோகோ' என்ற தமது சத்திய சோதனை என்ற நூலில், நிவேதிதா அம்மையாரைப் பற்றி நல்ல எண்ணத்தில் சொன்ன 'ஏபாயி பஹி தேஜ சே' என்றதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த திரு தேசாயி "A Volatile Woman என்று ஆக்கியது பெரிய விவாதத்தை அல்லலோ கிளறிவிட்டது.

"Volatile' என்ற சொல்லை உபயோகித்ததால், அவ்வம்மை யாரைப் பற்றித் தவறான கருத்தை உண்டு பண்ணிவிட்டது. பின்னர் இதற்காக காந்தியடிகள் மிகவும் வருந்தினாராம்"

*(எழுதுவது எப்படி-மொழி பெயர்ப்பு-பக்கம் 404)*

த.நா.கு மொழி பெயர்ப்புகளை, வெறும் சொல்லுக்கு சரியான பொருள்படி எழுதப்படும் சடங்காக செய்யாமல், பக்தியுடன் அதனை அணுகினார். ''சொந்தக் கதைகளை நான் உருவாக்கியபோது சொற்களைத் தேடித் திரிய வேண்டிய அவசியமே ஏற்படவில்லை எனக்கு. பருந்தும் அதன் நிழலும் போல அவை சிந்தனையின் அடிச்சுவட்டிலேயே வந்தன. ஆனால் நான்



மொழி பெயர்க்கும் போது இந்தச் சொற்கள் அடங்கிப் போகவில்லை. இங்கே விருப்பம்போல் சொல்லாட்சி செய்ய இயலாது. மூல நூலின் அடியொற்றித்தான் செல்ல வேண்டும். மூல ஆசிரியனையும், மொழி பெயர்ப்பாளனையும் ஓட்ட பந்தய வீரர்களுக்கு ஒப்பிடலாம். மூல ஆசிரியன் தளையில்லாமல் அழகாக ஓடமுடிகிறது. மொழி பெயர்ப்பாளனுக்கு காலில் தளை உண்டு. அந்தத் தளை இருப்பினும் அது தெரியாமலும் தடுக்கி விழாமலும், மூல ஆசிரியன் போல், லாகவமாக ஓடவேண்டியுள்ளது. அப்பொழுதுதான் அவன் வெற்றியாளனாக கருதப்படுவான் என்று ஒருமுறை என்னிடம் தன் மொழி பெயர்ப்பு அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் போது கூறினார் குமாரஸ்வாமி.

த.நா.கு கொண்டிருந்த நாட்டுப்பற்று, மற்றும் தேசியத் தலைவர்கள் பால் கொண்டிருந்த ஈடுபாடு, இவை அவரை காந்தி நூல்கள் சிலவற்றை தமிழில் மொழி பெயர்க்கத் தூண்டியது. காந்தி நூல்கள் மொழி பெயர்ப்பு குழுவில் பணியாற்றி சத்திய சோதனையின் சில பகுதிகளைத தமிழில் மொழி பெயர்த்தார். நேதாஜியின் இரு நூல்களை 'இளைஞன் கனவு', புதுவழி-தமிழாக்கம் செய்தார். காந்தி பல்வேறு சந்தர்பங்களில் வெளியிட்ட கருத்துக்களை இளைஞர்களுக்காக, தொகுத்து வெளியான, காந்திஜி உரையமுதம் என்ற நூலினையும் தமிழாக்கம் செய்தார்.

இதைத் தவிர சமஸ்கிருத மூலத்திலிருந்தே பல்லவ பேரரசன் மகேந்திரவர்மனின் *பகவத் அஜ்ஜுகம், மத்தவிலாசப் பிரகசனம்,* மற்றும் சாதவாகன மன்னன் தொகுத்த *காதாசப்தசதி* என்ற அகத்துறை சார்ந்த, சமஸ்கிருத மொழியின் ஒரு பிரிவான, பிராகிருதத்தில் அமைந்திருந்த, குறுங்கவிதைகள் சிலவற்றையும் தமிழில் மொழியாக்கம் செய்தார்.

''நாற்பது ஆண்டுகளுக்கு முன் என்று நினைக்கிறேன். மாமல்லபுரம் நாங்கள் சென்றோம். அன்று பௌர்ணமி என்னுடன் அமுதசுரபி ஆசிரியர் விக்ரமன், த.நா.கு, பல்லவ சிற்பங்களைப் பார்த்துவிட்டு மாலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு, அர்ஜுனன் தபஸ் அருகில் இருக்கும் கிருஷ்ண மண்டபத்துக்கு வந்து அமர்ந்தோம். இலக்கியச் சுவையில் தோயவேண்டும் என்று விரும்பிய நான், த.நா.குமாரசாமியைப் பேச்சுக்கு இழுத்தேன். பல்லவ மன்னன் மகேந்திரனைப் பற்றிய பல ரசமான சம்பவங்களைச் சொன்னார். பிறகு துணிப்பையிலிருந்து

மத்தவிலாச பிரகசனத்தை எடுத்து சமஸ்கிருதத்தில் கம்பீரமாகப் படித்து, அதன் பொருளையும் தமிழில் விளக்கினார். என்னிடம் நல்ல ஒலிப்பதிவு கருவி இல்லேயே என்று அன்று வருந்தினேன். நாடகத் தன்மையுடன் அவர் தமிழாக்கம் செய்தது என்னை மிகவும் கவர்ந்தது. 3 மணி நேரம் எவ்வாறு சென்றது என்று எனக்குத் தெரியவில்லை. அன்று பௌர்ணமி நிலவில், கிருஷ்ண மண்டபத்தில் அரங்கேறியது மத்தவிலாசப் பிரகசனத்தின் தமிழ்வடிவம். மகேந்திரவர்ம பல்லவனே கிருஷ்ண மண்டபத்தின் தூண் அருகே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தது போன்ற மருள் எனக்கு அப்போது ஏற்பட்டது." (அமுத சுரபி இதழில் 1950களில் ஓவியராகப் பணியாற்றிய, த.நா.குவின் நெருங்கிய நண்பர், சுபா அவர்கள் அளித்த குறிப்பு) அந்த நாடகத்தின் மொழி பெயர்ப்பு பின்னர் அமுதசுரபி இதழில் வெளிவந்தது.

இந்திய இயல் வல்லுனர் ஆனந்த கெண்டிஷ், குமாரசாமியின் 'கோதம புத்தர்' என்ற ஆய்வு நூலினையும், வாழ்க்கை - இந்தமத நோக்கு, டாக்டர்.எஸ். ராதகிருஷ்ணன் அவர்கள் எழுதிய (Hindu View of Life) என்ற நூலினையும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்தார் த.நா.கு. ஆனந்த குமாரசாமியின் நூலினை ஆங்கிலத்திலிருந்து மொழியாக்கம் செய்வதற்கு முன், சமஸ்கிருத மொழியின் தங்கை, என்று மொழி இயல் வல்லுனர்கள் கருதிய பாலிமொழியை, ஒராண்டு காலத்தில் கற்று பௌத்தம் தொடர்பான மேற்கோள்களை பாலி மொழியிலிருந்தே மொழியாக்கம் செய்யும் பொருட்டு ஆழ்ந்து படித்தார். மொழி பெயர்ப்பில் எந்த வகையிலும் கருத்துப் பிழை ஏற்படக் கூடாது என்ற முன் எச்சரிக்கையுடன், மேலோட்டமாக நுனிப்புல் மேய்வதுபோல் இல்லாமல், ஆழ்ந்தே மொழி பெயர்ப்பில் ஈடுபட்டார்.

"இரு மொழிப் புலவர்கள், தாமும் இன்பம் கண்டு, பிறரும் அதைக் காண வகை செய்கின்றனர்" (த்விபாஷா பிக்ஷுவத் வித்யாத் உபௌ லௌகிக் வைதிகௌ) என்று பல நூற்றாண்டுகளுக்கு முன், வடமொழி இலக்கியப் பெரியாரான வித்யாரண்யர் கூறியது, வங்க மொழிக்கும் தமிழுக்கும் இலக்கிய பாலமாக திகழ்ந்த மொழி பெயர்ப்பாளர் த.நா. குமாரஸ்வாமிக்கு மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது என்பதிலும் ஐயம் இருக்கமுடியாது!

# 5
# தோப்பினுள் தனிமரம்

"மார்க்கபந்து நல்ல கலாரசிகர், இலக்கியப்பித்தர். அருமையான நூல்கள் அவருடைய புத்தக சாலையில் இருந்தன. மொழிவெறி இல்லாதவர். மேல் தோலியைப் பற்றி ஆராய மாட்டார். சுளைதான் வேண்டும் அவருக்கு.. ஐரோப்பிய இசையை அதிகமாகக் கேட்பார். கர்நாடக சங்கீதத்தில் மேல்நாட்டு இசை நுணுக்கங்களை பரீட்சை செய்ய வேண்டும் என்ற அவா... இதைக் குறித்து எவ்வளவு ஆராய்ச்சி செய்து இருக்கிறார்... ஆனால் இதையெல்லாம் உலகம் அறியுமா? அவருடைய வித்தையெல்லாம் குடத்தினுள் விளக்குதான்"

வீட்டுப்புறா புதினத்தில், த.நா.கு, மார்க்கபந்து என்ற பாத்திரத்தைப் பற்றி வனைந்த சொல் ஓவியம். மார்க்கபந்து என்று பெயருக்கு பதிலாக, அங்கே அந்த இடத்தில் த.நா.கு என்று போட்டிருந்தால் அவருக்கே அது மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கும்! வாழ்வின் பல நுணுக்கங்களை, ஆழ்ந்த அறிவின் மூலமாகவும், ஆர்வத்தின் உந்துதலினாலும், ஆய்ந்து அறிந்து சேர்த்துக்கொண்ட அனுபவங்களை அவருடைய புதினங்களிலும், சிறுகதைகளிலும், கதைமாந்தர்கள் மூலமாகவும், சம்பவங்கள் மூலமாகவும் வெளிப்படுத்தியுள்ளார். வெளி உலகுக்கு தன்னுடைய திறமைகளை வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்ளாதவர். சுயவிளம்பரத்தை விரும்பாதவர். இலக்கியம், வரலாறு, மனித இயல்புகள் இவை குறித்து நூல்கள்

மூலமாகவும்,நடைமுறை அனுபவங்கள் வாயிலாகவும் தான் அறிந்த செய்திகளை வகைப்படுத்தி, தருக்க ரீதியாக, நாடு, மதம், இனம் மொழி இவற்றின் சார்போ, பாதிப்போ இல்லாமல், பொது நோக்குடன் அணுகும் மனப்பாங்கு அவரை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியது. சொந்த வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும், சுய கட்டுப்பாடுகளையும், கோட்பாடுகளையும் வைத்துக் கொண்டவர். இலக்கியம், கலை இவை குறித்த பேச்சுக்கள்தான் எப்பொழுதும் அவரிடம். மற்றவர்களைப் பற்றிய தேவையற்ற பேச்சுக்கள் விமர்சனங்கள் இவற்றிலிருந்து தன்னை அன்னியப்படுத்திக் கொள்வார்.

"அவருடன் பேசிய இரண்டு மணி நேரம், எனக்கு இரு ஆன்மாக்களின் கலந்துரையாடல் போல் இருந்தது. பாடிகிராமத்தில் அவருடைய இல்லத்தில முனிவர்போல் வாழ்க்கை நடத்தினார். பழகுவதற்கு குழந்தை போன்றவர்"

*(த.நா.கு நினைவாஞ்சலி அகில இந்திய வானொலி (சென்னை) திறனாய்வாளர் டாக்டர். எம்.ஆர். ரங்கராஜன் 'ராஜரங்கன்' அவர்களுடைய உரையிலிருந்து.)*

இயற்கை எழிலுடன் தன்னை அவ்வப்போது ஐக்கியப் படுத்திக் கொள்வார். மனதில் கவலையின் கோடுகள் தோன்றும் போது அதை சரி செய்து கொள்வதற்கு இயற்கையிடம் தஞ்சம் புகுந்துவிடுவார். "என்னுடைய எண்ணக் குமுறல்களை, துயரச் சுமைகளை, எனக்குப் பிடித்த பபல்நியா மரத்திடமோ, வைரக் கம்மல்கள் போல் வாசனைப் பூக்களை உதிர்க்கும் மகிழ மரத்திடமோ, கிணற்றங்கரையில் இருக்கும் பன்னீர் மரத்திடமோ சொல்லுவேன்.. எனக்கு மறுமொழி பகராவிட்டாலும், இயற்கையின் பிரதிநிதிகளான அவை என்னைத் தேற்றியதை பலமுறை என் உள் மனதில் உணர்ந்துள்ளேன்."

*(த.நா.குவின் டைரிக் குறிப்புக்கள்)*

இயற்கை மீது அவர் கொண்ட அன்பினை அவருடைய எழுத்துக்களில் பரக்கக் காணலாம். தன் சொந்த கிராமமான தண்டலத்தின் மேலும், அவருடைய தந்தையாரின் பழைய வீட்டின் மேலும் அவருக்கு ஆழ்ந்த பற்று இருந்தது. குடும்பச் சிக்கல்கள் தீர்ந்த பிறகு பல ஆண்டுகள் கழித்து, அவருடைய தந்தையார் விட்டுச் சென்ற அருமையான நூல்களில் சிலவே அவருக்குக் கிடைத்தன, அன்னாருடைய கிராம இல்லத்தில். "வாசல் பக்கத்து அறையைப் பார்க்க அதன் கதவைத் திறந்தேன். உட்புறம் காரை



பொபொலவென்று உதிர்ந்தது. அப்பா உபயோகித்த பழங்காலத்துப் பெரிய கட்டில் மீது உள்ள மெத்தை திண்டுகளிலிருந்து, பஞ்செல்லாம் பிதுங்கி வெளியே கொட்டிக் கிடந்தன. அப்பாவின் புத்தகங்கள் உள்ள சுவரோடு புதைத்த அலமாரியைத் திறந்தேன். ஐயோ! இதென்ன செல் தின்று மணலாக இருந்தது... எவ்வளவு அருமையாக அவர் திரட்டிய அறிவுக் களஞ்சியம்... அம்மா! என்ன வாசனை! எனக்குப் பிடித்த ஒரு வாசனை! எத்தனை வருஷமாகிறது அந்த மரம் இன்னுமா பூக்கிறது? இந்த மணத்துடன் கூடிய இன்பச் சிலிர்ப்பு என்னுள் எழுந்தது..."

*(த.நா.குவின் சிறுகதை 'பழைய வீடு' கலைமகள் நவம்பர் 1958)*

முன்னர் படித்த பழைய நூலாகவும் இருக்கலாம், புதிய நூலாகவும் இருக்கலாம், அது கிடைத்து உடன், 'பசி நோக்காது' கண்துஞ்சாது' படித்து முடித்த பிறகுதான் அவருக்குத் தன்னைச் சுற்றிய உலகு புரியும், தான் துய்த்த இன்பத்தை மற்றவர்களும் நுகர விரும்பினார்.

"த.நா. குமாரசாமி ஒரு புத்தகப் பிரியர். படிப்பதில் அவருக்கு நல்ல ருசி இருந்தது. அந்தப் படிப்பை அவர் திறந்த மனதோடு மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வார். அவர் நிறைய புத்தகங்களைப் படித்தார் என்பதுபோலவே நிறைய புத்தகங்களையும் சேர்த்துவைத்துக் கொண்டிருந்தார். அவர் புத்தகங்களுக்கு அட்டைபோட்டு பெயர் எழுதி கையெழுத்துப் போட்டு தேதியும் குறித்து வைத்தார். அதோடு அவர் படிக்கும் போது நிறைய குறிப்புக்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகத்திலேயே எழுதினார். புத்தகத்தை படிப்பதில் இருந்த ஆர்வம் அவருக்குப் புத்தகங்களைப் பிறருக்கு கொடுப்பதிலும் இருந்தது. அவர் நந்தனம் வீட்டிலிருந்து இரண்டுமாடி இறங்கி, இரண்டு மாடி ஏறிவந்து என்னிடம் பல புத்தகங்களைப் படிக்கக் கொடுத்து இருக்கிறார்"

*(த.நா.கு. சில குறிப்புக்கள் சா. கந்தசாமி தமிழ்மணி தினமணி இணைப்பு ஜனவரி 12, 1991*

பல ஆண்டுகளுக்குப் பிறகும், தான் படித்த நூலில் உள்ள முக்கிய பகுதிகளை குறித்துவைத்த விளக்கக் குறிப்புக்கள் எந்த எந்த பக்கத்தில் உள்ளன என்பனவற்றை துல்லியமாகக் கூறுவார். ஆர்வமிகுதியால் ஏற்பட்ட சிறந்த நினைவாற்றல். அதுமட்டுமல்லாமல் குறிப்புக்களுக்குச் சார்புடைய வேறு செய்திகள் மற்ற எந்த எந்த நூல்களில் உள்ளன போன்ற தகவல்களை தன் விரல்

நுனியில் எப்போதும் வைத்திருந்தார். எந்தக் கருத்தையும் தகுந்த ஆதாரம் கிடைத்த பின்னர்தான் எழுதுவார் வெளியிடுவார். எந்த செயலையும் செவ்வனே செய்ய வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர். கடனுக்காக எழுதுவது என்பது அவருக்குக் கட்டோடு பிடிக்காது. எழுதும் பொருள் பற்றி முழு ஈடுபாடு இருந்தால் ஒழிய, காகிதத்தை அவருடைய பேனா முனை தொடாது. பொருள் தேவை இருந்தபோதும் கூட, பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கில் தன்னுடைய எழுத்தை வாணிபமாக்கியதில்லை த.நா.கு. "பிரசுரம் பற்றி அவர் அதிகமாகக் கவலைப்பட்டதே இல்லை. அதன் காரணமாகவே அவர் சிறுகதைகள் பலவும் பத்திரிகைகளில் வந்திருந்தாலும், இன்றும் புத்தகமாகமல் இருக்கின்றன"

*(த.நா.கு சில குறிப்புக்கள் சா. கந்தசாமி தமிழ்மணி (தினமணி இணைப்பு) ஜனவரி 12, 1991)*

பல இளம் எழுத்தாளர்களையும், மொழிபெயர்பாளர்களையும், போட்டி மனப்பான்மையோ, பொறாமை உணர்வோ இல்லாமல் ஊக்கி வைத்தார். ரங்கநாத ஆத்திரேயன், குமுதினி போன்ற மொழி பெயர்ப்பாளர்களை வங்க மொழியிலிருந்து நூல்களை மொழி பெயர்க்க ஊக்கி உதவியுள்ளார்.

"என்னுடைய, சரத் சந்திரரின் தேவதாஸ் நவீனத்தின் மொழி பெயர்ப்பினைப் படித்துவிட்டு த.நா.கு. அருமையாக மொழி பெயர்த்து இருக்கிறாய்... சரத் சந்திரரின் நூல்களை இனிமேல் நீயே மொழி பெயர்ப்பு செய்... நான் ரவீந்திரரின் நூல்களை மொழி பெயர்க்கிறேன்... அவ்வாறு என்னிடம் சொன்ன பிறகு சரத் நூல்களை அவர் மொழி பெயர்ப்புக்கு எடுத்துக் கொள்ளவே இல்லை... மற்றவர்களும் எழுத்துத் துறையில் வளரவேண்டும் என்ற பரந்த நோக்குடைய ஒருவரை காண்பது அரிது."

*(த.நா.கு. நினைவு அஞ்சலி 18/9/1982 - அ.கி. ஜெயராமனின் உரை, ஆல் இந்திய ரேடியோ சென்னை நிலைய ஒலிபரப்பிலிருந்து)*

தான் கற்ற வங்க மொழியின் நுணுக்கங்களை கள்ளம் கபடம் இல்லாமல், தன்னுடைய சகோதரர் த.நா. சேனாபதிக்கு கற்பித்து, மொழி பெயர்ப்பு பணியில் அவரை தீவிரமாக ஈடுபடுத்தினார். 1947-இல் 'விருந்து' என்ற தலைப்பில் பல சுவை தமிழ் மாத இதழினைத் துவக்கினார்.



"நம் இஷ்டம்போல் பத்திரிகை ஒன்றைக் கொண்டுவருவதற்கு காகிதம் ஏது? அச்சகங்களிலோ சௌகரியக் குறைவு. இன்னும் எவ்வளவோ பிரதி கூலங்கள் எனினும் எங்கள் 'விருந்தை'த் தமிழ் அன்பர்களுக்கு இன்பம் தரும் வண்ணம் சிறந்த எழுத்தாளர்களின் இலக்கிய தினுசுகளுடன் இதோ வைக்கிறோம் என்று 'பொற்கலாடத்தை' தமிழ் இலக்கிய ரசிகர்கள் முன் வைத்தார். முதல் இதழில் ஆசிரியர் த.நா.கு கூறிய 'பிரதிகூலங்கள்', 'விருந்து' தொடர்ந்து அளிக்கத் தடையாக நின்றன. 1940களில் இருந்த பத்திரிகைத் தாள் பற்றாக்குறையினாலும், பொருளாதாரத் தட்டுப்பாட்டினாலும் அவருடைய பத்திரிகை வெளியீட்டு முயற்சி இடையிலேயே நின்றது. "என்னுடைய அந்த முயற்சியால், என் மனைவியின் இருபது சவரன் நகைக்குக் கேடு வந்தது. என்னுடைய இலக்கிய ஆர்வம் என் கண்களை மறைக்க, வாணிப யதார்த்தம் என் கண்களுக்கு தெளிவாகவில்லை"(த.நா.குவின் டைரிக் குறிப்புக்கள்) இலக்கிய ஆர்வத்துடன் இசை ஆர்வமும் சேர்ந்து கொண்டது. நாதஸ்வர மேதை ராஜரத்தினம் பிள்ளையின் வாசிப்பில் இளமையில் மனத்தைப் பறிகொடுத்தது, நாதஸ்வரம் கற்க த.நா.கு வைத் தூண்டியது, "கிராமபோன் இசைத் தட்டுகளிலிருந்து. நாதஸ்வர மேதைகளின் வாசிப்பின் நுணுக்கங்களை அறிந்துகொண்டு, இளங்காலைப் பொழுதில், மகிழ மரத்தடியில் பனிதோய்ந்து ஈரம் படிந்த கடப்பைகல் திண்ணையில் அமர்ந்து நாதஸ்வர சாதகம் செய்வேன். வங்க மொழியைக் கற்றதுபோல், நாதஸ்வர வாசிப்பும் நானே கற்றுக்கொண்டதுதான். என்னுடைய கிராமத்து சிவன் கோயிலில்தான் என் முதல் வாசிப்பு... எவ்வளவு நேரம் வாசித்திருப்பேனோ தெரியாது... கோயில் கதவுகளை மூடும் ஒலிவரும் போதுதான் என் இசைத்தியானம் கலைந்தது. பிறகு கோட்டு வாத்தியமும் பயின்றேன்... என்னுடைய எட்டு வயது மகன் நிமாயி, இறக்கும் தருவாயில் அவனுடைய உடல் வேதனையைக், மறப்பதற்காக 'நகுமோமோ' வாசிக்க என்னை வேண்டினான். நான் மன வேதனையுடன் மிகவும் சிரமப்பட்டு வாசித்தேன். இசையைக் கேட்டுக் கொண்டே மெல்லக் கண்களை மூடினான். அவனுடைய கடைசி வேண்டுகோளை நிறைவேற்றிய பிறகு வாத்தியத்தின் கம்பியும் அறுந்தது. அதன் பின் நான் வாத்தியத்தைத் தொடவே இல்லை...

*(த.நா.கு. டைரிக் குறிப்புக்கள்)*

நாட்டுப் பற்றுடன், சமுதாயத்தில் நலிந்தவர்கள் பாலும், த.நா.கு மனமிரங்கினார். பாடி கிராமத்தில் தனக்குச் சொந்தமான நிலத்திலிருந்து ஒரு ஏக்கரை ஜாதிக் கலவரத்தால் வீடுகளை இழந்த ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வழங்கி, அவர்களுக்கு காந்திஜியின் கொள்கைகளை விளக்கி அகிம்சை முறையில், தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டத் தூண்டினார். ஊர்மக்கள் த.நா.கு வை "காந்தி ஐயர்" என்று அழைத்தனர். "சிவன் கோயில் பல்லக்கில் காந்திஜியின் படத்தைக் வைத்து ஊர்வலமாக ஊர் வீதிகளில் வலம் வந்த பிறகு, சேரிப்பகுதிகளுக்கும் செல்லவேண்டும் என்று வற்புறுத்தியபோது, ஜாதிக் கட்டுப்பாட்டை மீறி நாங்கள் வரமுடியாது என்று மேட்டுக் குடியினர் மறுத்தனர். நானும் என்னுடைய இரு சகோதரர்களும் மற்றும் ஒரு உறவினரும் பல்லக்கினைத் தூக்கி, ஆதி திராவிடர் வசித்த தெருவில் கொண்டு நிறுத்தினோம். அப்போது அந்த மக்களின் உள்ளத்தில் ஏற்பட்ட மட்டற்ற மகிழ்ச்சியை என்னால் உணர முடிந்தது."

*(த.நா.கு. டைரிக் குறிப்புக்கள்).*

கருத்துச் சுதந்திரத்துக்கும், சுயமரியாதைக்கும் முக்கிய இடத்தைக் கொடுத்தார், தனக்கும் மற்றவர்களுக்கும். "பலர் ஒரு காரியத்தைச் செய்தால் அது சரியானது என்று ஒத்துக் கொண்டு விட முடியாது அவரால். உள் மனதில் புடம் போட்டுப் பார்த்து ஆய்ந்து தெளிந்தே பிறகுதான் ஒரு செயலைச் செய்ய முற்படுவார். இந்த எண்ணப் போக்குதான் அவரை பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியது. இதனால், நியாயமாக அவருக்குக் கிடைத்த வாய்ப்புக்களைக் கூட அவரால் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போய்விட்டது".

*(த.நா.குவின் நண்பர் ஓவியர் சுபாவின் குறிப்புக்கள்)*

காந்திஜியின் கொள்கைகளில் உள்ள பற்றினாலும், நண்பர்களின் வற்புறுத்தலினாலும், காந்தி நினைவு அறக் கட்டளையின் சார்பில், அன்னாருடைய சத்திய சோதனையை மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட்டார். ஆசிரியக் குழுவின் தலைவருக்கும் அவருக்கும், ஒரு சொல்லினை மொழி பெயர்க்கும் போது ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால், நல்ல ஊதியம் தந்த பணியையும் உடனடியாகத் துறந்தார். செய்யும் தொழிலில் எந்தக் குறைபாடும் வரக் கூடாது. கருத்துக்களை உள்ளது உள்ளபடியே மொழி பெயர்க்கும் அதிகாரம் தான் நமக்கு உண்டே ஒழிய, நம் மனம் போனபடி மொழி பெயர்க்க உரிமைகிடையாது. இதனால்தான் அந்தக் காலத்தில் 500 ரூபாய் ஊதியம் தந்த ஒரு பணியையும் விட்டுவிட்டேன்" *(த.நா.குவின் டைரிக் குறிப்புக்கள்)* வாழ்வில் பல துறைகளில், அவருக்கு ஈடுபாடு இருந்தது. ஆன்மீகம், மனோதத்துவம் இவற்றில் ஆர்வம் இருந்தது. ஆதிசங்கரரின் நூல்களில் பொதிந்துள்ள உளவியல் கருத்துக்களை, தற்கால உள இயல் மேதைகளின் கருத்துக்களோடு ஒப்பிடுவார். த.நா.கு வை மிகவும் கவர்ந்தவர் உளவியல் நிபுணர் பிராய்ட். இந்த உள இயல் ஈடுபாட்டினை அவருடைய பல சிறு கதைகளிலும் நவீனங்களிலும் நாம் உணர இயலும்.



"ஆன்மீகம் மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்துவதற்காக ஏற்பட்டது. விலங்குத் தன்மை குறைந்து தத்துவ நிலையைப் பெரும்போது மனிதன் தெய்வ நிலைபெறுகிறான். எல்லா உயிர்களின் கடைசி புகலிடம் ஒரே ஒரு பரம்பொருளே. நம் நாட்டில், உலகில் பல தெய்வங்கள் இருந்தாலும், அதனுள் இருக்கும் ஒரே பரம்பொருள்தான் சத்தியம், நிரந்தரம். இதுதான் நம் வேதங்களின் சாரம்." என்று தாம் எழுதிய, இறைவழிபாட்டினை விளக்கும் நிறை சுவை கட்டுரைகள் உள்ள *ஞாயிறு புகழ்* என்ற நூலில் குறிப்பிடுகிறார் த.நா.கு. அவருடைய வழிபாடு உள்முகமானது. வெளியில் செய்யப்படும் பூஜைகள், மதச் சடங்குகளில் அவ்வளவாக அவர் ஆர்வம் காட்டவில்லை. "ஒவ்வொரு மனிதனும் தன் முயற்சியால், கடவுளை உணர்வது தான் சிறந்த வேள்வி" (ஞாயிறு புகழ்) என்பது அவர் கொண்ட கருத்து. வாழ்வின் பெரும் பகுதியை வறுமையிலும், பொருளாதாரப் பற்றாக் குறையிலுமே கழித்தார். அவருடைய சிந்தனை ஆற்றலை முடக்க அந்த வறுமையினால் முடியவில்லை. எளிமையுடன் 'வறுமையிலும் செம்மையாக' வாழ்ந்தார்.

எழுத்துக்களில் மட்டும் அவருடைய நடை, வழி, தனிப்பட்டது அல்ல. வாழ்விலும் அவர் சென்றது தனிவழியில் தான்.

"நீ செல்வது கல் முள் நிறைந்த பாதையாக இருக்கலாம். நீ கூப்பிட்டும் எவரும் உன்னுடன் வரவில்லை எனினும்... உன் பயணத்தை தனியே தொடர்வாய்...துணிந்து செல்.... தனியே செல்" என்ற கவி ரவீந்திரரின் பாடலின் எதிரொலிதானோ த.நா.குவின் வாழ்க்கை! அவர் வாழ்ந்தது எழுபத்து ஐந்து ஆண்டுகள். அதில் ஐம்பது ஆண்டுகள் முழுமையான இலக்கியத் தொண்டில் தன் வழியிலேயே ஈடுபட்ட அவர், தோப்பினுள் தனி மரமாகவே திகழ்ந்தார்.

## பின்னிணைப்புக்கள்

## (1) த.நா.கு.வின் நூல்கள்

### 1. சிறுகதைகள்

01. கன்யாகுமரி முதலிய கதைகள் (தமிழ் நாட்டுச் சிறுகதைகள், சென்னை அல்லயன்ஸ் கம்பெனி இரண்டாம் பதிப்பு, 1940.
02. சந்திர கிரகணம், கலைமகள் காரியாலயம், 1946.
03. நீலாம்பரி, அல்லையன்ஸ் கம்பெனி, 1954.
04. இக்கரையும் அக்கரையும், சென்னை, பழனியப்பா பிரதர்ஸ்.
05. கற்பவல்லி, சென்னை மங்கள நூலகம், இரண்டாம் பதிப்பு 1968.

### 2. புதினங்கள்.

01. விடுதலை, சென்னை அமுத நிலையம், முதற் பதிப்பு, 1940.
02. ஒட்டுச் செடி, சென்னை, மங்கள நூலகம், முதற் பதிப்பு, 1955.
03. குறுக்குச் சுவர், சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி, 1956.
04. வீட்டுப்புறா, சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி, 1961.
05. அன்பின் எல்லை, சென்னை, மங்கள நூலகம், 1958.
06. கானல் நீர், சென்னை, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம், 1970.



### 3. கட்டுரைகள்

01. ஞாயிறு புகழ் (ஆன்மீக, இறை வழிபாடு பற்றிய கட்டுரைகள்) மங்கள நூலகம், 1963.
02. ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர், சென்னை அல்லயன்ஸ் கம்பெனி, 1954.
03. இந்தியப் பெண்மையின் ஈடில்லாத் தன்மை - கே. ரங்கஸ்வாமி அய்யங்கார் நான்காம் நினைவுச் சொற்பொழிவு (வெளியீடு) நவம்பர் - 1977.

### 4. அகராதி

01. நடைமுறை தமிழ் அகராதி - சென்னை மங்கள நூலகம்.

## (2) மொழி பெயர்ப்பு

### அ. பங்கிம் சந்திரர் நூல்கள்

01. விஷ விருக்ஷம் சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி 1937.
02. ஆனந்த மடம் சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி 1938.
03. கிருஷ்ண காந்தன் உயில், சென்னை அல்லயன்ஸ், 1938.
04. மாதங்கினி, அல்லயன்ஸ், 1946.
05. கபால குண்டலா, சென்னை மங்கள நூலகம், இரண்டாம் பதிப்பு 1967.

### ஆ. சரத் சந்திரர் நூல்கள்

01. பைரவி, சென்னை கலைமகள் காரியலாயம் - 1941.
02. அமூல்யன், சென்னை அல்லயன்ஸ் கம்பெனி - 1941.
03. ஸௌதாமினி, சென்னை அல்லயன்ஸ் கம்பெனி – 1939.
04. மருமகள், சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி - 1942.

### இ. தாரா சங்கர் நூல்கள்

01. அக்கினி-சென்னை கலைமகள் காரியாலயம் - 1940.
02. கமலினி-சென்னை அல்லயன்ஸ் கம்பெனி - 1956.
03. கவி, புதுதில்லி நேஷனல் புக் டிரஸ்ட் 1972.

04. ஆரோக்கிய நிகேதனம், சாகித்ய அகாதெமி - 1972.

ஈ. ரவீந்திரநாத் டாகுர் நூல்கள்

01. புயல் (புதினம்) சென்னை மங்கள நூலகம், இரண்டாம் பதிப்பு 1955.

02. சதுரங்கம் (புதினம்), சென்னை மங்கள நூலகம் இரண்டாம் பதிப்பு - 1945.

03. ராஜகுமாரி விபா (புதினம்) சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி - 1955.

04. ராஜரிஷி (புதினம்) சென்னை மங்கள நூலகம் முதற் பதிப்பு - 1963.

05. கோரா (புதினம்) சென்னை மங்கள நூலகம், முதற்பதிப்பு 1956.

06. பூந்தோட்டம் (புதினம்), சென்னை, மங்கள நூலகம், இரண்டாம் பதிப்பு 1948.

07. இரு சகோதரிகள் (புதினம்) சென்னை கலைமகள் காரியாலயம், முதற் பதிப்பு - 1943.

08. லாவண்யா சென்னை, மங்கள நூலகம் - முதற் பதிப்பு 1963.

09. சிதைந்த கூடு (புதினம்) சென்னை மங்கள நூலகம், இரண்டாம் பதிப்பு - 1964.

10. மூவர் (புதினம்), சென்னை கலைமகள் காரியாலயம் 1947.

11. விநோதினி (புதினம்), புதுதில்லி, சாகித்திய அக்காதெமி - 1961.

12. காரும் கதிரும் (சிறுகதை) சென்னை, கலைமகள் காரியாலயம் - 1943.

13. கல்லின் வேட்கை (சிறுகதை) சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி 1944.

14. மானபங்கம் (சிறுகதை) சென்னை, கலைமகள் காரியாலயம் - 1949.

15. போஸ்ட் மாஸ்டர் (சிறுகதை) சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி.

16. பத்தினிப் பெண் (சிறுகதை) சென்னை, பாரதி பதிப்பகம் - 1962.



17. நெற்றிப்பொட்டு (சிறுகதை) சென்னை, பாரதி பதிப்பகம் - 1960.

18. வெற்றி (சிறுகதை) சென்னை, பழனியப்பா பிரதர்ஸ் - 1959.

19. டாகுர் சிறுகதைகள் - (இரண்டு தொகுதிகளில்), புதுதில்லி சாகித்திய அக்காதெமி - 1961, 1968.

20. முகுடம் (நாடகம்) சென்னை மங்கள நூலகம் - 1955.

21. நகைச் சுவை நாடகங்கள் (நாடகம்) சென்னை சதர்ன் லாங்குவேஜ் புக் டிரஸ்ட்.

22. நூற்றியொரு கவிதைகள் (கவிதை) சாகித்திய அக்காதெமி - 1961.

23. புலைச்சி (நாடகம்) சென்னை அருனோதயம் - 1941.

24. கட்டுரைத் தொகுதி (2 ஆம் பாகம்) சாகித்திய அக்காதெமி - 1965.

25. ஜாவா யாத்திரை (பயணக் கட்டுரைகள்) சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி - 1951.

26. ஜப்பான் பயணம் (பயணக் கட்டுரைகள்), சென்னை மங்கள நூலகம் 1952.

**மொழி பெயர்ப்பு நூல்கள்**
**(பிற வங்க மொழி ஆசிரியர்கள்)**

01. விளக்கும் விட்டிலும் (மூல ஆசிரியர் சரோஜ் குமார் ராய் சௌதுரி - புதினம்). சென்னை மங்கள நூலகம், 1945.

02. மயூராக்ஷி (மூல ஆசிரியர் சரோஜ் குமார் ராய் சௌதுரி, புதினம்) சென்னை, மங்கள நூலகம் - 1967.

03. பொம்மலாட்டம் (மூல ஆசிரியர் மாணிக் பானர்ஜி - புதினம்), புதுதில்லி, சாகித்திய அக்காதெமி -1962.

04. சந்து வீடு (மூல ஆசிரியர் ஸந்தோஷ் குமார் - புதினம்), சென்னை ஜோதி நிலையம் முதற் பதிப்பு - 1966.

05. மயூகன் (மூல ஆசிரியர் ராகால்தாஸ் பானர்ஜி - புதினம்) சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி - 1940.

06. துருவா (மூல ஆசிரியர், ராகால்தாஸ் பானர்ஜி - புதினம்) சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி - 1954.

07. சித்திரா (மூல ஆசிரியர், சரண்தாஸ் கோஷ், புதினம்) சென்னை, வேல் புத்தக நிலையம் - 1957.

08. கொஞ்ச நேரம் (மூல ஆசிரியர், பாலாயி சந்திர முகோபாத்தியாயா 'வனபுல்' - புதினம்) சென்னை மங்கள நூலகம், இரண்டாம் பதிப்பு - 1964.

09. யாத்ரிகன் (மூல ஆசிரியர், பிரபோத குமார் ஸான்யால் - பயண நூல்) சவுத் இந்தியன் லாங்குவேஜ் புக் டிரஸ்ட் 1961.

10. ரங்க மகல் (மூல ஆசிரியர், ஹரிஸாதன் முகோபாத்யாய - புதினம்) சென்னை, பூங்கொடி பதிப்பகம்.

11. காகிதப் படகு (மூன்று வங்க குறு நாவல்கள்), சென்னை மங்கள நூலகம் - 1940, 1942.

12. மால் கோஷ் (பல வங்க ஆசிரியர்களின் சிறுகதைகள் அடங்கிய தொகுதி) சென்னை, மங்கள நூலகம், இரண்டாம் பதிப்பு 1968.

13. இளைஞன் கனவு (மூல ஆசிரியர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் (கட்டுரைகள்) சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி 1939.

14. புதுவழி (மூல ஆசிரியர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், (கட்டுரைகள்) சென்னை அல்லயன்ஸ் கம்பெனி 1947.

### பிற மொழி பெயர்ப்பு நூல்கள்

01. காந்திஜியின் உரையமுதம் (மூல ஆசிரியர், மகாத்மா காந்தி கட்டுரைகள்) சென்னை, மங்கள நூலகம் 1964 (பல பதிப்புகள்)

02. பாபுஜியின் நினைவுக் கோவை (கட்டுரைகள் குஜராத்தி மூலம்) சென்னை, மங்கள நூலகம் - 1963.

03. காந்தி நூல் திரட்டு (2ஆவது பகுதி) 'அஹிம்சை' (காந்தி நினைவு வெளியீட்டுக் கழகம் - 1958.

04. வாழ்க்கை இந்து மத நோக்கு (ஆங்கிலம்-மூல ஆசிரியர் டாகடர் எஸ். ராதாகிருஷ்ணன்) சென்னை, வாசகர் வட்டம் 1966.

05. கோதம புத்தர் (ஆங்கிலம்-மூலம் ஆசிரியர் ஆனந்த குமாரசாமி) புதுதில்லி, நேஷனல் புக் டிரஸ்ட் 1967.



06. கிழக்கோடும் நதி (சீன நவீனம்- (ஆங்கிலத்திலிருந்து) மூல ஆசிரியர் நாங்குங்போ. மங்கள நூலகம் - 1965.

07. துர்லக் (செக்கோஸ்லோவாக்கிய கதை) (ஆங்கிலத்திலிருந்து) சர்வதேச கலைமலர், ஜோதி நிலையம் - 1945.

08. காதலர் (பர்மீயக் கதை) - சென்னை ஜோதி நிலையம் 1945.

09. ஜடாதரன் முதலிய கதைகள் (ஆங்கிலம் மூலம் கே.எஸ். வெங்கடரமணி), தமிழ் நாட்டுச் சிறுகதைகள்-பதினோறாவது தொகுதி, சென்னை, அல்லயன்ஸ் கம்பெனி, 1943.

## (3) த.நா.கு பற்றிய கட்டுரைகளும், குறிப்புக்களும்.

01. சா. கந்தசாமி, (த.நா.கு. சில குறிப்புக்கள் தினமணி இணைப்பு ஜனவரி - 12, 1991.

02. படித்திருக்கிறீர்களா? கன்யாகுமரி? க.நா. சுப்பிரமணியம், சுதேசமித்திரன் பிப்ரவரி 17, 1957).

03. முதலில் மலர்ந்தது, த.நா.கு - கலைமகள், மார்ச்சு 1976 பக்கம்-239.

04. தமிழ் இலக்கிய வரலாறு, மு. வரதராசன், சாகித்ய அகாதெமி, பக்கம் 311.

05. அண்ணல் அடிச்சுவட்டில்.. ஏ.கே. செட்டியார் - குமரிமலர்-1979 பக்கம் 24.

06. இந்திய இலக்கியம்-க.நா. சுப்பிரமணியன். கலைஞன் பதிப்பகம் 1984. பக்கம் 69.

07. எழுதுவது எப்படி? மகரம், பழனியப்பா பிரதர்ஸ் பக்கம் 403-412.

08. கல்கி(வார இதழ்) 1975 ஆகஸ்ட்டு 3-ந்தேதி) பக்கம் 43.

09. கிராம ஊழியன், மே 26 1944 - பக்கம் 13.